ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி" "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு" "நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—கூ. யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவஞு தைமீ உ௦உ (2-2-36) ஞாயிற்றுக்கிழமை பகுதி—உக.

### தோத்திரம்.

ஆரண மார்க்கத் தாகம வாசி அற்புத மாய்நடந் தருளுங்
காரண முணர்த்துங் கையும்நின் மெய்யுங் கண்கள்மூன் றுடையஎன் கண்ணே
பூரண அறிவிற் கண்டிலம் அதனாற் போற்றியிப் புந்தியோ டிருந்து
தாரணி யுள்ள மட்டுமே வணங்கத் தமியனேன் வேண்டிடத் தருமே.

—தாயுமானசுவாமிகள்.

விளம்பரம்

## பருத்தித்துறை, கரைச்சி, பூநகரி வாக்காளர்களுக்கு!

## பருத்தித்துறைப் பகுதிக்கு உங்கள் பிரதிநிதியாக



இலங்கைத் தமிழருள் முதன்மை பெற்றவரும் பல ஆண்டுகளாக இலங்கைச் சட்டசபையிலும், சட்ட நிருபண சபையிலும் அங்கத்தவராயிருந்தவரும், இலங்கை ஆயுள்வேத வைத்திய சபையின் தலைவரும், அரசினர் ஈட்டுவங்கி ஸ்தாபகரும், அதிகார சபை அங்கத்தவரும், சட்டநூல்வல்லுநரும், பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் விஞ்சிய ஞானம் படைத்தவரும், கல்வி அறிவாற்றல் முதலியவற்றில் தலைசிறந்தவரும், அரசினராலும் மற்றைய எல்லாச் சாகியத்தாராலும் நன்கு மதிக்கப்படுபவரும், சிறந்த தேசாபிமானியும், ஒப்பற்ற தலைவருமாகிய

## திரு. க. பாலசிங்கமவர்களையே

அன்புடன் தெரிவுசெய்யுங்கள்!

(73) 19-1-36.

# வடமராட்சியில் தேர்தற்கலகம்.

## அவமானத்தை யுண்டாக்கும் அடாதசெயல்கள்

## சண்டித்தனத்தால் வெற்றிகிடைக்குமா?

## 57 பகிரங்க விருந்துகள்.

### குலத்தைக் கெடுக்கும் கோடரிக்காம்புகள்

(விசேட நிருபர்.)

சென்ற சனிக்கிழமை பின்னேரத்துக்கும் ஞாயிற்றுக்கிழமை மத்தியானத்துக்குமிடையில் பருத்தித்துறை, வல்லுவெட்டித்துறை, உடுப்பிட்டி, தொண்டமானாறு, அல்வாய் ஆதியாமிடங்களில் திரு. பாலசிங்கமவர்களுக்கு உதவிபுரிந்து வந்தவர்கள் தாக்கப்பட்டனரெனவும் பல தொந்தரவுகளில் அகப்பட்டனரெனவும் அறியக்கிடக்கின்றது.

சென்ற ஞாயிற்றுக்கிழமை காலையில் அநேகர் திரு. பாலசிங்கமவர்களின் தெரிவுக்கந்தோரில் புகுந்து அங்கிருந்தவரை அடித்தனராம். இரண்டு பிரபலஸ்தர்கள் ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் காரில் செல்லும்போது மறித்து அடிக்கப்பட்டனராம். திரு. பாலசிங்கத்துக்கு உதவிபுரியும் பெரியார்களின் வீடுகளில் சிலர் புகுந்து கதிரைகள் கண்ணாடிகள் முதலியவைகளை அடித்து நொருக்கிப் பலவித நட்டங்கள் செய்தனராம்.

பிறக்டர் மகாலிங்கம் என்பவரின் கார்ச் சாரதியால் ஒரு அப்புக்காத்து திரு. பாலசிங்கத்தின் தெரிவுக் கந்தோருக்குப் போகும்போது தாக்கப்பட்டார். திரு. பாலசிங்கம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் தானத்துக்குச் சென்று பொலிசாரின் உதவிவேண்டிப் பருத்தித்துறையிலும் வல்லுவெட்டித்துறையிலும் இருமடங்கு பொலிஸ் உத்தியோகத்தரை நிற்பாட்டியிருக்கிறார்.

சென்ற திங்கட்கிழமை பருத்தித்துறைப் பொலிஸ்கோட்டில் ஒன்பது வழக்குகள் தொடரப்பட்டன. எதிரிகள்மீது 57விருந்துகள் பிறப்பிக்கப்பட்டு வழக்கு பெப்ரவரி 3-ந் தேதிக்கு தவணையிடப்பட்டது. பொலிஸ்படை வந்தபின்னும் திரு. பாலசிங்கத்துக்கு உதவிபுரிவோருக்குத் தொந்தரவுகள் ஏற்படக்கூடுமெனக் கருதப்படுகின்றது. நிகழவிருந்த இரு கூட்டங்கள் பின்போடப்பட்டன. சில நாட்களின்முன் பருத்தித்துறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கல்லெறியப்பட்டு இருவர் காயமடையப்பெற்று வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

ஆறுமுகம் கந்தசாமி அல்லது "ஹிட்லர்" இவருக்கு மாறுக 5பகிரங்க விருந்துகள் விடப்பட்டிருக்கின்றன.

ஷெயாரின் மோட்டார் சாரதி சின்னக்கண்டு: 3 விருந்துகள்.

வல்வெட்டித்துறை சோமசுந்தரம் சுந்தரலிங்கம் 3 விருந்துகள்.

ஆறுமும் பொன்னுத்துரை 3 விருந்துகள்.

தொண்டமானாறு சின்னப்பிள்ளை (மோட்டார்சாரதி) 2 விருந்துகள்.

வல்வெட்டித்துறை சின்னராசா (மோட்டார்சாரதிக்கு) 3 விருந்துகள்.

உடுப்பிட்டி முருகேசு 3 ,,

,, சுப்பிரமணியம் 3 ,,

தொண்டமானாறு இராமுப்பிள்ளை ஆறுமுகம் 2 விருந்துகள்

ஆறுமுகம் பெண் தங்கப்பிள்ளை ஐயாச்சாமியின் மனைவி

இவர்களிற் பின்னர்க் கூறப்பட் இருவரும் சிறையாய் இப்போது தனித்தனி 450 ரூபாய் பிணையில் விடப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

மற்றவர்கள் சாவகச்சேரிக்கோட்டில் சரண்புகுந்து விளக்கமறியலிலிருக்கின்றனர்.

தொண்டமானாற்றில் வசிக்கும் சின்னையா என்னும் இளைப்பாறியுள்ள ஓவசியர் ஒருவர் வீட்டிற் புகுந்து மேலே காட்டப்பட்டவர்களிற் சிலர், அவரை நையப் புடைத்து அவரது காலையும் முறித்தனர் என்று தெரிகிறது.

இவ்வக்கிரமங்களைச் செய்தனர் எனச் சொல்லப்படும் இவர்கள் ஸ்ரீ G. G. பொன்னம்பலத்தை ஆதரிப்பவர்களாம்.

இப்போது நேர்ந்துள்ள நெருக்கடியான நிலைமையை முன்னிட்டு, தொண்டமானாற்றிலும் ஓர் பொலிஸ் தானம் நிறுவப்பட்டிருக்கிறது.


வெளிவந்துவிட்டது!

திரு. வே. சிவக்கொழுந்து அவர்கள் இயற்றிய

புதிய தமிழ் ஏழாந்தரக் கணிதம்

ஜே. எஸ். ஸி., எஸ். எஸ். ஸி. வகுப்புகளுக்கும் உபயோகிக்கத்தக்கது.

கண்ணைக் கவரும் அழகிய பதிப்பு!

கருத்தைக் கவரும் உயரிய விளக்கம்!!

இதுபோன்ற ஒரு கணிதநூல் தமிழில் இதுவரையில் வெளிவந்ததேயில்லை.

பிரதி விலை ரூபா ஒன்று.

பிரபல புத்தக வியாபாரிகளிடம் பெறலாகும்.

Publishers :-

வட இலங்கா புத்தகசாலை, பருத்தித்துறை. (Point Pedro)

(64) 5-1-36.


# கொடுவாக்கத்தியால் 7 வெட்டு

## பஸ்வண்டிகள் மோதுண்டன.

மல்லாகம் 27.

மல்லாகம் பொலிஸ் கோட்டில் சென்ற மார்கழி மாதம் 2-ந் திகதியளவில் பெரியவிளான் வாசிகளாகிய முத்தையாவையும், முருகேசுவையும் கொடுவாக்கத்தியால் வெட்டிப் பாரதூரமான காயங்களை உண்டாக்கியதாக அவ்வூர் செல்லையா-கனகரத்தினத்திற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது காயமடைந்தவர்களுள் ஒருவராகிய வேலுப்பிள்ளை-முத்தையா கொடுத்த வாக்குமூலத்தின் சாராம்சம் வருமாறு:-

"சம்பவம் நடைபெற்ற வன்று H 1077-ம் பஸ்ஸைச் செலுத்திக்கொண்டு இளவாலைக்குப்போய் அங்குள்ள ஓர் ஒழுங்கையினுள் பஸ்ஸை விடுத்துத் திரும்பும்போது எனது பஸ்சுக்குப் பின்னாகவந்த எதிரியினுடையபஸ்சும் என்னுடைய பஸ்சும் மோதுண்டன. உடனே நான் பஸ்சினின்றும் இறங்கி "என் தம்பி உனது மச்சானின் பஸ்ஸை மோதினாய்" என்றேன். அப்போது எதிரி ஆலயப்பக்கமாக எங்கோபோய் வந்து, பஸ்சிலிருந்த கொடுவாட் கத்தியை எடுத்து எனது தலையில் வெட்டினார். நான் மயங்கிக் கீழே வீழ்ந்துவிட்டேன். மற்றைய காயங்கள் எப்படி உண்டாகியதென்று எனக்குத் தெரியாது."

அதன்பின்னர் கொண்டக்டராகவிருந்த கார்த்திகேசு-முருகேசு கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"பஸ்கள் இரண்டும் மோதுண்டதன்மேல் இருவரும் பஸ்களில் இருந்து இறங்கினார்கள். எதிரி எவ்விடமோபோய்த் திரும்பிவந்ததின்மேல் பஸ்சில் சீற்றுக்குக் கீழிருந்த கத்தியை எடுத்து முத்தையாவின் தலையில் பிடித்துக்கொண்டு பின்புறமாகநின்று வெட்டினார். இதனைக்கண்டு பயந்து நான் உடனே கேசவனது கடைக்கு ஓடினேன். என்னைக் கலைத்துக்கொண்டு வந்த எதிரி எனது தலையில் வெட்டினார். எல்லாமாக 7 வெட்டுகள் வெட்டினார். முதல்வெட்டு வீழ்ந்ததும் எனக்கு அறிவுமயங்கிவிட்டது. அப்பால் நடைபெற்றமை எனக்குத் தெரியாது."

அதன்பிறகு க. துரைசுவாமி சாட்சியங் கூறியதன்மேல் நீதிபதி வழக்கை வருகிற 3-ந் திகதிக்கெனத் தவணையிட்டார். ந. நி.

## பழையன கழிதலும் புதியன புகுதலும்

கொழும்பு "கனத்தை" சுடுகாட்டில் ஒருதடவையில் மூன்று பிணங்களைத் தகனஞ்செய்யவேண்டியதற்கு ஆகவேண்டிய வழிவகைகள் செய்யவேண்டுமென்ற பிரேரணை திரும்பவும் கொழும்பு நகரசங்கத்தாரால் எடுக்கப்பட்டது. சிலகாலத்திற்குமுன் இம்மனு இச்சங்கத்தாருக்குமுன் கொண்டுவரப்பட்டபொழுது அங்கத்தவர்கள் ஏகமனதினராய்ச் சம்மதம் கொடாதபடியால் அவ்வமயம் இது அங்கீகரிக்கப் படவில்லை. இம்முறையும் இந்துக்கள் இதற்குச் சம்மதப்படவில்லை. இந்துக்கள் இன்னோர் சுடலையை அமைக்குமாறு மனுக்கொடுத்திருக்கிறார்கள். இதற்கு அதிகபணம் செலவாகுமாகையால் நகரசங்கம் இம்மனுவை அங்கீகரிக்கமாட்டாது. ஆனால் இந்துக்கள் தாமாகவே தங்களுக்கென ஒரு சுடலையை அமைத்துக் கொள்வதற்குச் சங்கம் மறுக்கவும் மாட்டாதாம்.

## உபசரணைகள்

1

(அராலி வாணிவிலாச சபையார்)

அராலி வாணிவிலாசசபை ஆதரவில் 26-1-36 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் வட்டுக்கோட்டைக் கிராமச்சங்கத் தலைவர் திரு. சி. வேலுப்பிள்ளை அவர்களின் தலைமையில், அராலி அம்மன்கோவில் மண்டபத்தில் திரு. வை. துரைசுவாமி, பீ. ஏ., அவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பெற்றமைக்கு உபசரிக்கும் நோக்கத்துடன் ஒரு வரவேற்பு மகாநாடு நடைபெற்றது. கடித.

2

(சங்கானை ஐக்கிய நாணய நகர வங்கி அங்கத்தவர்கள்)

ஊர்காவற்றுறைக்கு அரசாங்கசபைப் பிரதிநிதியாய்ச் சர்வசம்மதமாகத் தெரிவு செய்யப்பெற்றிருக்கும் திரு. வை. துரைசுவாமி அவர்களுக்குச் சங்கானை ஐக்கிய நாணய நகர வங்கிக் கட்டடத்திலே ஷெ வங்கி அங்கத்தவர்களால் ஒரு உபசரணை நடாத்தப்பெற்றது. அத்தருணம் வங்கியின் உப அக்கிராசனராகிய திரு. எவ். ரீ. யோன் அவர்கள் மாலைசூட்டி உபசரித்தார். அப்பொழுது அவர் கூறியதாவது:—

சங்கானை ஐக்கிய நாணய நகர வங்கியின் அங்கத்தவர்களின்பேரால் இந்த மாலையைச் சூட்ட எனக்குக் கிடைத்த தருணத்துக்காகச் சந்தோஷப்படுகிறேன். ஆனால் நீங்கள் போட்டியில்லாமல் தெரிவுசெய்யப்பட்டமை அதிலும்பார்க்க நம்மனைவர்க்கும் மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. யாழ்ப்பாணத்தின் மறுபாகங்களிலுள்ளவர்களும் இந்த முன்மாதிரியைப் பின்பற்றுவார்களானால் நமது நாட்டுக்கு மிகுந்த இலாபமும் நன் மதிப்பும் உண்டாகுமென்பதற்குச் சந்தேகமில்லை. கடித.

## விநோதம்

அரசாங்கசபை அபேட்சகர்:- (ஒரு வாக்காளரைப்பார்த்து) ஐயா! நான் எப்பேர்ப்பட்டவன் என்று உங்களுக்குத் தெரியும். எங்கள் நாட்டின் ஈடேற்றத்துக்காக மிகவும் பிரயாசை எடுப்பேன்......................

வாக்காளன் :-அப்படித்தான் மற்ற அபேட்சகரும் சொன்னார். எல்லாரும் இந்த மந்திரத்தையே உச்சரிக்கிறீர்கள்.

* *

உபாத்தியாயர் :- (ஒரு டாக்டர் மகன்மீது கோபத்துடன்) இனி உன் அப்பாவை இங்கு வரவழைத்து றிப்போட்செய்வேன் என்றார்.

பையன் :-சார்! சார்! பாவம் வேண்டாம். இங்குவந்து போவதற்கு ரூபா 10 "பில்" அனுப்பிவிடுவார்.

பையன் :-அம்மா! நீ நேற்று தாகத்தோடு நிற்கிற பசுவுக்கு தண்ணீர் வைப்பது மகா புண்ணியம் என்று சொன்னாயே!

தாய் :-ஆமாம்! மகனே சந்தேகம் என்ன?

பையன் :-பூனை அதிக தாகத்தோடு கத்துகிறது. சட்டியுடன் பாலைத்தூக்கி முன்னாலே வைக்கட்டுமா?

* * *

நடிகன் :-ஐயா! விருந்துச்சீனில் எனக்கு உண்மையாய்ச் சாப்பாடு பலகாரம் முதலியன கொடுக்கவேண்டும்.

மானேஜர் :--அதுசெய்யத் தடையில்லை. ஆனால் மரணச்சீனில் என்ன உண்மையாய் விஷங்கொடுக்க வேணும் என்று கேட்கிறாயா?

க. சே. சோமசுந்தரஐயர்,

பத்திரக்கிரயம்
இலங்கை, இந்தியா,
பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
சீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு ,, அணு 1.
மலாய்நாட்டுக்கு ,, காசு 7.

# ஈழகேசரி

விளம்பரவிகிதம்
முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
,, அரைக்கலம் ,, 4-00
,, கால்கலம் ,, 2-50
அரசியல்சம்பந்தமான
விளம்பரங்களுக்குச்
சலார் வேறு.

தொகுதி—சூ. } யாழ்ப்பாணம், சுன்னுகம்: யுவஹூ தைமீ உ௰ உ (2-2-36) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—உகூ

## பாரதியார் மகாகவி.

(போன். குமாரவேற்பிள்ளை.)

தமிழ்நாட்டில் தோன்றிய மகா மகாகவிகளுள் காலஞ்சென்ற சுப்பிரமணிய பாரதியாரும் ஒருவர். அவர் மற்றவர்களுட் சிறந்தோர். என்னை? அவர்கள் அழகணிக் காவியங்களும் கவிதைகளும் செய்து போந்தனர். பாரதியார் அவைமட்டும் செய்யப் பிறந்தவரல்லர். தங்கள் தங்கள் முன்னோர் தேடிவைத்த காவியங்களையும் ஓவியங்களையும் அநுபவிக்கும் உணர்ச்சியற்று, பண்டைப் பெருமையை மறந்து, அடிமைத் தொழிலுக்கும் ஆளப்படுதற்குமே தாம் உரியர் என்னும் எண்ணம் சிறந்து—இருண்மண்டிக்கிடந்த சாதிக்கு—தமிழ்நாட்டுக்குப் புத்துயிர் கொடுத்துப் புத்தணி அணிந்து பெருமை பிறங்கச் செய்தார். இவர் கவிதை இவர் ஓர் மகாகவி என்பதைமட்டும் காட்டவில்லை; ஒரு சாதிக்குப் புதுவாழ்வு அளித்தமையால் — உறங்கிக்கொண்டிருந்த சாதியைத் திடீரென எழுப்பியமையால் – மகாகவிகளுக்குத் தலைவர் எனவும் கூறுகின்றது.

பாரதியார் ஒரு மகாகவி என்பதை, முன்னர் ஒரு சிலரன்றி மற்றையோர் உணரவில்லை. உணர்ந்தவர்களும் மற்றையோரால் வெள்ளறிவினராகக் கருதப்பட்டனர்.

பாரதியார் ஒரு கவிஞர் அன்றெனவும், அவர் பாட்டுகள் சில்லறை வேடிக்கைப் பாட்டுகள் எனவும், முழுமனத்துடன் நகையாடியவர்கள் கற்ற நூல்களைக் கசக்கிப் பிழிவதொன்றே வல்ல தமிழ்ப் பண்டிதர்கள். பாரதியாரின் மந்திர சக்தி பெற்ற கவிகள் கரடுமுரடான பண்டிதர்கள் உள்ளத்தையும் இன்று தம்மாட்டு ஈர்த்து ஒருவாறு செம்மைசெய்துவிட்டனவாயினும், கவிநயம் காண்பதில் தமக்குத் தாமே நிகர் என்னும் எண்ணம் கொண்டுள்ள சிலருக்குமட்டும் தம் பெருமையைப் புலப்படுத்தப் பின்னிற்கின்றன. சுயநலமோகம் அயல்மொழிப் பித்து என்னும் இரண்டு பசாசுகளும் இவர்களை வீட்டகலும் நாளே பாரதியார் செய்யுள்கள் தம் புனிதத் திருமேனியை இவர்களுக்கு நன்கு தெரியக் காட்டும் நன்னுளாகும்.

சென்னையிலிருந்துவெளிவரும் "தினமணி" என்னும் பத்திரிகையின் சொந்தக்காரர் பாரதியாரின் பெருமையை நன்கு அறிந்தவர். அவர் செய்த நன்றியை மறவாதவர். அவர் சில நாட்களுக்கு முன்னர் பாரதியாரின் நினைவாக, பாரதி மலர் எனப் பெயரிட்டு ஒரு ஆண்டு வெளியீட்டை வெளிப்படுத்தினர். அதில் பாரதியார் பெருமை கூற வந்த முதலாவது கட்டுரை "வீர முரசு" என்பது. இதனை எழுதிய நெல்லைநேசன் என்பவர் பாரதியாரின் கவிதைக்கடலுள் பாரதிதேச பக்த கவி என்னும் எண்ணத்துடன் தோய்ந்தெழுந்து பாரதி தேசிய கவி, தேசியகவி எனக் கத்துகின்றார். பாரதியார் இன்று உயிரோடிருந்தால் இவர் கத்துதலுக்காக ஒருக்கால் இடமாற்றம் செய்து கொள்ளவும் கூடும் என் செய்வது!

கட்டுரை முழுதும் பாரதியார் தேசிய கவி என்பதற்குக் காரணங் காட்டிவந்த இவர், தேசியகவி என்பதினால் அவர் மகாகவி அல்லர் என்பது புலப்பட்டு நில்லாது என்பது கருதிப்போலும் இறுதியில் வாய்விட்டுத் தம்உள்ளக்கருத்தை வெளியிடுகின்றார். அது "பாரதியார் ஒரு நல்லகவி; மகாகவி அல்லர்" என்பது.

ஐயோ பாவம்! இவருடைய வெறும் சொல்லணிக்கட்டுரைகளில் மயங்கிய தினமணிப் பத்திராசிரியர் பின்னும் மயங்கவேண்டியவரானர். சொற்படு நயமறியார் பலர் செறிந்துள்ள தமிழ்நாட்டில், இன்னும் ஒருவரின் கவிதை உணர்ச்சியே தமதுணர்ச்சியாகக் கொண்டுழலும் ஒருவர் (ஒரு நல்ல வெளியீட்டில்) பாரதியார் பெருமைகுறையக் கட்டுரை எழுதவேண்டியவரானரே!

நெல்லைநேசனின் கட்டுரை அறிவுலகத்திலே மிகுந்த பரபரப்பை உண்டாக்கியிருக்கின்றது. பல அறிவாளிகள் பாரதியார் மகாகவி என்னுங் கொள்கையைச் சுவைபட விளக்குகின்றனர்.

சடகோபரந்தாதி பாடிய பெரியார் தாமே கம்பர் எனச் சொல்லுவதோடமையாது, திருவாசகத்தை "வாசகமாம்மட்டா" என இகழ்கின்றார். தற்காலத் தமிழறிஞரின் சிகரமாக விளங்கும் பேராசிரியர் மறைமலையடிகள், "கம்பர் நல்லிசைப்புலவர் அல்லர்" என்கின்றார். தென்னிந்திய தேவஸ்தானசபைக் கொம்மிஷனராயிருந்தவரும் கவிதைக் கனி பிழிந்துண்பதில் மிகுந்த வேட்டைகயுடைவருமாகிய T. K. சிதம்பரநாத முதலியார், "பெரியபுராணம்செய்த சேக்கிழார் சிறந்தகவிஞர் அல்லர்" என P. N. அப்புசாமி ஐயர் இல்லத்தில் இரகசியமாகக் கூறுகின்றார். சென்னை அரசாங்கத்தாரின் தமிழகராதித் தலைமைப் பதிப்பாளர் S. வையாபுரிப்பிள்ளை திருக்கோவையார் என்னும் ஒப்புயர்வில்லாத் தெய்வச் செந்தமிழ்நூலை இயற்றியவர் மணிவாசகர் அல்லர் என்கின்றார். இக்கொள்கைகளோடொப்ப நெல்லைநேசன் கருத்தையும் குப்பையிற் போடவேண்டியதே முறைஎனினும், தமிழ்ப்பண்டிதர்கள் படையெடுப்பு முற்றாய் இன்னும் ஒழியாதபடியாலும் நெல்லைநேசனின் நேசர்கள் அக்கருத்தை வேரூன்றச்செய்ய முயலுவதாலும் அறிஞர்கள் ஆராய்ந்து உண்மையை நிறுவவேண்டியவ ரானர்கள். என் புல்லிய அறிவிற்குப் புலனாயவற்றைக்கூறி யானும் என்கடமையை முற்றுவிக்கின்றேன்.

நெல்லைநேசன் அவர்கள் இன்று புதிதாய் இக்கருத்தை வெளியிட்டுள்ளார் என எண்ணவேண்டாம். அவர் இரண்டாண்டுகளுக்கு முன்னரே பாரதியார் மகாகவி அலலர் என்னுங் கருத்தை வெளியிட்டிருக்கின்றார். "கலைமகள்" தொகுதி ஒன்று பகுதி ஆறில் அக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. அதன் தலைப்பு "கல்லாக்கலை" என்பது.

"கல்லாக்கலை" என்னும் கட்டுரையைக் கண்டதும், "அஃது பி. ஸ்ரீ. அன்றோ எழுதியது?" என நீங்கள் வினவக்கூடும். அதற்குப் பதில், "பி. ஸ்ரீ. தான் இப்போது நெல்லைநேசன் என்னும் புதுப்பெயருடன் தோன்றியிருக்கின்றார்" என்பதே.

அவர் அக்கட்டுரையில் கூறியிருப்பது வருமாறு:

"ஆற்றங்கரைதனிலே—தனி
ஆனதொர் மண்டபம் மீதினிலே தென்றல்
காற்றை நுகர்ந்திருந்தேன்—அங்குக்
கன்னிக்கவிதைகொணர்ந்து தந்தாள்-அதை
ஏற்று மனமகிழ்ந்தே—அடி
என்னொடிணங்கி மணம்புரிவாயென்று
போற்றிய போதினிலே—இளம்
புன்னகைபூத்து மறைந்துவிட்டாள்
அம்மா!"

(தொடரும்)

மாட்சிமைதங்கிய
## ஐந்தாம் 'ஜோர்ச்' என்னும்
அரசர்பெருமான்பேரிலியற்றிய
## காஞ்சிப்பாட்டு.

[ஸ்ரீமத். பண்டித வ. சு. இராஜ ஐயனுரவர்கள்,
விரிவுரையாளர், அரசினர் ஆசிரியர் கல்லூரி, கோப்பாய்.]

திணை – காஞ்சி. துறை – தாபதநிலை.

வேந்தே யெனுமால் விறலோ யெனுமால்
வந்தும் புகழோய் எந்தா யெனுமால்
பாந்தள் மணியின் முடியோ யெனுமால்
வீந்தே னெனுமால் வெருவா வழுமால். (க)

சுவைதா னிழந்த நறும்பால் புரைவேன்
அவையே புகுதா தயர்வே னெனுமால்
நவைசேர் நயனி லயல்கூ றலர்தாம்
இவைபோல் வனகேட் டிரெனு னெனுமால். (உ)

நிலமு மலைசேர் கடலுங் குடைக்கீழ்
வலமே தருமோ ரரசே யெனுமால்
நிலவா ரெழிலாய் நெறியால் வருமோர்
புலவோ யெனுமால் புலர்நின் மனையே. (௩)

சொல்லே ருழவர் சுவைசேர் பரணி
வில்லே ருழவர் மீக்கூர்ந் தனராய்
எல்லே யிரவே யிவர்தம் முதலாய்
கொல்லே றெனநீ குலவா யெனுமால். (௪)

பொன்னு ரெழிலால் பயப்பூ ருவராய்
மின்னு ரெங்கோ னிவனென் றமையார்
கொன்னே யழிவார் கொள்கை யிதுவோ
மன்னே மறைவாய் முறையோ வெனுமால். (௫)

வானே யழலே நீரே வளியே
தானே நிலனே தருநின் னுரைகண்
டானு தமையும் அடுபோர் வலியாய்
கோனே யெனுமால் குணநின் மனையே. (௬)

கல்லுங் கரையுங் கனிவாய் மொழியாய்
தொல்சீ 'ருவின்சர்' துரையே யெனுமால்
அல்லும் பகலு மறிவாட் டயர்வாய்
மல்லா டுதிரள் தோளா யெனுமால். (௭)

கண்ணீர் கலுழ்க்கும் குழல்போ லினையும்
உண்ணீர் மையிலா துறைதோ யெனுமால்
பெண்ணீர் மைபிரி வறியா ததுகொல்
கண்ணேட்ட மிஃதோ கனவோ வெனுமால். (௮)

நாவாய்ப் படையும் முகிலூர் திறமும்
பாவாய் பிறர்யா ருடையா ரென்பாய்
ஓவா தலமந் தழுநின் மனைதான்
காவா யுயிரோ வியமே யெனுமால். (௯)

கானும் வரையும் வானுங் கடலும்
தானே யரசாய்த் தனிநின் றனையால்
கோனே குரவா எனுநின் மனையாம்
மானேர் விழிதன் னெழில்வல் வினையே. (௧௰)

பாவங்கள் பின்பு தன்னை வருத்துதலை விரும்பாதவன் அவைகளைப் பிறரிடத்திற் செய்யாதிருக்கக்கடவன்.

# "எனது கல்விக்கழகம்."

(இஃது, கவியரசர் தாகூர் அவர்கள் அமெரிக்கநாடு நண்ணியஞான்று அங்கு நடாத்திய (My School) என்னும் ஆங்கிலச் சொற்பெருக்கின் மொழிபெயர்ப்பு.)

[மேலைவேலணை, ஆசிரியர், திரு. சே. க. சண்முகம்பிள்ளைஅவர்கள்]


(முற்றொடர்.)

"என்னுடைய நல்லதிட்டமாகவே போலும், காவியமும், சங்கீதமும், ஓவியமும் இயற்கையாகவே சிறப்பாக அமையப் பெற்ற குடும்பத்தில் யான் வளர்க்கப்பட்டு வந்தேன். என்னுடைய உடற் பிறப்பாளரும் ஏனைய உறவினரும் சுதந்திரமாக வாழும் வாழ்க்கையையுடையவராய் இருந்தனர். அவர்கள் இயற்கையாகவே ஓவியத்தில் மிக்க திறமை வாய்ந்தவர்கள். இவ்வகையான சிறந்த சுற்றாடலில் வளர்க்கப்பட்டயான், இளமைப் பருவத்திலேயே எண்ணவும், எண்ணியாங்கு அவற்றினை வெளிப்படுத்தவும் தொடங்கி விட்டேன். எமது குடும்பமானது பழைய வைதிகக் கொள்கைகளையும் வழக்கங்களையும் அநுசரியாத தன்மையினுல் சாகியங்களின் சம்பந்தமற்றதாக இருந்தது. இப்படியாகவே நாங்கள் சமய சம்பந்தமான அல்லது சாகிய சம்பந்தமான முறைகளினின்றும் நீங்கிய சுதந்திரமுடையவர்களாய் இருந்தோம். இவ்வரிய நீக்கம், எங்களுடைய மனத்தின் சுதந்திரத்தைப் பயமின்றி உபயோகிப்பதற்கு எமைத் திடப்படுத்தியது. நாங்கள் வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் இறங்கி வினை ஆற்றத் தலைப்பட்டோம். என்னுடைய இளமைப்பாயத்தில் யான் பெற்ற கல்வி என்னவென்றால், எனக்கிருந்த காவிய, ஓவியத் திறமைகளை உபயோகிப்பதில் உண்டாகும் ஒப்பற்ற மகிழ்ச்சியும் சுதந்திர உணர்ச்சியுமே. (Boundless joy and freedom)இவ்வகையான கலவி, என்னுடைய மனத்தினை அதனுடைய இயற்கையான சிறந்த சுற்றாடலில் வளரும் தன்மையை அளித்ததினுற்ருன், பள்ளிக்கழகங்களிற் பயிலப் பெறும் முறைகளை யான் வெறுக்கவேண்டி நேரிட்டது.

யான் எனது கல்விக்கழகத்தை ஆரம்பித்தபோது மேற்கூறிய இளமைப்பாய அநுபவ மொன்றே எனக்கு அருந்துணையாக இருந்தது. மிகவும் இன்றியமையாது வேண்டப்படுவது உண்மையறிவேயன்றிக் கல்வியூட்டும் போலி முறைகளல்ல என்பதைப் பூரணமாக யான் உணர்ந்தேன். (I felt sure that what was most necessary was the Culture and no formal method of teaching) என்னுடைய நல்லதிட்டமாகவே, பீ. ஏ. (B. A). பரீட்சைக்கு பாடாயத்தம் செய்துகொண்டிருந்த சத்திய சந்திருய் (Satish Chandra Roy) என்னும் பெருநலம் மிக்க இளைஞர் என்னுடைய கழகத்தில் கவர்ச்சி மிக்குடையராய் ஆங்குவந்தணைந்து, என்னுடையஎண்ணத்தின்படியே தமது வாழ்க்கையை நடத்திவந்தனர். அவர் மிகவும் எழின்மிக்க தோற்றமுடையவர். பததொன்பது வயது முற்ருத பருவமுடையவர். அன்னரின் ஆத்மாவோ பூரண எண்ணங்களாம் புவியிடை வாழும் பொற்பினையுடையது. அவர் இயற்கையழகு எங்குண்டோ ஆங்கெல்லாம் ஈர்க்கப்படுவர். அவர் இயற்கையுலகிலோ அன்றி மனிதசமூகத்திலோ உள்ளார்களிற் பார்க்க மிகவும் சிறந்தவர் என்பதைக் கூசாது கூறுவேன். அவர் ஓர் உண்மைப் புலவர். காவியப் புவியில் வாழ்ந்து களித்து அழியாப்புகழினை நிறுத்திய அரிய பெரியார்களின் தன்மையை அவர் நிச்சயமாகவே அடைந்திருப்பார். அந்தோ! அம்மகான் தமது இருபதாம் வயதிலே ஆவிநீத்து அகன்றனர். அன்னரின் ஓராண்டென்னும் பேராண்டுழைப்பினையே யாங்கள் பெறுதற்குரியராய் இருந்தோம். அவரோடுற்ற மாணவர்கள் தாங்கள் வகுப்புகளிற் கல்வி பெறுவதிலேயே வாழ்க்கை தங்கியிருக்கிறதென்பதை ஒருபோதும் நினைக்கவில்லை. சந்திருய் எங்குச்செல்கின்ருரோ அங்கெல்லாம் அவரைத் தொடர்ந்து செல்வார்கள். (Sal) மரங்களெல்லாம் நறுமணமிக்க பூக்களைப் பூத்து மிளிரும் காலத்தில் மாணவர்கள் அவருடன் கூடிச்செல்வார்கள். இயற்கையின் எழிலைக் கண்டு இன்புறுவார்கள். சந்திருய் தமது மாணவர்களை உணர்ச்சி ததும்பிய உளத்துடன் பல அரிய பாக்களைப் பாடி மகிழ்விப்பார். இத்துடனமையாது, அவர் ஜெகசிற்பியாரு (Shakespear) டைய நூற்களையும், பிறௌனிங் (Browning) என்பார் எழுதிய நூற்களையும் வாசித்துக் காட்டி, அவைகளின் சாரத்தைத் தாய்மொழியாகிய வங்காளியில் விளக்குவார். மாணவர்க்கு இதுபோன்றனவற்றை எடுத்துக் கூறி விளக்குவதில் அவர் இணையற்றவர். மாணவர்கள் விளங்கும் ஆற்றலுடையவர்களாய் இருக்கிருர்களா இல்லையா என்பதில் இவருக்கு விசனமேற்படுவதில்லை. தனக்கு விருப்பம் மிகுந்த விடயங்கள் எவைவயோ அவைகளையே மாணவர்க்கு வாசித்துக் காட்டி, வார்த்தையாடுவார். மாணவர்கள் தான் கூறுவனவற்றை மிகவும் நுண்மையாகவும் பூரணமாகவும் அறிதல்வேண்டியதில்லையென்பதையும், ஆனல் அவர்களின் மனத்தை ஊக்கவேண்டுமென்பதையும் அவர் அறிந்து, மாணவர்களின் மனத்தினை ஊக்குவதில் எப்பொழுதும் வெற்றியுடையவராக விளங்கினர். "இவர் ஏனைய ஆசிரியர்களைப்போன்று பாடப்புத்தகங்களை மாத்திரம் காவித் திரிபவரல்ல" (He was not like others, a mere vehicle of text books) அவர் தம்முடைய சொந்த அநுபவ முறையிலேயே கல்வியை ஊட்டினர். அவர் உண்மை உணர்ச்சி மிக்க உயிர்க்கல்வியையே தம்மிடமிருந்து மனித இயற்கை சுலபமாகப் பெறக்கூடியவரையில் ஊட்டிவந்தார் என்றல் மிகையன்று. இவ்விதமான அரிய வெற்றிக்குரிய காரணம் என்னை? வாழ்க்கையில் அவர்க்குண்டாய கவர்ச்சியும், உண்மையுணர்ச்சியின் மீதும், தன்னைச்சுற்றிய எப்பொருண்மீதும், தமது மாணவர் மீதும் அளவற்ற விருப்புமே மேற்கூறிய வெற்றிக்குக் காரணமென்க. அவர் தம்முடைய ஊக்கத்தினை புத்தகங்கள் மூலமாகப் பெறவில்லை; ஆனல் அவருடைய உணர்ச்சி மிகுந்த மனமானது புறஉலகோடு கொண்டுள்ள நேரிய தொடர்ச்சி மூலமாகவே அதனைப் பெற்ருர். பருவகாலங்கள் மரங்கள்மீது, செய்யும் மாற்றங்களை இவரும் அடைந்திருக்கிருர். இவர், பூமியின் மீது வளரும் பூண்டுகளின் வேர்களிடத்திருந்தும், வானவெளிக்கண்ணிலிருந்தும், காற்றிலிருந்தும் வரும் கட்புலனுக்குத் தெரியா இயற்கையன்னையின் அழைப்புக்களைத் தமது செந்நீர் (Blood) தன்னில் உணர்ந்தவர்போலக் காணப்பட்டார். அவர் இயற்கையோடு மிகவும் நுணுகிய தொடர்ச்சியுடைவர். தன்னுடைய நண்பர்களை முன்னிலையில் எவ்விதம் கண்டு களிப்படையலாமோ அவ்வாறே புதிய எண்ணங்களையும் அவர் பூரணமாகவும் தூய்மையாகவும் கண்டின்புறுவர்.

இப்படியாகவே எமது பாடசாலை மாணவர்கள், கல்வியைப் பாடப்புத்தகங்களிடமிருந்து பெருமல், உண்மை ஆசிரியரிடமிருந்து பெறும் பாக்கிய முடையவர்களாய் இருந்தார்கள். நாங்கள் எங்களுடைய மனத்தினை விருத்திசெய்வதை விடுத்து, அதனைத் தருந்த அறிவினைப் பெருதபடி தடுத்து, உண்மை உணராதவகையிலாக்கும் வழக்கமுடையவர்களா யிருக்கிருேம். புத்தகப்போலி அறிவுகள் புகுந்து மனத்தின் விருத்தியைத் தடுக்கின்றன. நாங்கள், புத்தக அறிவெனும் அரண்மிக்க புத்துலகில் வதிந்து, கடவுளின் படைப்புக்களோடு உண்மையான தொடர்ச்சியற்றவராக வாழ்கின்ருேம். என்றுலும், புத்தகத்தால் உண்டாகும் நன்மைகளை வெறுத்தொதுக்குவது அறிவின் பாற்படாது. ஆனல், புத்தகமானது குறிக்கப்பட்ட அளவிற்கு நன்மையையும் அப்பால் தீமையையும் புரிகிறதென்பதை மறுக்கக்கூடாது. எப்படியாக இருந்தபோதிலும் இளம்பாயக் கல்விக்காலத்தில் பாலர்கள் உண்மைப்படிப்புக்களை இயற்கை வழிகளில் பெறவேண்டும். இந்த உண்மையை மனதுட் கொண்டவனுய் யான், என்னுடைய ஆச்சிரமத்தில் புதிய எண்ணங்களின் வளர்ச்சியைக் சருதி மிகவும் சிரம மெடுத்தேன். என்னுடைய கழகத்தில் பாக்கள் யாக்கப் பெற்றன. அப்பாக்கள் புலவனுல் தனது சொந்த மகிழ்ச்சியின் பொருட்டே பாடப்பட்டனவே யொழிய மாணவர்களுக்காகவன்று. உண்மையில், என்னுடைய கீதாஞ்சலி (Gitanjali)ப் பாக்களில் பெரும்பாலன இங்கேயே யாக்கப் பெற்றன. முதன் முதல் இப்பாக்கள் யாக்கப்பெற்ற பொழுது, சிருர்களுக்குப் படித்துக் காட்டப்பட்டது. அவர்கள் அவைகளைக் கேட்டின்புறுதற்குப் பெருந்திரளாக வந்தார்கள். அவர்கள் கூட்டங் கூட்டமாக, திங்கள் ஒளிதங்கிய மங்கள இராக்களில் வான்கீழ் விளங்கும் மணன்மீ தமர்ந்து அப்பாக்களை ஓதுவார்கள். பின்னர் என்னுல் எழுதப்பட்ட நாடகங்கள் யாவும் இங்கேயே எழுதப்பட்டன, அந்த நடிப்புகளில் மாணவர்கள் ஆர்வத்தோடு பங்குபற்றினர்கள். இன்னும்அவர்களுடைய பருவகாலப் பண்பிற் கேற்பவும் நாடகங்கள், எழுதப்பட்டன. எந்தவிடத்திலாயினும் யான் வசனத்திலோ அன்றிச் செய்யுளிலோ எழுதியனவற்றை மற்றைய ஆசிரியர்க்கு வாசித்துக காட்டுகின்ற அறைக்கு மாணவர்கள் ஆர்வத்தோடு திரளாக வருவார்கள். அவர்கள் தாமாகவே ஒருவருடைய தூண்டுதலோ அன்றி அழைப்போ இன்றி அவைகளைக் கேட்டு இன்புறுவார்கள். யான் இந்தியாவை விட்டு நீங்குவதன் முன்னர், அவர்கட்கு பிறௌனிங் (Browning) எழுதிய லூறியா (Luria) என்னும் நாடகத்தை வங்காளியில் மொழிபெயர்த்துக் கொடுத்தேன். அதனை அவர்களுக்குக் கூறி முடிக்க இரு நாட்கள் சென்றன. மாணவர்கள் நேரத்தைக் கவனியாது மிகவும் ஆர்வத்தோடு கேட்டனர். இந்தமாணவர்கள் நடிக்கும் பொழுது நேரே பார்த்தவர்கள், சிறந்த நடிகர்களுடைய தன்மை யுடையவர்களாய் இருக்கின்றனரென்னும் உண்மையைக் கண்டார்கள். அவர்கள் நடிக்குந் தொழிலில் புதிய முறைப்படி பயிற்றப்படவேயில்லை. ஆனல் அவர்கள், இயற்கயாகவே அந்த நாடகங்களின் தன்மையையுணர்ந்து சந்தர்ப்பத்திற் கேற்றவிதமாகநடக்கத் தாமாகவே அறிந்துகொண்டனர். அவர்கள் நடிக்கும் நாடகங்கள் பள்ளிக்கழகமான மாணவர்கட்குரியதெனினும் அவைகளை மிகவும் நுண்மையாக அறியவேண்டும்


# ஓர் அரிய நற்செய்தி!




ஹூட்ஸ்ரொக் தமிழ் அச்சுப் பொறிகள்

## தமிழ்த்தாயை வளர்ப்பதற்கு மேலும் ஒரு சிறந்த வசதி!

தமிழிலுள்ள எழுத்துக்களையுமல்லாமல் 1234567890 / ?% -,. முதலிய இலக்கங்கள் குறிகளையும் ஸ்ரீ ஜ ஸ க்ஷ ஷ ஹ முதலிய சம்ஸ்கிருத எழுத்துக்களையும் இத் தமிழ் அச்சுப்பொறிகளினுல் பொறிக்கலாம்.

கையினுல் எழுதிப் படும் கஷ்டமும், கண்ணுடிகள் கொண்டு வாசிக்கும் சிரமமும் நீங்கின. கடிதங்கள், உறுதிகள் முதலியனவெல்லாம் திருத்தமாக 4அல்லது 5 பிரதிகளுடன் பொறித்துப் பாவிக்கலாம். உங்களுடைய சிரமமான எழுத்து வேலைகளெல்லாம் சந்தோஷமாகச் செய்யலாம். ஆங்கில ரைப் ரைட்டரில் உள்ள சௌகரியங்களெல்லாம் இதில் தவருமல் உண்டு.

பரிசோதனை, பாவிக்கும் முறை, விலை விபரங்களுக்கு எழுதவும்.

தலைமைப் பிரதிநிதி:— இ. கே. நாதன்,
உவைமன்தெரு, யாழ்ப்பாணம்.

(77) 2-2-36—4


என்னைப்பகை யுற்ருரு முய்வர் வினைப்பகை, வீயாது பின்சென் றடும்,

# உடல் நூல்.

(சாவைநகர், ஆசிரியகலாசாலைப் பிரசாரகர்
திரு. நி. வ. வீரகத்திப்பிள்ளை அவர்கள் எழுதியது.)

(உரிமை ஆக்கியோனுக்குரியது)

(முற்றொடர்.)

8. அந்திரம் அல்லது வயிற்றுக் குடல்கள்: இவை பெருங்குடல், சிறுகுடல் என்று இரண்டாக வகுக்கப்பட்டிருக்கின்றன. சிறுகுடல் ஏறக்குறைய 25 அடி நீளமுள்ளதாயும், பெருங்குடல் ஏறக்குறைப 5 அடி நீளமுள்ளதாயும் இருக்கின்றன. பெருங்குடலின் நீண்ட பகுதி மலாந்திரமென்றும், அதின் கடைவாசல் மலவாகி யென்றும் அழைக்கப்படுகின்றன. மலவாசலைச் சுற்றி மோதிரம் போன்ற ஓர் சவ்வுச் சுற்றியிருக்கின்றது. இப்பேசி நரம்புமண்டல ஆட்சிக்குட்பட்டது. ஆகவே மலத்தை வேண்டிய நேரத்திற் கழியச்செய்கின்றது. பெருங்குடலும் இரைப்பை போல் மூன்று சவ்வுகளினாலானது. இதன் பிரதான தொழில் சளியைச் சுரக்கச்செய்வதும், ஜெமித்த ஆகாரத்தின் உபயோகமற்ற பாகத்தைப் பிரித்துக் கழியச்செய்வதுமேயாம். சிறுகுடல் பெருங்குடலின் மத்தியில் குவியலாய்க் குவிந்திருக்கின்றது. பெருங்குடல்போல் மூன்று சவ்வுகளினாலானது. சிறியது. இதின் ஓர் பாகத்தை அறுத்துச் சலத்திற் கழுவிப் பரிசோதித்துப் பார்த்தால் உள்ளங்கைபோற் தோன்றும் மத்தியிற் பல கண்ணறைகள் அமைந்திருக்கின்றன. இக்கண்ணறைகளிலிருந்து ஓர்வகை நீர் சுரக்கின்றது. (இக்கண்ணறைகள்தான் அத்திசுரம் நெருப்புக்காய்ச்சற் காலங்களில் தாக்கப்பட்டுப் பெலவீனத்தை யடைகின்றன.) சிறுகுடலில் இருந்து சுரக்குந் நீர் அறைப்பாகையாற் றசையாக்கி இரத்தமாகவும், மலமாகவும் பிரித்துவிடுகின்றது.

இற்றைவரையும் நாம் வாய்தொடக்கம் மலவாசல்வரையுமுள்ள சீரண உறுப்புகளின் தொடர்பைப்பற்றி ஆராய்ந்தோம். இனி இத்தொடருடன் தொடர்புறுதலைப் பெறுத சீரணத் தொழிலுடன் ஈடுபட்ட மற்றைய உறுப்புக்களைப்பற்றி யாராய்வாம்.

9 ஈரல் (Liver): உடலின் வலப் பக்கத்தில் விலாவுக்கும் சுவாசப்பைக்குங் கீழேயிருக்கின்றது. ஒரு அடி குறுக்களவுள்ளது நாலு இறாத்தல் நிறையுள்ளது. கருஞ்சிவப்பு நிறமானது. மாமிசத்தொகுதியானது. இது இரண்டாகப்பிளவுபட்டுள்ளது. வலப்பாகம் இடப்பாகத்திலும் பெரியது. இதன் கீழ்ப்பாகத்தில் மஞ்சள்நிறமான கசப்புள்ள பித்தநீர் இருக்குஞ் சிறுபை ஒன்றுண்டு. இத்துடன் மூன்று நரம்புகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன. முதலாவது கண்டறை நாடியிலிருந்து ஈரலுக்கு நல்லிரத்தைக் கொண்டு வருகின்றது. இரண்டாவது இரப்பை, சிறுகுடலை, கணையம், பிளிகை முதலிய உறுப்புக்களிலிருந்து அசுத்த விரத்தத்தை ஈரலுக்குக் கொண்டு வருகின்றது. மூன்றாவது ஈரலிலிருந்து பித்தநீரைச் சிறுகுடலுக்குக் கொண்டு செல்கின்றது.

**ஈரலின் தொழில்கள் நான்கு.**

(1) பித்தநீரைச் சுரக்கச்செய்தல்

(2) மாப்பதார்த்தம் போன்ற ஆகாரங்களைச் சேகரித்து வைத்திருத்தல்.

(3) ஆகாரத்திலுபயோகமற்ற சலவடிவமான பாகத்தைப் பிரித்தெடுத்தல்.

(4) ஈரலிலுள்ள கண்ணறைகள் பித்தநீரின் உதவியுடன் ஆகாரத்திலுள்ள கொழுப்புப்பதார்த்தங்களைத் துண்டித்தல்.

புறநடை:— நல்லிரத்தம் ஈரலுக்கு வரும்போது அதில் மாப்பொருள் காணப்படுகின்றது. பின் இரத்தம் ஈரலிலிருந்து வெளியேறும்போதும் அதில் மாப்பொருள் காணப்படுவதில்லை. ஏனெனில் போசனம் அருந்திய பின் மறுபோசனம் வரையும் இரத்தத்திலுள்ள மாப்பொருளை தேகம் உபயோகித்து சூட்டையும் தைரியத்தையும் பிறப்பிக்கின்றது. மறுபடி ஈரலிற் சேகரித்து வைக்கப்பட்ட மாப்பொருளே இரத்தத்துடன் கலந்து அதனை மட்டுப்படுத்துகின்றது.

10 கணையம் (The Pancneas): இரப்பைக்குப்பின் சற்றுக்கீழாக இருக்கின்றது. ஒடுங்கியது. தட்டையானது. இது ஏறக்குறைய ஏழு அங்குல நீளமானது. செங்கல் மங்கலான சிவப்பு நிறமானது. அமைப்பில் உமிழ்நீர்க்கோளங்களையொத்து இதிலிருந்து கணையநீர் சுரக்கின்றது. இக்கணைய நீர் நிறமற்றது. பிரதானமாய் நீரும் உப்புஞ் சேர்ந்து இந்நீர் சிறுகுடல் நீருடன் கலப்பதால் நயமாகாரத்தத்திலுள்ள மாப்பொருளும், சர்க்கரைப்பொருளும் கரைந்து அன்னரசமாகின்றது. கொழுப்புப் பொருட்களும் ஓர் அளவுக்கு சிறு சிறுதுண்டுகளாக்கப்பட்டு ஓர் வகை அமிலமாகமாறுகின்றது. (தொடரும்)

ஒரு நாடகாசிரியனுடைய விருப்பும் ஆர்வமுமுடையவனாகிய யான் எனது மாணவர்களுடைய நடிப்பில் பூரணதிருப்தி யுடையனாய் இருந்தேன். மாணவர்களுடைய நடிப்பில் யான் மற்றைய ஆசிரியர்களை ஒருபொழுதும் பெடவிட்டதேயில்லை. பலமுறைகளில், மாணவர் தாமாகவே நாடகங்களை எழுதிப் பயின்று, தமது நடிப்பினைப் பார்க்கும்படி, எங்களை அழைத்திருக்கின்றார்கள். அவர் மாணவர் கழகங்களை ஆக்கிச் சிறப்பாக நடாத்துகிறார்கள். அங்கிருந்து பாலர், இளைஞர், வாலிபர் என்னும் முத்திற வர்க்கத்தினரும், மூன்று வெளியீடுகளை வெளியிடுகின்றனர். அவற்றுட் சிறந்தது பாலர்கழக வெளியீடேயாகும். என்னுடைய கழகமாணவர்கள் ஓவியத்திலும் மிக்க பயிற்சி யுடையவர்களாக விளங்குகிறார்கள். அவர்கள் பழையமுறைப்படி மாதிரிப் படங்களின் துணைகொண்டு பழகவில்லை. ஆனால் தாமாகவே நேரிற் சென்று பல பொருட்களை அவதானித்தும், ஓவியம் வல்லார் தம் படங்களை இடைக்கிடை சென்று கண்டும் ஓவிய வன்மை உயர்வுடன் பெற்றுக்கொண்டார்கள். (தொடரும்)

## யாழ்ப்பாணத்திற்கு நல்லகாலம் வருகிறது

### திரு. க. பாலசிங்கம் அவர்களின் திட்டம்

### சிறுகடலை நல்ல தண்ணீராக மாற்றுவற்கு ஆலோசனை

கமச்செய்கைக்குத் தண்ணீரைக் குழாய்மூலம் இறைப்பதைக்குறித்து இலங்கை நீர்ப்பாசனப் பகுதியார் விசாரணைசெய்ததில் உப்புநீர்த் தேக்கங்களை நல்ல தண்ணீர்த் தேக்கங்களாக மாற்ற முடியுமென்று கண்டுபிடித்திருப்பதாகத் தெரிகிறது. திரு. பாலசிங்கமவர்கள் கூறிய யோசனைப்படி, யாழ்ப்பாணத்திலுள்ள சிறுகடற்தண்ணீரைக் கமச்செய்கைக்குஉபயோகிப்பதைக்குறித்து விசாரணைசெய்ததன் பயனாக ஷை விஷயம் ஆராய்ச்சிசெய்யப்பட்டிருப்பது குறிக்கப்படத்தக்கதாகும். திரு. க. பாலசிங்கமவர்களின் திட்டம் செய்கையில் முடியாததல்லவென்றும், யாழ்ப்பாணம் மேற்குக் கரையோரத்திற் கப்பாலுள்ள சிறிய தீவில்மட்டும் பரீட்சார்த்தமாக மேற்படி விஷயம் செய்துபார்க்கப்படலாமென்றும் நீர்ப்பாசனப் பகுதியார் ஆலோசித்திருப்பதாகக்கூறப்படுகிறது.

யாழ்ப்பாணப்பகுதிக்கு மகாவெலிகங்கையிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதைவிட அங்குள்ள சிறுகடல் நீரை நல்லதண்ணீராக மாற்றச் செலவதிகமேற்படாதென்று கருதப்படுகிறது. தண்ணீர்த் தேக்கத்திலிருந்து வயல்களுக்குத் தண்ணீர் இறைக்க மட்டும் ஏக்கர் ஒன்றுக்கு ரூபா 3 வீதம் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தை நிறைவேற்ற ஏற்படும் மொத்தச்செலவு எவ்வளவென மதிப்பிடப்பட்டு வருகிறது.

### பராசசிங்கத்துக்கு 6 மாதப் பிணை

யாழ்ப்பாணம் 30.

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் உடுவில் வாசியாகிய பராசசிங்கம் என்பவர்மீது அவ்வூர் வாசியாகிய நவரத்தினம் பெண் செல்லம்மா என்பவர் தனது 200 ரூபா பெறுமதியாகிய காப்பு, சங்கிலி முதலியவற்றைப் பொய்ச்சாட்டுச்சொல்லி அபகரித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் இன்று வழக்காளி தனது நகைகளை எதிரி திரும்பவும் தந்துவிட்டதாகக் கூறியதன்மேல், எதிரி தனது குற்றத்தை ஒப்புக்கொள்ளவே, நீதிபதி எதிரியை 100 ரூபாவுக்கு 6 மாதப் பிணையில் போகும்படி உத்தரவிட்டார்.

ந. நி.

### சண்டிருப்பாயில் வாள்வெட்டு

யாழ்ப்பாணம் 29

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் அடிஷனல் பொலிஸ் நீதிபதி திரு. சைமன் ஜெரூட்றிக்கோ முன்பாக சண்டிருப்பாய் வாசியாகிய ஐயாத்துரை சுப்பிரமணியம் என்பவர் மீது அவ்வூர்வாசியாகிய பொன்னையா இராசரத்தினத்தை வாளால் வெட்டிப் பாரதூரமான காயத்தை உண்டாக்கியதாகப் பொலிஸ் விதானை திரு. T. சோமசுந்தரம்என்பவர் ஓர் வழக்கைத் தொடர்ந்தார்.

அப்போது அவ்வூர் வாசியாகிய திரு V. நல்லதம்பிஎன்பவர் கொடுத்த வாக்குமூலத்தின் சாராம்சம் வருமாறு:—

சென்ற 27-ந் திகதி சாயங்காலம் காய மடைந்தவராகிய இராசரத்தினம் டைசிக்கிளில் சங்கானை ரோட்டால் வரும்போது இவ்வெதிரி இராசரத்தினத்தைககண்டு "கில்லடா" என்று சொல்லிய வண்ணம் ஓர் வாளால் அவரது கையில் இருமுறை வெட்டினார். உடனே காயமடைந்தவர் பைசிக்கிளுடன் கீழே வீழ்ந்தார். உடனே எதிரி சைக்கிளையும் எடுத்துக்கொண்டு வாளுடன் ஓடிவிட்டார்.

இவ்வளவில் நீதிபதி எதிரிக்கு விருந்து விடுத்து வழக்கை வருகிற 5-ந் திகதிக்கெனத் தவணையிட்டார். ந. நி.


விளம்பரம்.

அரசாங்கசபைத் தெரிவு.

காங்கேசன்துறைப்பகுதி வாக்காளர்களுக்கு:

உங்கள் பிரதிநிதியாக

நமது நாட்டின் அனுபவங்களை நன்குணர்ந்தவரும், பல ஆண்டுகளாக ஆசிரியராகவும், வித்தியாதரிசியாகவும், ஆசிரிய கலாசாலை அதிப ராகவும் தொண்டாற்றி இளைப்பாறி யிருப்பவரும், 30 ஆண்டுகளாகக் கல்வி உலகத்திலும், கைத்தொழில், கமத்தொழில் முதலிய பல துறைகளிலும் பெற்றுள்ள அரிய அனுபவத்தின் பெறுபேற்றைத் தமது நாட்டுக்குப் பயன்படுத்த வேண்டுமென்னும்பேரவாவுடையவரும், சமய ஆசாரசீலரும், உதாரண வாழ்க்கையைக் கைக்கொண்டு



ஒழுகுபவரும், அரசியல், பொருளாதார நிலை, கல்வித்திட்டம் முதலியவற்றில் தேர்ச்சியுடையவரும், யாவராலும் நன்கு மதிக்கப்படுபவருமாகிய

திருவாளர்

அ. பொன்னையா அவர்களையே

அன்புடன் தெரிவுசெய்யுங்கள்!

(74) 19-1-36—5.

# தேர்தல் டயறி. —"ஊர் உலாவி.'

நமது டயறியில் விரும்பத்தகாத சில விஷயங்களும் குறிக்க நேரிடுகிறது. பருத்தித்துறைப் பகுதியில் நாளாந்தம் நடைபெற்றுவரும் பாதகச் செயல்கள் பலவாகும். கல்விமான்கள் உத்தியோகஸ்தர்கள், பிரபலஸ்தர்கள் ஆதியோர் 'காடையரால்' தாக்கப்படுகின்றனராம், இவர்களில் அனேகர் தற்போது விசாரணை செய்யப்படவேண்டியவர்களாகச் சிறைக்கூடத்தில் கிளி கூட்டிலிருப்பதுபோல் இருக்கிறார்கள். சிலர் உறவினர் வீடுகளிலும் சிநேகிதர்வீடுகளிலும்ப துங்கியிருக்கிறார்களாம் அவலைத்தொடுவானேன் ஐயா! பின் கவலைப்படுவானேன்!

* * *

குறிக்கப்பட்ட பகுதியில் ஓர் பிரபலஸ்தர் வீட்டுக்குமுன் தெருவீதியில் சொல் விளம்பி பருகும் பாத்திரமொன்றை வெற்றிக்கொடிபோல் தொங்க விட்டிருந்தார்களாம். இந்தப்பிரபலஸ்தர் மறுகட்சியாரே அதைச் செய்திருக்க வேண்டுமெனவெண்ணிப் பகிரங்கமாக அக்கட்சிக்குமாறாக வெளித்தோன்றி விட்டாராம். ஆனால், இவர் ஆதரவளிக்கும் கட்சியாரே சூட்சியாக இச்செயலைச் செய்திருக்கக் கூடுமெனவும் கருதப்படுகின்றது. போட்டியென்றால் இதுவல்லவாபோட்டி! கடந்ததெரிவிலும்இப்பகுதியில் இவ்வாறான அடாதசெயல்கள் பல நடந்தேறின. என்செயலாம்! எப்தவனிருக்க அம்பை நோவானேன்!

* * *

இச்செயல்கள் பத்திரிகைகளுக்கு விஷயமாகின்றன. நீதிமன்றங்களுக்கு வழக்காகின்றன. பொலிசாருக்கு வேலையாகின்றன. காடையருக்கு வேட்டையாகின்றன. ஊருக்கு அவமானமாகின்றன. அக்கட்சியாருக்கு? .... என்னவாகின்றன.

* *

ஒருபகுதியில் ஓர்சைவசமயத்தவரும் கிறீஸ்தவர் ஒருவரும் போட்டி செய்கிறார்கள். சைவரில் பெருபாலார் கிறீஸ்தவருக்கே மரியாதை காரணமாக உதவிபுரிந்து வருகிறார்கள். ஆனால் கத்தோலிக்கரில் பெரும்பாலார் சைவசமயத்தவருக்கேஉதவிபுரிவார்களெனக்கருதப்படுகின்றது. சிலநாட்களின் முன் ஓர் கத்தோலிக்க பெரியார் இப்பகுதிக்குப் போட்டிசெய்ய எத்தனஞ் செய்தபோது ஓர் கத்தோலிக்ககுரு ("We prefer a good Hindu to a bad Catholic" ஒருகூடாத கத்தோலிக்கனைக் காட்டிலும் நல்ல சைவனை நாம் விரும்புவோம் என்று ஒருவருக்குக் கூறியதாகவும் ஓர் வதந்தி உலாவியது. அவ்வண்ணமே இதுவிஷயத்திலும் சைவர் தமது சமயத்துக்குரியவரைக்காட்டிலும் நல்லதோர் கிறீஸ்தவ பெரியாரை விரும்புகின்றனர் போலும்.சென்றதெரிவில் ஒருவர்சார்பாக நின்ற பலர் இத்தெரிவில் மற்றவர்சார்பாகச்சாய்ந்து விட்டனராம்.

* * *

மற்றொரு பகுதியில் ஓர் அபேட்சகர் "நான்தான் தகுதியானவன்; மற்றவருக்கு அரசியல் ஞானம் ஒன்றுந்தெரியாது நான் அது;நான் இது;என்று தமதுநாவாலேயே தன்னைப்புகழாக்கம்மாலைஎன்றவிதமாகப்பகிரங்கமேடைகளிலும் கூறுகிறாராம். இவர்உறவுகலந்தவோரிடத்தில் "தெய்வஞ்சாட்சியாக என்னையனுப்பிவையுங்கள்"என்று ஆணையும்விட்டாராம். எவ்விதமும் புகழ் வேண்டும்! இந்தத் தெரிவு என்னும் புகழைக்கோரி நிற்கும் பெரும்பேயால் இல்லங்களில் பிதா மக்களுக்கிடையிலும் மருமக்களுக்கிடையிலும் ஏற்படும்விரோதங்கள் ஒன்றா? இரண்டா? மிகப்பல.

ஓர் அபேட்சகர் தான் கல்விப் பகுதியில் பெற்ற அனுபவத்தை அரசாங்க சபையில் உபயோகிக்கத் தருணம் வேண்டிநிற்கின்றனராம். இவருக்குப் பெரிதும் ஆசிரியர்களின் உதவி உண்டெனப் பலர் பேசிக்கொள்கிறார்கள். இவர் செல்லுமிடங்களில் இவரை நன்கு அறிந்தவர்கள் காணப்படுகிறார்களாம். தெரிவு காலங்களில் அறிந்தவர்களை ஞாபகப்படுத்துவது சுலபமாம். இவருக்குப் பொதுவாக வாலிபர்கள் உதவிபுரிகிறார்களாம். உலகம் பலவிதம்; வாலிபர்கள் ஒருவிதம்; வயோதிபர்கள் வேறொருவிதம்.

* * *

பச்சை கட்டுவோரும் சிவப்புக் கட்டுவோரும் ஒருபுறம்; துண்டுப்பத்திரங்கள் இன்னொருபுறம். தெருவீதிகளிலும் கார்களிலும் சிவப்புக்கொடிகள் தொங்குகின்றன. சில கார்களுக்குப் பச்சைகட்டப்பட்டிருக்கிறது. வலிகாமம் வடக்கில் ஒருவர் தான் மாவரியெடுத்துக் கொடுத்தாராம். வடமராட்சியில் மற்றவர் தான் எடுத்துக் கொடுத்தாராம். பலவாறாகவும் கல்வியறிவற்ற வாக்காளரை ஏமாற்றஞ் செய்பவர்களும் உளர். சில ஏச்சண்டுமார் வண்ணாரைப் புறம்பாக்கி அவர்களின் வாக்குக் கோருவர், சிலர் அம்பட்டரின் வாக்கைக் கோருவர். ஆனால் வண்ணாரைக்காட்டிலும் அம்பட்டரே ஏச்சண்டுமார் பதவிபெறத் தகுதியுடையவர். அவர்கள் தலையில் கத்தி வைத்தபடியே கதைத்துக்கொள்ளுவார்கள். அச்சமையத்தில் வாக்கைப்பெறுதலும் சுலபம்.

## சூதாடியவருக்கு 6 மாதம்.

சென்ற செவ்வாய்க்கிழமை கொழும்பு செக்கடித் தெருவில் சொலமன் அப்பு என்பவன் சட்டவிரோதமாகச் சூதாடினான் என்ற குற்றத்தின் பேரில் கொழும்புப் பொலிஸ்நீதிபதியால் 6 மாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டான். இவன் முன்னரும் பன் முறை குற்றப்பட்டவனாகும்'

# இந்தியச்செய்திகள்.

## அடுத்த காங்கிரஸ் தலைவர்

லட்சுமணபுரியில் கூடவிருக்கும் அடுத்த காங்கிரஸ் சபையின் தலைவராகப் பண்டித ஜவஹர்லால்நேரு அவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். இப்போது இந்தியாவில் 21 மாகாணக் காங்கிரஸ் சபைகள் உள. அவைகளில் பெரும்பான்மையான சபைகள் பண்டிதரே தலைமை வகித்தற்கு ஏற்றவரென ஏகமனதாய் அபிப்பிராயங் கூறின. பண்டிதர் இப்போது ஜெர்மனியிலிருந்து லண்டன்நகர் சென்றுள்ளார். அங்கே இந்தியவிஷயமாக வேலைசெய்வார். புதிய அரசியற்றிட்டத்தைக் கண்டித்து ஒரு சொற்பொழிவு தேசாளுமன்ற மண்டபத்தில் செய்வாராம். இம்மாதக் கடைசியில் இந்தியாவை நோக்கிப் புறப்படுவாரெனவும் சொல்லப்படுகிறது. லட்சுமணபுரியில் காங்கிரஸ்சபை கூடுவதற்கு ஒரு மண்டபம் அமைத்தற்கு இடம் ஒழுங்குசெய்யப்பட்டது. அந்த இடம் மோத்திலால் நகரென அழைக்கப்படும். அங்கே ஐக்கியமாகாணக் காங்கிரஸ் தலைவர்களுள் ஒருவராகும் ஸ்ரீயான். புருடோத்தமதாஸ் தண்டன் என்பவர் தேசியக்கொடியை நாட்டிவேலையை ஆரம்பித்துள்ளாராம்.

## லாகூரில் சத்தியாக்கிரகம்

லாகூரில் சீசகியரும் மகமதியரும் சண்டைசெய்வதை நிற்பாட்டிச் சத்தியாக்கிரகஞ் செய்ய ஆரம்பித்தனர். அரசினர் உத்தரவை மீறிச் சீக்கியர் தமது "கிர்பன்" என்னும் வாளைக் கொண்டுசெல்லுகின்றனர் இப்படிச் செய்ததற்காக இதுவரையில் 170 சீக்கியர் கைதியாக்கப்பட்டனர். மகமதியர் சீக்கியரின் ஆலயக் கட்டிடத்துக்குள் இருந்து இடிக்கப்பட்ட ஷாகித்கஞ்ச் பள்ளிவாசலுக்குள் சென்று வணங்கவேண்டுமென அரசினர் கட்டளையை மீறிக் கூட்டங் கூட்டமாகச் செல்கின்றனர். இவ்வாறு சட்டத்தை மீறினதற்காக "மகமதியரும் பலர் கைதிகளாயினர். இவ்விருவகுப்பினர்க்கு மிடையிலுள்ள வாக்குவாதம் எப்போது தீருமோ?

## தமிழ்நாட்டுக் காங்கிரஸ் சபை

புதிதாகத் தெரியப்பட்ட தமிழ் நாட்டுக் காங்கிரஸ் சபை காரைக்குடியில் கூடி ஸ்ரீமான். சத்தியமூர்த்தியையே மற்றைய வருடத்துக்கும் தலைவராகத் தெரிந்தது. அகில இந்திய காங்கிரஸ் நிர்வாகசபைக்கும் 8 அங்கத்தவர்கள் தெரியப்பட்டனர். மாகாணக் காங்கிரஸ் காரிய நிர்வாக சபைக்கும் அங்கத்தவர் தெரியப்பட்டனர்.

## சுபாஷ் சந்திரவஸு

வியன்னாவில் வைத்திய சிகிச்சை பெற்று வந்த இவர் இப்போது நல்ல சுகமடைந்துவிட்டனர். இவர் இப்போது ஜெர்மனியின் தலைநகராகும் பேர்னில் நிற்கின்றார். அங்கிருந்து அயர்லந்துதேசம் சென்று டீ வெலரா அவர்களைக் காண்பார். பின் இம்மாத நடுப்பகுதியில் புறப்பட்டு இந்தியாவிற்கு வருவார். காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் சமுகமளிப்பாராம்.

## எதிலும் இராஜத்துரோகம் மணக்கின்றது.

இற்றைக்கு ஒருவருடத்துக்கு முன் மகாத்மா காந்தியடிகள் கிராமவாசிகளின் நிலையைச் சீர்ப்படுத்தும் பொருட்டு "அகில இந்திய கிராமத் தொழிற் சங்கம்" என்ற பெயருடன் ஒரு ஸ்தாபனத்தை நாட்டினர். இதன் பூரண நோக்கம் கிராமவாசிகள் தமது கிராமங்களில் வயதியான தொழில்களை ஆரம்பித்து நடத்தி ஊதியம் பெறுவதே. இதற்கு வேண்டிய உபகரணங்களையும் உதவியையும் அளித்தற்காகவே இச்சங்கம் ஏற்பட்டது. இச்சங்கம் கிராமவாசிகளின் நிலைமையைச் சீர்ப்படுத்தும் நோக்கமாக எழுந்தது. அரசினருடன் விரோதம் பாராட்டுவாவது, அன்றேல் அரசியல் விஷயங்களில் கலந்து கிளர்ச்சியை உண்டுபண்ணவாவது நோக்கங் கொண்டதன்று. அரசினர் அவநம்பிக்கையுடையராய் இச்சங்கத்துடன் அரசாங்க உத்தியோகத்தர் கலந்துழைக்கப்படாதென முன்னர் ஒரு சுற்று நிருபம் விட்டனர். இப்போது இந்தியாவைப்பற்றி வெளியிட்ட 1933–1934ம் வருட அறிக்கையில் மேற்கூறிய சங்கம் ஏற்பட்டதற்கு இரகசியத்தில் சில நோக்கமுளதெனக் கூறுகின்றனர். காந்தியடிகள் அதை ஏற்றுக்கொண்டாரா? அன்று. அரசினர் எங்கும் எதிலும் இராசத்துரோகத்தையே மணக்கின்றனர்.

## எப்போது சமரஸம் ஏற்படுமோ?

வங்காள மாகாணத்தில் காங்கிரஸ் கட்சியினர் இரண்டாகப் பிரிந்துள்ளார். இவர்கட்கிடையில் சமாதானத்தை நாட்டப் பல காங்கிரஸ் தலைவர்கள் முயன்றும் நன்மை எய்தவில்லை. இருகட்சியினரும் பிடிவாதமாகவே நிற்கின்றனர். இவ்விருகட்சியினரையும் விட்டுவிட்டு இப்போது காங்கிரஸ் தலைவராகும் பாபு இராஜேந்திர பிரசாத் ஒரு புதியசபையை ஏற்படுத்தியுள்ளார். அச்சபையில் இருகட்சியினரும் அங்கத்துவம் பெற்றுள்ளார். புதிதாக ஏற்பட்ட இச்சபையும் சமாசத்தைக் கொண்டுவந்ததாகக் காணோம், Dr. B C. ராயின் கட்சியினர் இச்சபையில் தமக்கு பாருனோர் அதிகப்பற்றாக இருக்கின்றனரென அதிருப்தியடைந்துள்ளார். பின்எப்படி இவ்விவாதம் முடிவு செய்யப்படலாமோ தெரியவில்லை. தீவிர தேசிய நோக்குடைய வங்காளத்தலைவர்கள் இவ்வாறு மிகப் பிடிவாதமாக நிற்பது நகைப்புக்கிடமாகிறதே.


வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

"நாட்டுச்சீவன சாஸ்திர பாட புத்தகம்"

A Text Book of Rural Science (Tamil)

ஆக்கியோன்:— சுன்னாகம் மயிலணிச் சைவவித்தியாசாலை ஆசிரியர்,

திரு. இ. தர்மலிங்கம் அவர்கள்.

இந்நூல் தமிழ் J. S. C., S. S. C., ஆசிரிய தராதரப் பத்திர வகுப்புகளுக்குரிய பாட அட்டவணையை முற்றாக அநுசரித் தெழுதப்பட்டது.

சமீபத்தில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு அருந்துணையாயுள்ளது.

சிறந்த விஷயங்களைக் கொண்டது.

பல சித்திரங்களைக்கொண்டு மிளிர்வது.

பல அறிஞர்களின் மதிப்புரையைக் கொண்டது

முன்னூறு பக்கங்களுடையது.

குறைந்த விலையில் கிடைக்கக்கூடியது

வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தாரால் வெளியிடப்பெற்றது.

விலை ரூபா 2.

கிடைக்குமிடம்:-

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.

## "பூரண சுதந்திரத் திருநாள்"

சென்ற திங்கட்கிழமை (27-1-36) இந்தியா வெங்கணும் பூரண சுதந்திரத் திருநாள் மிக ஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டது. இற்றைக்கு ஐந்துவருடங்கட்கு முன் இந்தியத் தலைவர்கள் காரச்சியில் ஒருங்கு சேர்ந்து தாம் பூரண சுதந்திரத்தை எப்படியும் பெறவேண்டுமென நிச்சயஞ் செய்தனர். அத்தினம் சென்ற சிலவாண்டுகளாக ஒவ்வொருவருடமும் கொண்டாடப்பட்டுவருகிறது. அஹிம்சையைக் கைக்கொண்டு எவ்வித தியாகத்தைச் செய்து, எவ்வித கஷ்டத்தையும் அனுபவித்தாயினும் தமது பிறப்புரிமையாம் சுதந்திரத்தைப் பெறவேண்டுமென்பதே இந்தியத் தலைவர் செய்த பிடிவாதமான தீர்மானம்.

## மகாத்மாவின் தேகாரோக்கியம்

தற்போது ஆமதபாத் நகரில் சென்று வசிக்கும் மகாத்மாகாந்தியடிகளின் தேகாரோக்கியம் இன்னும் நன்னிலையை அடையவில்லையாம். இப்போதும் அவரது இரத்தோட்டம் தடைப்படுகிறதெனச் சொல்லப்படுகிறது. இரவில் நித்திரையின்மையும் பெருங் கஷ்டத்தை வருவிக்கின்றது. இவரது தேக நிலையை வைத்தியர் பரீட்சித்துப் பார்த்து இவர்க்கு ஆறுதல் மிக அவசியமெனக் கூறியுள்ளார். ஆமதபாத்தில் பழைய நண்பர் மத்தியில் வாழ்வது இவருக்குக் களிப்பைக் கொடுக்குமெனவும் சொல்லப்படுகின்றது. இவரது தேக நிலை நன்கு குணப்பட்டவுடன் இவர் ஸ்தாபித்த அகில இந்திய கிராமத்தொழிற் சங்கத்தைக் குறித்து அரசினர் வெளியிட்ட நீதியீனமான அபிப்பிராயத்திற்குப் பதில் எழுதுவாராம்.

## கனம். C. F. அன்ட்றூஸ்

இந்திய நண்பராகும் C. F. அன்டுறூஸ் அவர்கள் இப்போது லண்டன் நகரில் வசிக்கின்றனர். அவர் அங்கிருந்து பனமா கால்வாய் மார்க்கமாக நியுஜீலந்து தேசம்செல்வார். இத்தேசத்தை மாத்திரமன்றி அவுஸ்திரேலியா, பிஜித்தீவு முதலிய இடங்கட்கும் சென்று இந்தியாவைப் பற்றிச் சொற்பொழிவு செய்வார். பின் அங்கிருந்து சிங்கப்பூர் மார்க்கமாக ஆகஸ்ட் மாதமளவில் இந்தியா வந்துசேர்வாரென்றும் சொல்லப்படுகிறது.

---

## அரசர் பெருமானின் அந்தியக்கிரிகைகள்.

### 7000 பேர் காயமடைந்தனர்.

### 800 பேருக்குக் கிறுதி

சென்ற செவ்வாய்க்கிழமை அரசர்பெருமானின் பூதஉடம்பு டின்சோவர் மாளிகையிலுள்ள செயின்ற் ஜோர்ஜ் என்னும் தேவாலயத்தில் மிக மரியாதையுடன் புதைக்கப்பட்டது. பிரான்சிய தேச அரசியற் தலைவரும் வேறு ஐந்து அரசர்களும் சமுகமளித்தனர். ஜர்மனிய அரசாங்கத்தின் சார்பாக அத்தேச அந்நியநாட்டு மந்திரியாகும் வொன்நீயுறெத் என்பவர் சமுகமளித்தனர். பிரேதம் ஊர்வலமாகக் கொண்டுசெல்லப்படும்போது கோடிக்கணக்கான சனங்கள் கூடிச்சென்றனர். லட்சக்கணக்கானோர் தமது மாளிகையின் பலகணிவாயில்களின் மூ தமது அரசர்க்கு கடைசி மரியாதை செய்தனர். ஊர்வலம் மூன்றுமைல் நீளமுள்ளதாகவிருந்ததாம். சனநெருக்கம் காரணமாக 7000 பேர் காயமடைந்தனர். காயமடைந்தோரில் 350 பேர் வைத்தியசாலைக் கனுப்பப்பட்டனர். 800 பேர் கிறுதியேற்பட்டு வைத்திய சாலைக்கனுப்பப்பட்டனர்.

# அபிசீனிய மகாயுத்தம்

## இரு போர்முனையிலும் கொடிய யுத்தம்

### அநேகர் கொல்லப்பட்டனர்

## ஐரோப்பாவிலும் யுத்தம் நிகழக்கூடுமாம்

### ஜேர்மனியரின் உதவியை இத்தாலியர்நாடுகின்றனர் | இத்தாலியர் எகிப்தியரைப் பயமுறுத்துகின்றனர்

## செஞ்சிலுவைப்படையினர் மறுபடியும் தாக்கப்பட்டனர்

### அபிசீனியரின் பெருந்தன்மை ● இத்தாலியரின் சின்னத்தனம்

## மழைகாலம் வந்துவிடின் இத்தாலியர் முன்னேறவியலாதாம்

யுத்தம் ஒருபோது மத்தித்தரைக்கடலிலும் ஏற்படுமோ என இத்தாலியர் சிறிது அச்சமடைகின்றனர். பிறிட்டிஷாருக்கும் பிரான்சியருக்கும் அதிக நட்பு ஏற்படுவதைக் கண்டதும், இத்தாலியர் துக்கமடைகின்றனர். பெற்ரோல் விஷயமாக நடபடிக்கை ஆரம்பிக்கப்படின் இத்தாலியர் முதலாவதாகப் பிறிட்டிஷாரையே எதிரிகளாக எண்ணி அவரைத் தாக்க முன்வரக்கூடும். எவ்விஷயத்திலும் தமக்கு நட்டஞ் செய்ய முன்னணியில் நிற்பவர் பிறிட்டிஷார் என்பது இத்தாலியருடைய முழுநம்பிக்கை. மத்தித்தரைக்கடலில் செய்யும் ஆயத்தங்களின் பயனாக, யுத்தம் நிகழின், அது ஐரோப்பா முழுவதிலும் பரம்பக்கூடுமென முசோலினி சொல்லுகிறார். இத்தாலியர் ஜேர்மனியரின் நட்பினைப் பெறப் பார்க்கின்றனர். ஜெர்மனியின் எல்லைப்புறத்தைப் பெலப்படுத்திக்கொண்டபின்னரே மத்தித்தித்தரைக்கடலில் உதவி செய்ய எண்ணுவது பிறிட்டிஷார்க்கு உசிதமென இத்தாலியர் கூறுகின்றனர். வடக்குப் போர்முனையில் இத்தாலியரா அல்லது அபிசீனியரா வெற்றியடைந்தனரெனச் சொல்ல முடியாதாகின்றது. இரு பகுதியினரும் தமக்கே வெற்றியுளதென்கின்றனர். தெற்குப்போர்முனையில் இத்தாலியர்தான் சிறிது வெற்றியடைந்துள்ளாராம். சமீபத்தில் இத்தாலியரிடமிருந்து திருப்பிப் பிடித்த பிரதேசங்களை மறுபடியும் இத்தாலியர் பிடிக்க முயல்கின்றனரென்றும், இந்நோக்கத்துடன் மிக உக்கிரமாக பீரங்கிப்பிரயோகம் இத்தாலியரால் செய்யப்படுகிறதென்றும் கூறப்படுகிறது. இப்பிரதேசத்தில் அபிசீனியர் சார்பில் தளகர்த்தாக நின்று போர்செய்யும் ராஸ்காஸா என்பவர் இத்தாலியரைத் தாம் துரத்திவிட்டதாகக் கூறுகின்றனர்.

ராஸ்சேயம் அவர்களது சேனை இரண்டாகப் பிரிந்து இத்தாலியரை மறைவாகச் சென்று தாக்குகின்றனவாம். அகமே என்ற இடத்தில் இவரது சேனைவீரர் புகுந்து இத்தாலியர்க்குப் பெருநட்டம் விளைத்துவிட்டனராம். இப்பிரதேசங்களில் இத்தாலிய விமானங்கள் பறந்துசென்று நச்சுப்புகையை வருவிக்கும் குண்டுகளைப் போடுகிறார்களாம்.

இற்றைக்குச் சிலநாட்களுக்கு முன் தெற்குப் போர்முனையில் இத்தாலியர் அடைந்த வெற்றியைப்பற்றிய விபரங்கள் இப்போது வெளியாயிருக்கின்றன. 250 மோட்டார் லொறிகளும் 30 ராங்கிகளும் சடுதியாக ராஸ்டெஸ்ராவின் போர்முனையை டோலோ என்ற இடத்தில் தாக்கினர். அபிசீனிய சேனை கலைந்து ஓட்டம் பிடித்தது. அபிசீனியர் பக்கத்தில் அனேகர் கொல்லப்பட்டனர். நெகிலி என்ற நகரும் இத்தாலியரால் கைப்பற்றப்பட்டது. அங்கே இப்போது 4000 இத்தாலிய வீரர்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றனர். ஆகாய விமானங்கள் வந்து இறங்குவதற்கும், பின் கிளம்பிப் பறப்பதற்கும் இவ்விடம் மிக வசதியான இடமாகும். இம்மாதத் தொடக்கத்துடன் இத்தாலிய சொமாலிலந்து பிரதேசத்தில் மிகக் கடுமையாக மழை பெய்ய ஆரம்பிக்குமென்றும் அப்படியாயின் இத்தாலியரின் முன்னேற்றம் தடைப்படுமென்றும் சொல்லப்படுகிறது.

சர்வதேச சங்கத்தினர் விருப்பப்படி எகிப்திய அரசினர் நடபடிக்கைகளைக் கையாண்டுவருகின்றனர். இவ்வாறு செய்கின்றமையால் இத்தாலியர் பெரு நட்டமடைகின்றனரென்றும் அதற்காகப் பின்னர் ஒருகால் நட்டஈடு அறவிடவேண்டிவரக்கூடுமென்றும் இத்தாலிய அரசினர் எகிப்திய அரசினர்க்கு அறிவித்துள்ளார். எகிப்தியர் சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம் வகியாதிருக்கும்வரையும் நடபடிக்கைகள் கையாளவேண்டிய அவசியம் கிடையாது என்கின்றனர்.

முசோலினியவர்கள்முன்னரிலும்பன்மடங்கு திடமும் உற்சாகமும் உடையவராய்க் காணப்படுகின்றார். ஐம்பதினாயிரம் வேலையாளரைத் தாம் யுத்தமுனைக்கு அனுப்பப்போவதாகவும்அவர்கள்யுத்தம் தளர்ச்சியடையாது நடப்பதற்கு உறுதுணையாவரென்றும் சொல்லப்படுகிறது. மேலும் சென்றவருடம் மழைக்காலத்திலும் லட்சம்பேரைக் கொண்ட தமது படைகள் கஷ்டத்தை யடையவில்லையென்றும் இப்போதும் அவர்கள் பன்மடங்கு உற்சாகத்துடன் போர்செய்வார்களென்றும் சொல்லப்படுகின்றது.

வடக்குப் போர்முனையில் தெம்பியன் மாகாணத்தில் அபி அடி என்ற இடத்திலுள்ள இருதேவாலயங்களை இத்தாலிய விமானங்கள் குண்டுபோட்டுத் தீக்கிரையாக்கிவிட்டன வென்று சொல்லப்படுகின்றது.

மக்கலே நகருக்கணித்தாக ஓரிடத்தில் அபிஸீனியர் பதுங்கியிருந்து சடுதியில் தாக்கி 35 இத்தாலியரைக் கொன்று விட்டனராம். பெற்ரோல் விஷயமாக நடபடிக்கைகள் கையாள்வதைக்குறித்து பிறிட்டிஷ் அரசாங்க மந்திராலோசனைச் சபையினர் நெடுநேரமாக ஆலோசித்தனரெனக் கூறப்படுகிறது. பெற்ரோல் விஷயமாக நடபடிக்கைகள் கையாளப்படின் அது எவ்வளவிற்குச் சித்தியடையுமென்றும் எந்தெந்த நாட்டினர் அதையேற்பாரென்பதும் யோசிக்கப்படுகின்றது.

இத்தாலிய செங்கடலிலிருந்து ஓர்வாய்க்கால் வெட்டி அதுமூலமாகக் கடல்நீரை இறித்றியா நாட்டுக்குள்ளும் இப்போது அபிஸீனியரிடமிருந்து கைப்பற்றிய ரைக்களி மாகாணத்துள்ளும் விடப்போகின்றாராம். அவ்வாய்க்கால் மூலமாகக் கப்பல்களை நாட்டிற்குள் கொண்டு சென்று அங்கிருந்து பெற்ரோல் முதலியவற்றை இலகுவில் வெளியேற்றப் போகின்றாராம். இந்நாடுகள் கடல்மட்டத்திற்குக் கீழிருப்பதால் இலகுவில் நீர்ப்பாய்ச்சப்படலாம். ஆனால் புதுக்க ஓர்வாய்க்கால்கல்மலைப்பிரதேசத்தூடாகவெட்டுவதென்றால் கஷ்டமான காரியமாகும்.

வடக்குப்போர்முனையில் இத்தாலியர் பெற்ற வெற்றியைக்குறித்து முஸோலினி மிக ஆனந்தமடைந்தார். அபிஸீனியரில் 5000 கொல்லப்பட்டனரென இத்தாலியர் வெளியிட்ட புதினத்தை அபிஸீனியர் மறுக்கின்றனர். இராக்காலங்களில் சென்று அபிஸீனியர் இத்தாலியரைத் தாக்குகின்றனராம். வெற்றிகொண்ட இடங்களைக் கைப்பற்றுவதில் இத்தாலியர் மிகவும் ஆவலாயிருக்கின்றனர். நகர்க்காவலாளர்கள் முன்னையிலும் இருமடங்காக அதிகரிக்கப்பட்டிருக்கின்றனர்.

இதுவரையில் தெற்குப் போர்முனையில் இத்தாலியர் 45 மைல்கள் முன்னேறியுள்ளாராம். சென்ற வாரத்தில் 10000 அபிஸீனியர் இறந்திருக்க வேண்டுமென இத்தாலிய சேனாதிபதியாகிய பாடகிளியோ சொல்லுகின்றார். இத்தாலியர் மென்மேலும் செஞ்சிலுவை வைத்தியசாலைகளை ஆகாயவிமானங்களிலிருந்து குண்டுபோட்டு அழித்த வண்ணமாகவே நிற்கின்றனர். காயமடைந்தோர்க்கு உதவிசெய்ய முன்வந்த இந்தப்படையினர் இனித்தங்கள் வைத்தியசாலைக்குமேல்சிவப்புக்கொடிகட்டுவதை நிற்பாட்டப்போகின்றனர். இவ்வடையாளங்களைக் கண்டே விமானங்கள் குண்டுபோடுகின்றன.

அபிசீனியரால் பிடிக்கப்பட்ட இத்தாலிய போர்வீரர் டெஸி நகரில் கொண்டுசென்று காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் மிகவும் அன்புடன் நடத்தப்படுகின்றனரென ஒரு சிறையாளர் அபிப்பிராயங் கூறியுள்ளார். இத்தாலியர் யுத்தத்தில் சிறையாகத் தாம் பிடித்தவர்களை அபிசீனியர் நடத்துவதுபோல் நடத்துவதில்லையாம்.

விளம்பரம் அரசாங்கசபைத்தெரிவு

யாழ்ப்பாணம் தென்மராட்சிப்பகுதி வாக்காளர்களுக்கு!

உங்கள் பிரதிநிதியாக

வாக்கு வல்லவரும், அரசியல் விஷயங்களில் ஆழ்ந்த அனுபவமுடையவரும், அரசாங்கசபையில் அங்கத்தவராயிருந்தவரும் அரசாங்கசபைக்குரிய சகல லட்சணங்களும் அமையப்பெற்றவருமாகிய

திருவாளர்

நெவின்ஸ் செல்வத்துரை

அவர்களையே

அன்புடன் தெரிவுசெய்யுங்கள்!

(80) 1-2-36

---

## சுன்னாகம்சந்தையில் மண்டை உடைத்தமை

சென்ற வெள்ளிக்கிழமை சுன்னாகம் சந்தையில் புகையிலை வியாபாரஞ் செய்யும் சின்னப்பு என்பவரிடமிருந்து வாடகைப்பணம் வாங்கும்பொழுதேற்பட்ட வாக்குவாதத்தில் பணமறவிடுபவரால் சின்னப்பு என்பவர் தாக்கப்பட்டதாகவும் மண்டையில் காயமுண்டாகியதாகவும் அறிகின்றேம்.

—ந. நி.




வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டுனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னுகம்:
யுவ௵ தை௴ ௨௰௨

## சாமானிய பொறுப்பன்று!

இன்னும் சிலவாரங்களுக்கிடையில் அரசாங்க சபைத்தெரிவு நடைபெறுமென்பதை யாவரும் அறிவர். தெரிவுகாலத்தில் பொது சனங்கள் தங்கள் கடமையை எவ்வாறு இழுக்கின்றி இயற்றவேண்டு மென்பதை நிதானித்து முடிவுசெய்வதும் அவசியமாய்விட்டது. யாழ்ப்பாணத்தில் மூன்று பகுதிகளில் போட்டி மிக வேகமாக நடக்கின்றது. முன்வந்த அபேட்சகர்கள் தமது ஆற்றல்களையும் தகுதிகளையும், தாம் தேசத்துக்கு இதுவரையும் செய்த அரிய தொண்டுகளையும் எடுத்துக்காட்டுகின்றனர். பொது சனங்கள் இவர்கள் கூறுவதை நன்கு நோக்கி எவரெவர் தகுதியானவரென்பதை நன்கறிந்து அவரவர்க்கே தமது வாக்குரிமையை அளிப்பதும் இன்றியமையாத விஷயமாகின்றது. அரசாங்கசபையில் அங்கத்துவம் வகித்துப் பொதுசனங்கட்கு நன்மைசெய்யக்கூடியவர் யாவரென்பதை அவதானிப்பதில் கஷ்டமதிகமிராதென்பதே எமது அபிப்பிராயம்.

தேசநலத்துக்காகச் சென்ற இருபது முப்பது வருடமாக உழைத்துவந்தவர்களும், தேசத்தின்குறைநிறைகளை நன்கறிந்தவர்களும், எவ்விஷயத்தை எவ்வழி நின்று செய்யின் காரியசித்தி யடையலாமெனத் தேர்ந்தோரும், நாட்டின் நயத்தை நாடிவந்தவருமாகிய தேசாபிமானிகளன்றோ எமது பிரதிநிதிகளாக வேண்டும். ஊரவர்களது குறைகளை எடுத்துரைத்தற்கு அவ்வூரவர் ஒருவரே தலைசிறந்தவரெனப் பல மேதாவிகள் பன்முறை கூறியுள்ளார் அரசியல்விஷமாக, அல்லது பொருளாதார நிலையைக் குறித்து எவர் இடைவிடாது உழைத்துப் பெருநன்மை செய்துவந்தாரோ, அவரை நாம் இப்போது புறக்கணியாது மென்மேலும் அத்தொண்டுகளை அவர் நன்கு செய்வதற்கு வசதி யளிக்க வேண்டும். தம்முடன் வாழ்ந்து தமது நயநட்டங்களில் பங்குபற்றி, இடைவிடாது உழைத்தவர்களை நம்பிக்கையுடன் எக்காரியத்தையும் செய்யும்படி விடலாமே. பானையும் புதிது, அடுப்பும் புதிது ஆக்கப்படும் பண்டமும் புதிது. அது என்னவாய் முடியுமென யாவர் அறிவார்? காலவெல்லை காலதச்சனையே பொறுத்தது. சூத்திரப்பாவை கயிறற்று வீழ்ந்தவுடன்தான், எல்லாம் வெளிக்கும். தேசாபிமானமும், தேசத்தொண்டும், வீரமும், ஆண்மையும்அப்போதுதான் தெரியும். உண்மையையறிந்து நடப்பின், நட்டம் ஒருபோதும் வராது. இயற்கையை நாம் வெல்வதென்பது முடியாத காரியம். செயற்கையை நம்பி, நாம் எமது மனம்போனபடி விஷயங்களைக் கையாளின், அவைகளால் எப்பயனும் வந்தெய்தாதென்பது பெரியவோர் உண்மையாகும். இதை நம்மவர் உணர்ந்து தேசநலத்தை முன்னணியில் வைத்து, தாம் என்னசெய்யவேண்டுமென்பதை முடிவு செய்ய வேண்டும். இனி ஏற்படவிருக்கும் அரசாங்கசபையில் எத்தனையோ அரிய விஷயங்கள் முடிவு செய்யப்படவேண்டி இருக்கின்றன. இப்போது அனுசரணையிலிருக்கும் அரசியற்றிட்டத்தில் எத்தனையோ மாற்றங்கள் ஏற்படுத்தப்படுமெனவுங் கூறப்படுகிறது. இவ்வரிய சந்தர்ப்பத்தில் தமிழரின் பிரதிநிதியாகச் செல்வோர், யாழ்ப்பாணத் தமிழர்களின் உண்மைப் பிரதிநிதிகளாக வேண்டும். அனுபவம் படையாது ஆரவாரிக்கும் மேளகர்த்தாக்களால் ஒரு உபயோகமும் வரமாட்டாது. வகுப்புவாதிகளாக நின்று சிங்களருடன் எதிர்த்துக் காரியம் பார்ப்போமென்று கூறும்—எண்ணும்வீணர்களும், நமது பிரதிநிதியாவதால் நன்மை ஏற்படாது. எல்லாவற்றிற்கும் தலையசைத்து அங்கு மிங்கும் படாதபடி சிலவார்த்தை கூறிக் காலத்தை மௌனமாகக் கழிக்கவல்வ சாதுக்களாலும் நன்மை வராது. சிங்கள வகுப்பினரது மரியாதையையும் கணிசத்தையும் பெற்ற ஆழ்ந்த அரசியல் வாதிகளே இச் சமையத்தில் பிரதிநிதிகளாவது மிகப் பிரதானம். ஒருவருக்காகச் சென்று இன்னொருவருக்குப் பாடுவதென்றால் அதன் கருத்து யாதாகும்? ஆகையால், பொதுசனங்கள் தாம்பெற்ற அரிய உரிமையைத் தமது நாட்டின் பொதுநன்மைக்குப் பல்லாண்டுகளாக இழுக்கின்றி உழைத்துவந்த தேசாபிமானிகட்கே கொடுப்பாராக!

## எங்குமில்லாத பேடித்தனம்

இலங்கையின் பலபாகங்களிலும் அடுத்துவரும் அரசாங்கசபைத்தேர்தல் விஷயமாக முன்வந்து அபேட்சகர்கள் மிகமுயற்சியுடன் வேலைசெய்கின்றனர். அரசாங்கசபையில் அங்கத்துவம் வகிக்க ஏற்றவர் யாரென்பதை நன்கறிந்து, அவர்க்குத் தமது அரியவாக்குரிமையைக் கொடுப்பது பொதுசனங்களின்கடனாகும். முன்வந்த அபேட்சகர்கள் தமது கொள்கைகளையும், தாம்இதுவரையும் தேசத்துக்குச் செய்த நன்மைகளையும் எடுத்துக்காட்டுவது பிழையாகாது. இவைகளை விடுத்து நாகரீகம் பெறாத காட்டுமனிதர்போல் பலாத்காரத்தை உபயோகித்து, தமது எண்ணத்தை 'நிறைவேற்றலாமெனச் சில அபேட்சகர்கள் எண்ணுகிறார்கள். இது எப்படிக்கூடும்? சமீபத்தில் பருத்தித்துறைத் தெரிவுப்பகுதியில் அநேக அக்கிரமங்கள் ஏற்பட்டதாகவும் அறிகிறோம். நீதிவழிதவறி, வீடுவாசலில்லாது அலைந்துதிரியும் வீணர்களும் காடையர்களும் சேர்ந்து பொதுசனவாழ்வுக்குப் பெரும் ஆபத்தை விழைக்கப்பார்க்கின்றனர். ஒருவனை, அவர் நண்பர்களையும் சகபாடிகளையுங்கொண்டு அறியலாமென்பது உண்மையே. கீழ்நிலையிலுள்ள சனங்களை மேனிலை யடையச்செய்வதா? அன்றேல், அவர் நிலைக்கு இறங்கிவந்து பெருங்கெடுதிகளை விளைப்பதா விரும்பப்படுவது? யாவர் அரசாங்கசபையில் அங்கத்துவம் வகிப்பதற்கு அருகரென அறிவதற்கு, கூட்டங்களுக்குக் கல்லெறிதல், வீடுகளிற் புகுந்து பெண்களையும் மற்றையோரையுந் தாக்குதல், அசப்பிய வார்த்தைகள் பொதிந்த துண்டுப்பிரசுரங்கள் வெளியிடுதல் என்பன இன்றியமையாதனவா? என்பதை நாம் அறியவிரும்புகிறோம். இவ்வித இழிந்தவழிநின்று வெற்றிபெற்று அரசாங்கசபையில் அங்கத்துவம் வகிப்பதிலும் நாடு நாடாகச்சென்று இரந்துவாழ்தல் உசிதமல்லவா? அறிவாளர்கள் தமது அறிவினை ஏற்றவழியில் உபயோகியாதுவிடுவதைக் கண்டு நாம் பேராச்சரியம் அடைகின்றோம். பருத்தித்துறைப் பகுதியினரின் நற்பேருக்குப் பங்கம் விழைக்கும் ஆசாமிகட்கு ஆதரவளிக்கும்மேன் மக்களும், இவ் விஷயத்தில் இழுக்கடைவரெனக் கூறவும் வேண்டுமா? ஏற்ற முறையில், மற்றையோருடன் முட்டுப்படாது தேர்தலை நடத்துவதன்றோ சான்றோர் முறையாகும். ஆனால் மூர்க்கரை மூன்று நாட்களில் சான்றோராக்குவதும் முடியக்கூடிய காரியமன்று. இவ்வளவு அக்கிரமங்கட்குத் தெரிவுப் பகுதியை இடமாக்கி விட்டு, அரசாங்கசபையில் அங்கத்துவம் வகிப்பதால் என்ன பயன்? மற்றைய அங்கத்தவர் இவரை மதிப்பாரா? அரசினர் மதிப்பாரா? யார்தான் மதிப்பார்? எந்த அக்கிரமங்கட்கும் அளவிருக்குமென்பதுநிச்சயம். இப்போது விஷயங்களை நன்கு நோக்கில், பருத்தித்துறைப்பகுதியடைந்துள்ளபரிதாபநிலையை மற்றையவிடங்கள் அடையவில்லையென்றேகூறவேண்டும். இவ்வித அக்கிரமங்கள்ஏற்பட்டுநாட்டிற்குப்பெரும் அவமதிப்பினை யுண்டாக்குவதற்குக் காரணங்கள் யாது? காரணர் யார்? என்பதை நன்குநோக்கி உறுதியாக நிற்பின், ஒருபோது இனிமேலாவது நன்மைகள் வந்தெய்துமே. அன்றேல், நிலை கவலைக்கிடமாய்ப் பேராபத்தைக் கொண்டு வருமெனத் துணிவாகக் கூறுவாம். நீதிவழி நின்று உண்மையைக் கடைப்பிடியாது பலாத்காரத்தை உபயோகிப்பது பேடித்தனமன்றி வேறு யாது?

## மரவரியைக் கொணர்ந்தவர் யாவர்?

அரசினர், மரவரியை வலிகாமம் வடக்கில் அனுட்டானத்துக்குக் கொணர்ந்து பரீட்சித்துப் பார்த்து, அது ஏற்றதாயின் யாழ்ப்பாணத்தின் மற்றைய பாகங்கட்கும் உபயோகத்தில் கொண்டுவரலாமென எண்ணினது நேற்றின்றல்ல. மரவரி வலிகாமம்வடக்கில் கொண்டுவருவதைக் குறித்து அரசினர் இற்றைக்கு ஆறு ஏழு வருடங்கட்கு முன்னரே ஆலோசித்து முடிவுசெய்தனர். இவ்விஷயத்தைக் குறித்து, எமது பத்திரிகையும் இற்றைக்கு மூன்றுவருடங்கட்கு முன் அபிப்பிராயங்கூறியதுண்டு. மரவரிக்குக் கிளர்ச்சி செய்ததும், அதைஅரசினர் ஏற்று அனுட்டானத்துக்குக் கொண்டுவர முடிவுசெய்ததும் சென்ற அரசாங்கசபை உபதெரிவுக்கு (1934-ம் வருடம் ஆடிமாதம்) முன்னமேயாகும். இதற்கு முன்னரே பூநகரி முதலியவிடங்களில் மரவரி வைக்கப்பட்டுள்ளது. உபதெரிவில் தெரிவுபெற்ற திரு. சு. நடேசபிள்ளையே மரவரியைப் பெற்றுக் கொடுத்தனரென ஒரு' தப்பான அபிப்பிராயம் பலராலும் கூறப்படுகின்றது. மரவரிவிஷயத்தை அரசாங்கசபையில் ஒருபோது போட்டடித்தவர் அவரெனக் கூறில், அது உண்மையாகும். உள்நாட்டு மந்திரியாராகும் கௌரவ. சேர் ஜெயத்திலகா அவர்கள்பெருந்தன்மையாலேயே மரவரித்திட்டம் அரசாங்கசபையில் நிறைவேற்றப்பட்டுச் சட்டமாயது. இதுவே புண்மை. இதைவிட்டு காகமிருக்கப் பனங்காய் விழுந்தவாறு ஒருவர் தலையில் இல்லாதவொன்றைச் சுமத்துவது ஏற்றதாகாதே. மரவரியைப்பற்றிய சரித்திரங்களை நன்கறிந்தோர்க்கு இவ்வுண்மை புதியதன்று.

## அடுத்தகாங்கிரஸ் தலைவர்

இந்தியாவில் எல்லாமாகாணங்களும் பண்டிதர் ஜவஹர்லால்நேரு அவர்களையே லட்சுமணபுரியில் சமீபத்தில் கூடவிருக்கும் காங்கிரஸ் சபையின் தலைவராகத் தெரிவுசெய்துள்ளன. இத்தெரிவுகாலத்தின் கோலத்தையும் இந்திய அரசியல் நிலைமையையும்நோக்கின் இதுமிகவும் ஏற்றதென்பதை எவரும் மறுக்கமாட்டார். மகாத்மாகாந்தியடிகளுக்கு அடுத்தபடியாக தேசமக்களால் பெரிதும் ஓம்பப்படும் தலைவரொருவர் உளரேல் அவர் பண்டிதர் ஜவஹர்லால்நேரு அன்றி வேறொருவராகார். இணையில்லாத் தேசபக்தியும், ஒழுக்கமும், தகுதியும், எத்தியாகத்தையும் செய்யத்தக்க துணிபும் இவரைப்போல் வாய்க்கப்பெற்றவர்வேறெவருமின்று. இந்த அரிய சந்தர்ப்பத்தில் காங்கிரஸ் சபையாகும்பெரியகப்பலை ஓட்டச்செய்யக்கூடியதலைவர் இவரேயாகும். செய்யஆரம்பித்தஎவ்விஷயத்தையும்நேர்மையுடனுர்ஊக்கத்துடனும்நின்று திடமாகவாற்றுவார். இவர் கொள்கைகள் பழைய வழிகளில் நிற்போர்க்கு ஒருபோது ஏற்காதிருக்கலாம். ஆனால் அவர் தாம் எடுத்துரைப்பனவற்றை மிகத் தெளிவாகவும் உதாரணத்துடனும் நிலைநாட்டும் வன்மையுடையார். புதிய அரசியற்றிட்டத்தை ஏற்பதா அன்று என்பது இப்போதுஅவசியம் முடிவுசெய்யப்படவேண்டிய விஷயமாகிறது. இந்திய சட்டசபைகளிற் புகுவதுடன் நில்லாது, காங்கிரஸ்வாதிகள் மந்திரிப்பதவி முதலியவற்றை ஏற்பதன்விஷயமாகவும்ஒரு முடிவுக்கு வரவேண்டும். இவ்விஷயங்களை நன்காராய்ந்து முடிவான அபிப்பிராயங் கூறி, இந்தியரை ஏற்றவழியில் நடத்திச்செல்லும் தகுதியும் பண்டிதர்க்கு உண்டு. இவரும் இவர் தந்தையாரும் இந்திய மாதாவுக்காகச் செய்த தியாகங்கள் இம்மட்டா? எத்தனை முறையாக இவர் சிறைத்தண்டனைபெற்றார். இவர் தந்தையார் இந்திய சாதியினர்க்கென லட்சக்கணக்கான பெறுமதியுள்ள தமது மாளிகையைக் கொடுக்கவில்லையா? இற்றைக்கு ஏழு வருடங்கட்குமுன் அதாவது 1929-ம் வருடம் இவரே காங்கிரஸ்தலைவராகத்தெரிவுசெய்யப்பட்டவர். மறுபடியும் இவர் தெரியப்படுதல் இந்தியாவின் நற்கால அறிகுறியேயாகும்.

## முள்ளியவளை அரசினர் வைத்தியசாலை அதிகாரி

சென்ற பத்துவருடங்களுக்கு மேலாக முள்ளியவளை யென்னும் பகுதியில் அரசினர் வைத்தியசாலையில் கடமைபார்த்து அப்பகுதியிலுள்ளவர்களது நன்மதிப்பையும் பூரண ஆசீர்வாதத்தையும் பெற்றுள்ள திரு. சொர்ணவடிவேல் அவர்கள் வேறிடத்துக்கு மாற்றப்படுவதைக் குறித்து, மேற்படி பகுதியிலுள்ள பொதுசனங்கள் மிகவும் வியாகுலமடைவதாக எமக்குப் பலகடிதங்கள் கிடைத்துள்ளன.

அக்கடிதங்களிலிருந்து திரு. சொர்ணவடிவேல் அவர்களின் பலவித வைத்தியத்திறமையும் அவர்கள் பொதுசனங்களுக்குச் செய்துள்ள அரிய சேவைகளும், சமயசம்பந்தமாகவும், வேறுபலவகைகளிலும் ஆற்றியுள்ள தொண்டுகளும் பொதுசனங்கள் அவர்மீது கொண்டுள்ள அன்பும் புலப்படாநிற்கின்றன.

திரு. சொர்ணவடிவேல் அவர்களை வேறிடத்துக்கு மாற்றுதிருக்கும்படி பொதுசனங்கள் அரசினரைப் பன்முறை வேண்டிக்கொண்டதாகவும், அப்படியிருந்தும் அவர் மாற்றப்படவேண்டிய சந்தர்ப்பமேற்பட்டால் சமீபமான இடத்துக்கே மாற்றப்படவேண்டுமென்றுங் கேட்டுக்கொ

## அங்கும்–இங்கும்.

ஊரைச் சுற்றிப் பார்ப்பதற்கு இதுவேதருணம். அறியாத இடங்களை அறிதற்கும் முகப்பழக்கம் பெறுதற்கும் இச் சமயத்தை விடக்கூடாதெனப் பலர் மோட்டாரில் அவர்களுடனும் அவர்களில்லாது அவர் பேர்சொல்லியும் திரிகின்றனர். இதுவுமோர் நாட்டாண்மை போலும்.

*　　*　　*

கல்கத்தா உயர்தர நீதிமன்றத்தில் சென்ற சனிக்கிழமை நிதானந் தவறிய ஒருவர் சென்று முதல்நீதிபதியின் ஆசனத்தமர்ந்து தன்னை நீதிபதியெனயாவரும் அழைக்கவேண்டுமென விரும்பினர். பொலிசார் இவரைக்கைதிசெய்து வேறோர் நீதிமன்றத்தில் நிறுத்தினர். நீதிபதியின் கேள்விக்கு மறுமொழியாகத் தான் ஒவ்வொரு சனிவாரமும் நீதிபதியாகவிருக்கும்படி நியமிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னான். நீதிபதி "உனக்கு ஒருவருட ஆறுதல் தருகிறேன்" என்று ஒருவருடச் சிறைவாசம் விதித்தனர்.

*　　*　　*

[illegible] அரசியற்றிட்டப்படி வாக்குரிமையை முன்பின்பாராதுஎல்லாருக்கும் அளித்தமையாற்றான் இவ்வளவு சங்கடங்கள் ஏற்படுவதாயின. பருத்தித்துறைப் பகுதியில் இப்போதுபார்த்தால் காடையர்களின் அரசியலே நடப்பதாகக் கூறப்படுகிறது. அங்கேயொரு ஹிற்லரும் இருக்கிறாராம். அவர் என்னசொன்னாலும் நடக்குமாம். இந்த ஹிற்லரைப்பற்றி ஜெர்மனியிலுள்ள ஹிற்லருக்கு ஒருநிருபம் விடுத்தாலோ. அவரும் ஆநந்தமடைவர். பேஷ்!

*　　*　　*

ஊரிலே யாவராலும் கணிக்கப்படும் மேன்மக்கள் முன்வந்து வழிகாட்டின், இவ்வளவு தொல்லைகள் ஏற்படநியாயமில்லை இவர்கள் மறைவில் நிற்க, கல்வியறிவில்லாத மூடர்கள் மண்டையுடைபடுகின்றனர். அரசாங்கசபையின் அங்கத்துவத்தை இவ்வளவு அநீதியான வழியால் தேடவேண்டுமா? வாழ்க்கையே அநீதிவழிச்செல்ல, அரசாங்கசபைத் தெரிவு மாத்திரம் உயரியவழியில் எப்படிச் செல்லும்? தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுமட்டும் இருக்கும் வரையும் இப்படியேதான்.

*　　*　　*

ஒருவகுப்பினரின் வாக்குரிமையைப் பெறுதற்காகத் தனது பிறப்புரிமையை ஒருமுறை இழந்தால், பின் அதனை எப்படிப்பெறலாம்? ஒருவர்மீது வைத்த ஆத்திரத்தால் ஊரவர்களையும் பொதுஸ்தாபனங்களையும் வாய்க்குவந்தபடி பேசிவிடலாம். எல்லாம் சேர்ந்து இப்போது வடிவம்பெற்றுவந்து ஒருங்கே எதிர்க்கின்றனவே. என்செய்வது? நம்பியிருந்த ஆட்டுமந்தைகளையும் இடையர் நினைத்தபடி மேயவிட்டுவிட்டனர். காரியசித்தியைநாடி. எதையும் செய்யலாமென எண்ணுவதால் வந்தமோசம் இது.

*　　*　　*

"அங்குசென்றாலும் சங்கடமாகிறது. இங்குதான் உதவிசெய்ய எண்ணினும் என்னைக்கண்டு எல்லாரும் வெருளுகின்றனர்" இதற்குக்காரணம் உள்நுழைந்துபார்த்தாலே தெரியும். எல்லாவிஷயத்திலும் தம்மைக் கெட்டிக்காரர்என எண்ணி சிலர் மோ

---

ண்டமைக்கிணங்கியே யாழ்ப்பாணப் பகுதிக்கு மாற்றப்பட்டிருப்பது குறித்து நாம் சந்தோஷமடைகின்றேம். திரு. சொர்ணவடிவேல் அவர்கள் பன்னெடுங்காலம் வாழ்ந்து சேவை செய்து நாட்டுக்கு நலம்பல செய்ய இறைவன் துணைபுரிவாராக.

## சைவவித்தியாசங்கத்தின் இன்றியமையாமையும் அதன் தலைவரும்

'ஈழகேசரிப் பத்திராதிபர்
அவர்கட்கு:

ஐயா, [illegible]

[illegible]சைவ உலகின் பெரும் ஸ்தாபகமாம விளங்கும் சைவ வித்தியா சங்கம் பற்றியும் சிறப்பாக அதனை நடாத்திவரும் கௌரவ ஸ்ரீமான். சு. இராசரத்தினம் அவர்களைப்பற்றியும் இப்போது சில காலமாகப் பேசப்பட்டுவருகிறது. இதனைப் பத்திரிகைஉலகிற் சிறந்து விளங்கும் தாங்கள் நன்கறிந்ததே. பத்திரிகைப் பேச்சும் உலகப்பேச்சும் எவ்வளவில் உண்மையாய் இருக்கிறதென்பதை பொதுமக்கட் குணர்த்துவான் விரும்பி இக்கட்டுரை எழுதலானேன். 'மக்களுடைய அருமையைப் பெற்றவர்களே அறிவர் மலடிதானறிவதுண்டோ" என்பதொப்ப சைவப் பணியாற்றுவோர் படும் இன்னல்களை அவரே யறிவர். ஏனைய ரறியார். யானொருவாற்றால் அறிந்த அளவில் குறித்த விஷயம்பற்றி எழுத நினைந்தேன். ஓரளவில் எனது கட்டுரை பொதுமக்கட்கு உண்மை யுணர்த்துமென்பதையும், அதற்குத் தங்கள் பத்திரிகை இடந் தருமென்பதையும் பூரணமாய் நம்புகிறேன்.

"சிற்றம்பலம்"
காரைநகர்.

சைவ சமயமானது அநாதியாயுள்ளது. சிவத்தோடு தொடர்புள்ளது. இறையருள் பெற்ற பெரியோர் பல்லாயிரவரால் நூல்கள் வளர்ச்சியாக்கம் பெற்றது. இதுவே யாழ்ப்பாண மக்களின் சமயமென்பது. போர்த்துக்கீச, ஒல்லாந்த ஆட்சியின் பேற்றால் யாழ்ப்பாணத்தில் சைவ சமயநிலையானது மரணத்தறுவாயில் இருந்தது. இந் நிலையிலேயே ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் தோற்றினார்கள். நாவலரவர்கள் சைவ உலகிற்குச் செய்த ஆக்க வேலைகள் பல பாடசாலைகளமைத்தல், சைவப்பிரசங்கங்கள் செய்தல், சைவ நூல்களை அச்சிடுதல் துண்டுப்பத்திரங்கள் வெளியிடுதலாகியன ஆக்க வேலைகளிற்சிறந்தன. அவர்கள் எழுதிய "யாழ்ப்பாணச்சமயநிலை" என்னும் பகுதி அக்கால யாழ்ப்பாணத்தின் நிலையைக்காட்டும். அவர்களின் வேலையாலன்றோ யாழ்ப்பாணம் இப்பொழுது இந்நிலையிலிருக்கின்றது. அக்காலத்து அவர்களின் வேலைக்குச் சைவர்களே பெரும் இடையூறாய் இருந்திருக்கிறார்கள். இதனை நாவலரவர்களே கூறியிருக்கின்றார். "………… நம்முடைய சைவசமயிகள், தங்கள் சமயமும் பாஷையும் விருத்தியடையும்பொருட்டு நான் செய்யும் முயற்சிகளுக்கு உதவிசெய்யாமை மாத்திரையின் அமைபாது, பெரும்பான்மையும் அவமதிப்பும் இடையூறுமே செய்கிறார்கள்……..தற்காலத்திலே சைவ சமய விருத்திப் பொருட்டு முயலும் சிறியேனுக்குச் சைவசமயிகளாலேயே அவமதிப்பும் இடையூறும் செய்யப்படுகின்றன. பரசமயிகளோ எனக்கு இடையூறு செய்யவுமில்லை, என்னை அவமதிக்கவுமில்லை இஃதென்னையாச்சரியம்!…………" என நாவலரவர்கள் கூறியிருப்பதை அன்பர்கள் கருத்தூன்றிச் சிந்திப்பாராக. சைவர்கள் மாறாயிருப்பவும் ஏனைய மதத்தினர் (கிறீஸ்தவர்) அவர் செயலைப் போற்றவுமாக நாவலரவர்கள் சைவ வளர்ச்சியின் பொருட்டுச் செய்த வேலைகள் சொல்லுந்தரத்தனவல்ல. தமதுஉடல், பொருள், ஆவி மூன்றையும் சைவசமய வளர்ச்சியின் பொருட்டே செலவு செய்துள்ளார்கள். இதன் பொருட்டாக இல்வாழ்க்கை நிலையைத் தானும் விரும்பினாரில்லை.

"…….. கன்னியை நாயகனிடத்து ஒருதுட்டாயினும்வாங்காது வீடு, விளைநிலம், தோட்டம், ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது என் சென்ம தேசமாகவும், நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகளெல்லாவற்றிற்குங் காரணம், சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டுமென்னும் பேராசையேயாம்" என அவர்கள் கூறியிருப்பது சைவ உலகிற்கு உணர்ச்சி தருவதொன்றாகும்.

நாவலரவர்கள் பலயாண்டுகளாகச் சைவ வளர்ச்சிக்குச் செய்த முயற்சிகள் பல. அவற்றுட்சித்திபெற்றன சில. சைவசமயவளர்ச்சிக்கு வேண்டியன இவையென்று அவர்கள்கூறியவற்றை அன்பர்கள் கவனத்திற்குக் காட்டுகிறேன். "…….. தமிழ்க் கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள், முக்கிய ஸ்தலங்தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப் பிரசாரணஞ் செய்வித்தலுமேயாம். இவற்றின்பொருட்டு, கிரமமாகக் கற்று வல்ல உபாத்தியாயர்களும் சைவப் பிரசாரகர்களும் வேண்டப்படுவார்கள். ஆதலினாலே, நல்லொழுக்கமும், விவேகமும், கல்வியில் விருப்பமும், இடையறா முயற்சியும், ஆரோக்கியமும் உடையவர்களாய்ப் பரீக்ஷிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து, அன்னம் வஸ்திரம் முதலிவை கொடுத்து, உயர்வாகிய இலக்கண இலக்கியங்களையும் சைவ சாத்திரங்களையுங் கற்பித்தல் வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும் சைவப் பிரசாரகர்களாகவும் நியோகிக்கலாம்" என்பது. இவ்வாறு நாவலரவர்கள் சொல்லியும் பேசியும் எழுதியும் செய்தும் புரிந்த சைவ ஆக்க வேலைகள் பல. இது நிற்க;

நாவலரவர்கள் கருத்தைப் பின்பற்றி யாழ்ப்பாணத்தின் பலதிசைகளிலும் பல சைவப்பெரியார் தோன்றிச் சைவப்பணியாற்றினர். அவர்களுட் சிறந்தார் காரைச் ச. அருணாசல உபாத்தியாயரெனல் மிகையாகாது. இவர்களே யாழ்ப்பாணத்தில் சைவாசிரியர்கள் தோற்றத்துக்குக் காரணமானவர். இவரின் விடா உழைப்பினாலேயே பயிற்சிபெற்ற சைவாசிரியர்கள் யாழ்ப்பாணத்தில் முதன் முதல் தோற்றுவாராயினர். மறைந்துபோன கோப்பாய் ஐக்கிய போதனா பாடசாலை இவரின் முயற்சியாலேயே ஆரம்பமாயது. இக் கலாசாலையில் கற்றுத்தேறிய பலர் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் சைவாசிரியர்களாய்ப் பணியாற்றுகின்றனர். காரைநகரிலும் இரு சைவப் பாடசாலைகள் தோற்றத்துக்குக் காரணராயினர். அப் பாடசாலைகளிரண்டும் தற்போது உயர்தர பாடசாலைகளாய்க் காட்சியளிக்கின்றன. இவர்கள் தெல்லிப்பழை அமெரிக்கன் மிஷன் போதனா பாடசாலையிற் கற்றுத்தேறி அவர்களின்கீழ் சிலகாலம் சேவைபுரிந்தனர். சைவாசிரியர்கள் தோற்றத்துக்குக் கலாசாலை இல்லையென்பதையுணர்ந்து அதனை யாக்க நினைந்தனர். நினைந்து 1885-ம் ஆண்டு முதல் 1915-ம ஆண்டு வரை விடாமுயற்சி புரிந்தனர். இம் முப்பது ஆண்டுகளில இவர் பட்ட இன்னல்களைக் கூற இக் கட்டுரை இடந்தராது. முப்பது ஆண்டுகளின் விடாஉழைப்பினால் கோபாயில் நடைபெற்ற மிஷன் போதனா பாடசாலையோடு, சைவர்களும் மார்க்க வித்தியாசமின்றிக் கற்கக்கூடிய வசதியை அரசினரிடமிருந்து பெற்றனர். இதனால, 1917-ம் ஆண்டு ஆவணிமாசத்தில் முதன்முதலாக ஏழு சைவாசிரியர்கள் பயிற்சிபெற்று வெளியேறினர். இவர்களில் ஐவர் இப்போதும் ஆசிரியராய்ப் பணியாற்றுகின்றனர்.

காரை ச. அருணாசல உபாத்தியாயர் உண்ணும்போதும உறங்கும்போதும் நடக்கும்போதும் ஆடைகளைக் கரும மாற்றும்போதும் கோ. ஐ. போ. பாடசாலையிலேயே கருத்தூனறுவர். மரணத்தறுவாயில் நோய்வாய்ப்பட்டுப் பிரக்ஞையற்ற நிலையிற் பிதற்றிய வார்த்தைகளும் இவைகளே. உடல், பொருள், ஆவி மூன்றையும் சைவ பரிபாலனத்துக்கு ஈந்தனர். நாவலரவர்களுக்குப்போல இவருக்கும் பேரிடர் புரிந்தோர் பலர். வசைமொழி கிளத்தினோர் பலர். பரிகாசஞ் செய்தோர் பலர். இவைகளொன்றையும் அவர்கள் பொருட்படுத்தாது கருமமே கண்ணாயினா. இவ்வாறு பொதுசனப்பணியிலீடுபடுவோர் மறறவர்களாற் கண்டிக்கப்படுவது இயல்பே.

நாவலர் கருத்தை நிறைவேற்றுவதில தனித்தனிப் பெரியாரன்றிச் சபைகளும் ஆங்காங்கு தோன்றின அவைகளுள் மிகச்சிறந்தது சைவ வித்தியா விருத்திச் சங்கமெனல், மிகையாகாது. ஏன்னை? வேண்டிய இடங்கள்தோறும் சைவப் பாடசாலைகளைத் தாபித்தலினாலும், சைவ உபாத்தியாயர்களைப் பயிற்றி விடுதலினாலுமென்க. 1923-ம் ஆண்டில் இச்சங்கந் தொடங்கியது. ஆரம்ப காலத்தில் கௌரவ சேர். பொன். இராமநாதன் அவர்கள் தலைவராகவும முகாமையாளராகவும் பணியாற்றிவந்தார்கள். அவர்களின் பின் கௌரவ. வை. துரைசுவாமி யவர்கள் பணியாற்றினார்கள். இப்போது சில யாண்டுகளாக ஸ்ரீமான. சு. இராசரத்தினமவர்கள் முகாமையாளராகப் பணியாற்றி வருகின்றார்கள். சங்கமென்பது எவர்க்கும் பொதுவானதெனும சிறப்பாக அது இரண்டொருவரால்லயே நடாத்தப்பட்டுவருவதை அன்பர்கள் உலக நிகழ்ச்சியில பார்த்திருத்தல்கூடும். இம்முறையில் சைவவித்தியா சங்கமானது ஸ்ரீமான் இராசரத்தினம் அவர்களால நடாத்தப்பட்டு வருகிறதென்பதை யான கூற வேண்டுவதில்லை. ஸ்ரீமான். இராசரத்தின மவர்கள் சை. வி. சங்கம என்ற முறையிலும், தனித்த முறையிலுமாக சைவசமய வளர்ச்சியின் பொருட்டுச் செய்த நன்மைகள பல. தமிழ்க்கல்வி வளர்ச்சியின் பொருட்டுச் செய்த நன்மைகள் பல. தேசப பணிகள் பல. அவற்றையெல்லாம எழுதுவது மிக விரிவதேனும சில காட்டுதல் வேண்டப்படும்.

(தொடரும்.)

தன்னைக் காக்க விரும்புபவன் மிகச்சிறிய தீவினையையுஞ் செய்யா திருக்கக் கடவன்.

# பொன்னுத்துரை - சரஸ்வதி இரண்டுவருடச் சிநேகம்.

## நித்திரையில் நிஷ்டூரம்.

## போனவிடமெல்லாம் பொல்லடி.

## 50 பேருக்குமேல் வந்தார்கள்.

(நமது நிருபர்.)

ஊர்காவற்றுறை 31.

ஊர்காவற்றுறைப் பொலிஸ்கோட்டில் போலிஸ் நீதிபதி திரு. K. ஆழ்வாப்பிள்ளை முன்பாக நாரந்தனை வாசியாகிய மயிலு பொன்னுத்துரை என்பவர்ஓர் முறைப்பாட்டைத் தாக்கல் செய்தார்.

வழக்காளி சார்பாக பிறக்டர்ஸ்ரோறர் செல்வத்துரை ஏற்பட்டார்.

### முறையீட்டின் விபரம்

"எனக்கும், சரவணைவாசியாகிய நல்லதம்பி-முத்துக்குமாருவின் மகளாகிய சரஸ்வதி அம்மாவுக்கும் சென்ற இரண்டுவருடகாலமாகச் சிநேகம் உண்டு. சென்ற வருடமளவில் அவளது தாயாருக்கும் எனது விஷயம் தெரியவந்தபோது அவரும சம்மதப்பட்டார். ஆனல் சரஸ்வதியம்மாவின் தந்தையாருக்கு நான் இப்பெண்ணை நேசிப்பது விருப்பமில்லையென்பது அவர் என்னுடன் நடந்துகொண்ட முறையிலிருந்து தெரியவந்தது. சரஸ்வதியம்மா 2 மாதக் கர்ப்பவதியாகவிருக்கிறுள். நாங்கள் சிநேகமான காலந்தொடக்கம் அநேக கடிதப்போக்குவரத்துச் செய்துள்ளோம். கடந்த 2மாதகாலமாக அவள் தன்னைக் கூட்டிச்செல்லும்படி வற்புறுத்தி எழுதிய நான்கு கடிதங்கள் இங்கு தாக்கல் செய்கின்றேன். அப்படி அவள் எழுதியிருந்தபோதிலும் நான் அவளை முறைப்படி விவாகஞ்செய்தே அழைத்துப்போதல் வேண்டுமென எண்ணி வாழாவிருந்தேன்.

### பெண்ணின் பிரயாணம்

கடந்த 22ந் தேதியன்று இரவு 9 மணியளவில் சரஸ்வதியம்மா எனது வீட்டிற்கு வந்தாள். அடுத்தநாளாகிய 23ந் தேதி நான் சரஸ்வதியம்மாவுடன் யாழ்ப்பாணத்திற்குப் பொலிஸ் நீதிபதியிடம் போவதற்காகப் போக, அங்கு பொலிஸ்ரேசனுக்குப் போகும்படி சொன்னர்கள், உடனே நாங்களிருவரும் பொலிஸ்ரேசனுக்குச் சென்று வாக்குமூலம் கொடுத்தோம். பின்னர் அவர்கள் 24ந் தேதியன்று ஊர்காவற்றுறைப் பொலிஸ்கோட்டில் வெளிப்படும்படி சொன்னதன்பேரில் நாங்கள் பொலிஸ் நீதிபதி முன்னிலையில் விண்ணப்பங்கொடுத்து வெளிப்பட்டோம். நீதிபதி எங்களிருவரையும் ஒருமித்துப் போகும்படி சொல்ல நாங்கள் 2 மணியளவில் எனது வீட்டிற்குச் சென்றேம்.

### கலியாணம்

பிற்பகல் 5 மணியளவில் பிள்ளையார் பூசைசெய்து நான் சரஸ்வதியம்மாள் கழுத்தில் திருமாங்கியத்தைத் தரித்தேன். அநேக சனங்களும் எமது வீட்டுக்கு விஜயஞ் செய்தார்கள். பிள்ளையார்பூசை செய்த தென்னவெனில் பிராமணக் குருக்கள் இல்லாது பிள்ளையார் பிடித்துவைத்துத் தாலி கட்டியமைதான்.

### இருவருமோரறையில்

அன்றிரவு 8 மணியளவில் நானும் சரஸ்வதியம்மாவும் எனது வீட்டிலுள்ள அறையினுள் நித்திரைசெய்தோம். அண்ணனுகிய கந்தையா திண்ணையிலும் எனது தாய் சகோதரம் முதலியவர்கள் தலைவாசலிலுமாகப் படுத்திருந்தார்கள். நான் படுத்திருந்த அறையோவெனில் கிடுகுத் தட்டிகளால் சுற்றிவரக் கட்டப்பட்டுக் கிடுகுத்தட்டியும் கதவாகப் போடப்பட்டிருந்தது. நாங்கள் மெய்மறந்து நித்திரையாகவிருந்த சமையத்தில் அதாவது இரவு 11 மணிபோல "ஐயோ என்னைக் கொல்லுருங்கள்" என எனது அண்ணனுகிய கந்தையாஇட்ட சப்தத்தைக்கேட்ட நான் எழும்பினேன். அப்போது டோச்லைற் அடித்தார்கள். அத்துடன் படலையையும் தட்டிகளையும் அறுத்தெறிந்தார்கள். அதன்பின் பதினைந்து அல்லது 20 பேர்கள்வரை உள்ளேவந்தார்கள். அவர்களுள் 7, 8 ஆட்களையே மட்டுப்படுத்தினேன். நல்லதம்பி-தம்பு, நல்லதம்பி-முத்துக்குமாரு, கார்த்திகேசு-கந்தையா, அப்பாவு, சுந்தரம், விளுசி-செல்லப்பன், கனகன், முருகப்பன்-இராசையா, அவனது சகோதரன், சரவணைப்பகுதிப் பொலிஸ்விதானை, அப்பாக்குட்டி-மார்க்கண்டு முதலியவர்களையே மட்டுப்படுத்தினேன்.

### சரஸ்வதியை விடவில்லை.

உடனே தம்புவென்பவர் தனது கையிலிருந்த கொடுவாட்கத்திப் பிடங்கினுல் எனது வலதுகரத்தில் அடித்தார். கந்தையா பொல்லால் அடிக்க சுந்தரமும் மற்றவர்களும் கையினுல் அடித்தார்கள். நான் "ஐயோ ஐயோ என்னைக் கொல்லுருங்கள்" எனக்கத்திக்கொண்டு சரஸ்வதியைக் கட்டிப் பிடித்தேன்.

### பெண்ணின் பிரிவு

உடனே தம்பு தனது கையிலிருந்த கத்தியினுல் எனது கையைக்கிற நான் பெண்ணினது பிடியை விட்டுவிட்டேன். இதோ எனது காயங்களைப் பரிசீலனைசெய்த டாக்டரது சேட்டிபிக்கற்இருக்கிறது. பின்னர் தம்புவும் வேறுசிலருமாகப்பெண்ணையும், வேறு சிலர் என்னையுமாக இழுத்துக்கொண்டு வெளியே வந்தனர். பின்னரும் எனக்கு அடித்தார்கள். அப்பொழுது வெளியே 4, 5 கார்கள் றேட்டருகிலும் சிலகார்கள் ஒழுங்கையிலும்நின்றதைக்கண்டேன். எல்லாருமாக 40, 50 பேர்கள் வரையில் வெளியே நின்றூர்கள். அவர்களுள் பரியாரி சோமர், துரையப்பா, சுப்பிரமணியம், நடராசா, பொன்னம்பலம் முதலியவர்களை மட்டிட்டுக்கொண்டேன். ஈற்றில் சரவணைவிதானை "அவனை விட்டிட்டுவாருங்கள்" என்றுசொல்லிப் பின்னரும் "அவனைக் கொண்டுவாருங்கடா" என்று சொன்னதன்மேல் யாவரும் போனர்கள். உடனே நாரந்தனைப் பொலிஸ் விதானைக்கு முறையிட்டேன். அவரும் நானுமாகப் பொலிஸ் ஸ்ரேசனுக்குச் சென்று சார்ஜண்டுடன் மணியகாரன்வீட்டிற்குப்போக, அவர் உடையாருக்கு ஓர் துண்டுதந்தார். அதனை வாங்கிக்கொண்டு உடையாரிடம் போய் அவரையும் அழைத்துக்கொண்டு பெண்ணினது வீட்டிற்குச் சென்றபோது அவர் அங்கில்லை. அங்கு நின்றவர்கள் யாழ்ப்பாணம் போய்விட்டதாகக்கூற, நாங்கள் உடையார் வீட்டுக்குக்கிட்டக் காரைமறித்து ஒவ்வொருவரும் தத்தம் வீட்டிற்குப் போக, நான் எனதுவீட்டைநோக்கிச் சென்றேன். அப்போது அப்பாக்குட்டி-மார்க்கண்டு, கார்த்திகேசு-கந்தையா, விளுசி-செல்லப்பன் கனகன், சுந்தரம், தம்பு முதலியோர் என்னை வாளுக அடித்துவிட்டுப் பொலிஸ்விதானை வீட்டிற்கு இழுத்துச் செல்ல, அவர் பழையவீட்டில் அடைத்துவையுங்களென்றூர். உடனே என்னை அடைத்து விட்டார்கள். அவ்வீட்டிலொருவருமில்லை. மற்றநாட் காலை 9 மணியளவில் தம்பு அங்கு வந்து சார்ஜன்ட் விதானை வீட்டுக்கு வந்திருப்பதால் திறந்துவிடுங்களென என்னைத் திறந்துவிட்டார்கள். பெண்ணின் சம்மதமில்லாமலே தந்தையார் தன் வீட்டில் மறித்துவைத்திருக்கிறூர்."

இதன் பின் மயிலு பாலசிங்கம் என்ற 12 வயதுப் பையன் சாட்சியங்கொடுத்ததின்மேல் நீதிபதி எதிரிகள் யாவர்க்கும் கட்டளை பிறப்பித்ததுடன் பெண்ணைக் கொண்டுவரும்படி தந்தையாருக்குக் கட்டளை பிறப்பித்து வருகிற 7ந் தேதிக்கெனத் தவணையிட்டார்.

## சோடாக் கம்பனித் தலைவர் தாக்கப்பட்டார்.

சென்ற வெள்ளிக்கிழமை காலையில் மல்லாகம் சந்திக் கணித்தாக, மல்லகத்தில் சோடாக்கம்பனி வைத்து நடாத்தும் திரு. அப்பாத்துரையென்பவருக்கும், வீரவாகுவென்னுமொருவருக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் வீரவாகு என்பவர் அப்பாத்துரையின் மண்டையில் அடித்து வாளுன காயத்தை வருவித்தாரென்று கூறப்படுகிறது, —ந. நி.

## உண்மைக் கழிவில்லை

ஸ்ரீமான் K. பாலசிங்கமவர்கள் (Council) சட்டசபைக்கு அங்கத்தவராக வருமுன் சில பத்திரங்கள் வெளியிட்டிருந்தார். அதாவது யாழ்ப்பாணக் குடாக்கடலைச் சுத்தஜலமாக்கி யாழ்ப்பாணத்துக்குப் பயிர் செய்வதற்கு ஏற்றவாறு செய்யலாம் எனபதே.

அதன் பெறுபேற்றினுல் நீர்பாய்ச்சுங் கந்தோர்த் தலைவர்கள் சில பலமுயற்சிகள் செய்து யாழ்ப்பாணக் குடாக்கடலின் ஓர்பாகத்தை அப்படிச் சுத்தஜலமாக்கி நீர்பாய்ச்சுவிக்கலாமென யோசித்திருக்கின்றனரென்று அறியக் கிடக்கின்றது. அதுவுமன்றி, அப்படிச்செய்வது ஓர் கஷ்டமான காரியமல்லவென்பதும் அவர்கள் அறிக்கையால் அறியக்கிடக்கின்றது.

முதன்முறையாக இத்துணைமுயற்சியை ஒரு சிறியமுறையில் யாழ்ப்பாணம் மேற்குக்கரையிலுள்ள தீவுகளில் ஒன்றில் உள்ளகுடாவில் பரிசோதனை செய்தபின் தொடங்குவது நல்லதுஎன்று அறிகிறேம். ஆகையால் பருத்தித்துறைப்பகுதி வாக்காளரும் மற்றும் யாழ்ப்பாணத்தவரும் ஸ்ரீமான் K. பாலசிங்கமவர்சட்கு மிகவும் கடமைப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

ஸ்ரீமான் பாலசிங்கமவர்கள் (Council) சட்டசபைக்கு அங்கத்தவராக வருமுன் இவ்வித அரிய செயல்களைச் செய்விக்குந் திறமை வாய்ந்தவராக விருந்தால், சட்டசபைக்கு அங்கத்தவராக வந்தபின்னர் அப்பதவியிலிருந்து அச்சபையின் மூலமாக நேரே இவற்றைப் போன்றவை பலசெய்வார் என்பதற்கு ஐயமுண்டோ!

ஆகையால், ஸ்ரீமான் K. பாலசிங்கமவர்களைச் சட்டசபைக்கு அனுப்பி, இன்னும் பலஉதவிகளைச் செய்யும்முறையில் அவரை வைக்கும்படி வடமராட்சி வாக்காளர்களை வேண்டுவோமாக.

இங்ஙனம்
ச. கந்தசுவாமித்துரை,
30-1-36. திருக்கோணமலை.

## மன்னர்மன்னவன் பிரிவாற்றுமை.

[புலோலி, வித்துவான் க. முருகேசபிள்ளை, தமிழாசிரியன் ஆசிரிய கலாசாலை, சாவகச்சேரி]

1. மன்னவரின் மன்னவனே மாசற்ற தூமணியே
கன்னெஞ்சம் நெக்குருகக் காவன்முறை செய்தோனே
நன்னெஞ்சம் நடுகடுங்க நானிலமுந் திடுக்கிடவே
மன்னவனீ மாண்டாயோ மாண்புடைய மாதவனே.

2. செங்கோன்மை தனைச்செய்து தேசுதர வாழ்ந்தோனே
இங்கும்மை யெப்பிறப்பி லிவ்வுலகு காண்பதுதான்
துங்க மிகவுடையாய் சோதியாம் நின்னுட்சி
எங்கோவே யெங்கோவே யெப்பிறப்பிற் காண்போமோ.

3, பண்ணுலவு பாலகரைப் பாத்துவக்குந் தாய்போல
எண்ணுலவு பூமிமிசை யாவரையுங் காத்துவந்தாய்
கண்ணுக்கோ ரணிகலமாங் கண்ணேட்ட மாமணியே
தண்ணளிமீக் கூரநின்ற தகைமைசேர் போரேறே.

4. நீபடைத்த புகழ்போல யார்படைத்தா ரிவ்வுலகில்
நாபடைத்த மொழியெல்லாம் ஞானமிசை யுன்னதென்று
பாபடைத்த புலவோர்கள் பதட்டமின்றி மொழிகுவரால்
காபடைத்த நாப்படைத்த பாப்புடைத்த காவலனே

5. குடியாட்சி மிகவளர்த்து முடியாட்சி நிறுவியுள்ளாய்
படியாட்சி நின்மரபோர் பார்ப்பதுபோல் யார்பார்ப்பர்
குடியாட்சி மன்னவனே கோதற்ற காவலனே
முடியாட்சி மன்னவரில் முதன்மைதரு மூதறிவோய்

6. பொன்னுடாம் தன்னகர முதலாய பூமியெல்லாம்
எந்நாட்டுக் கொற்றவரும் நின்னடியே பணிந்துவக்க
கன்னுட்டிப் புகழ்வரையும் காவலனே காவலனே
இந்நாடு தனைவிட்டு ஏகினையோ? நன்றுமோ?

வேறு

7. விதிதனை விலக்குதற்கு விண்ணவர் தம்மிலுள்ள
நிதியுடை யோர்க்குமாகா நீயவை யறிந்ததன்றே
பதிபுகழ் பாங்குபெற்றுப் பாரினிற் றீங்குநீக்கி
வதிந்துள வள்ளலோனே வாய்மைசே ரரசரேறே.

அருங்கேட னெப்ப தறிக மருங்கோடித், தீவினை செய்யா னெனின்.

# NOTICE OF SALE

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 8807

தொண்டைமானாறு
வீரகத்திப்பிள்ளை-துரைசாமி
வழக்காளி

புத்தூர், முத்துச்சாமி-சிற்றம்பலம்
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 8807-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1936-ம் ௵ மாசிமீ 27-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோயிற்பற்று சீதாரி 3-ம் பகுதியிலிருக்கும் காணி நில இலாச்சம் 9. இதில், வடக்குப்புறமாக நில இலாச்சம் 4½ யும், கல்வீடும், கட்டிடங்களும், கிணறும், செய்பயிரும், அதைச் சேர்ந்தவைகளும். இதன் விசாலம் கிழக்குப்பக்கமாக 110¼ அடியும், வடக்குப்பக்கமாக 71½ அடியும், மேற்குப்பக்கமாக 109½ அடியும், தெற்குப்பக்கமாக 71½ அடியும். இந்த நில இலாச்சம் 4½-க்கும் எல்லை: கிழக்கு—முடிக்குரிய ரேவுக் கட்டிடங்கள். வடக்கு—பாங்ஸ்சோல் தெரு. மேற்கு—துரையப்பா-அண்ணாமலைக்குரிய ஆதனம். தெற்கு—முத்துச்சாமி-இராமநாதன் அல்லது தம்பி இராமநாதனுக்குரிய ஆதனம்.

Jaffna, 24-1-36. } V. K. Chinnathamby, Commissioner.
(69) 2-2-36

## ஓர் கேள்வி

பரமேசுவரன் பார்வதிக்கு உபதேசித்த ரஸானந்த கந்தமென்ற சம்ஸ்கிருத நூலில் 25-வது உல்லாசத்தில்,

மாக்ஷிகேநஹதம்தாம்ரம்
தசவாரம்ஸமுத்திதம் I
தத்வத்விசுத்தநாகந்து
த்விதீயந்துசதுஷ்பலம் II
நீலாஞ்ஜனஹதம்பூய:
ஸப்தவாரம்ஸமுத்திதம் I
இதிஸம்ஸித்தமேதத்தி
சுல்பநாகம்ப்ரகீர்த்திதம் II
ஸாதிதஸ்தேநஸூதேந்த்ர:
வதநேவித்ருதோந்ருணாம் I
நிஹந்திமாஸமாத்ரேண
மேஹவ்யூஹாநசேஷத: II

என்று கூறப்பட்டிருக்கிறது.

இதன் பொருளாவது, மாக்ஷீகமென்ற பொன்னிமிளை தாதுவால் தாம்ரத்தை 10 முறை மாரணம் (பஸ்மம்) செய்வித்து அதைத் திரும்ப ஜீவிக்கச் செய்து எடுத்துக் கொள்ளவும்,

இவ்விதமே சுத்தமான நாகமென்ற லோஹத்தை 4 பலங்கள் எடுத்து நீலாஞ்சனமென்ற தாதுவல் 7 முறை மாரணம் செய்வித்து பிறகு ஜீவிக்கச் செய்து எடுத்துக் கொள்ளவும். முன் தயார் செய்யப்பட்ட தாம்ரத்தையும் நாகத்தையும் ஒன்ருகச் சேர்த்திருக்க இதற்குத் தாம்ரநாகமென்று கூறப்படும். இந்தத் தாம்ரநாகத்தால் சாதிக்கப்பட்ட சூதமானது (ரஸமானது) வாயில் இடப்பட்டால் மேஹரோகங்கள் பூராவையும் (Diabetis) போக்கி விடும் என்பதாம்.

இந்த அவிழ்த முறையில் முதலில் தாம்ரத்தை மர்ரணம் செய்து ஜீவனஞ் செய்யும்படி சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒன்றுக்கொன்று விபரீதமான முறையாயிற்றே? இதனுல் லோஹத்திற்கு என்னகுணம் உண்டாகக் கூடும்?

2 வது தாம்ரத்தையும் நாகத்தையும் சேர்க்கும்படி சொல்லியிருப்பதன் கருத்தென்ன?

3 வது தாம்ரநாகத்தால் சூதத்தைச் சாதிக்கவேண்டுமென்பதின் பொருளென்ன?

4 வது முன் கூறியபடி தயாரிக்கும் சூதத்தின் ரூபம் எப்படியிருக்கக் கூடும்? என்பனவற்றிற்கு ஸம்ஸ்கிருத ரஸகிரந்தங்கள் மூலமாகவோ அல்லது தமிழ் சித்தவைத்திய நூல்கள் மூலமாகவோ மேற்கோள்களுடன் முறைவிளக்கி எழுத அறிவாளிகள் முன்வருவரேல் தமிழ் உலகத்திற்கு மிக்க பயன்படும்.

ரஸசாஸ்திரபூஷண-
கிருஷ்ணசுவாமி சாஸ்திரி
ஈரோடு. ஆயுர்வேதவிசாரத

சிறுவர் பகுதி.

## சிலந்திக்கூடு.

(சி. த.)

முன்னொரு காலத்திலே ஒரு பெண்மணியிருந்தாள். அவள் கம்பளி பின்னுவதில் அதிகம் கெட்டிக்காரியாயிருந்தாள். கம்பளியிலே அழகான படங்களையும் அவள் செய்துவிடுவாள். அப்படிப்பட்ட படங்களைச் சித்திரவிற்பன்னர்கள்கூடச் செய்து முடிக்கமாட்டார்கள். "மினேர்வா" என்னும் சித்திர கலைத் தேவதையே இவளுக்கு இந்தக் கலையைக் கற்பித்தது. அவளுடைய வேலைகள் மிகவும் திறமைவாய்ந்தனவாயிருந்தபடியால் எல்லோரும் அவற்றைப் பார்க்கவந்தார்கள். இதனுல் அவளுக்கு மிகவுந் தற்பெருமை ஏற்பட்டுவிட்டது. அதனுல் தனது ஆசிரியையாகிய தேவதையோடு போட்டிபோட விரும்பினுள். ஆகவே அவள் மினேர்வாவிடம் போய், "நாங்கள் இருவரும் போட்டி போடுவோம், நான் தோற்றுப்போனுல் என்னை நீ விரும்பியபடி தண்டிக்கலாம்" என்று கூறினுள். மினேர்வா இதைக் கேட்டபோது அவளுக்கு மிகவும் கோபம் வந்துவிட்டது. ஒரு சாதாரண பெண்போல மாறுவேடம் பூண்டுகொண்டு அப்பெண்மணியிடம் போய் அவளது தற்பெருமையை விடும்படி புத்தி கூறியது. "மானுடர்களுக்குள்ளே நீ மிகவுந் திறமையுடையவள்தான். ஆனுல் தேவர்களுடன் போட்டிபோட விரும்பாதே" என்று மினேர்வா கூறியது. "மினேர்வா தான் வந்தாலும் வரட்டும். நான் பயப்படமாட்டேன்" என்ருள் அந்தப் பெண்மணி. "இதோ பார் மினேர்வா நிற்கிருள்" என்று கூறிக்கொண்டே மினேர்வா தனது மாறுவேடத்தைக் களைந்துவிட்டாள். ஆனுல் அப்பெண்மணி அதைப்பற்றிக் கவனிக்கவில்லை. இருவரும் வேலைசெய்யவாரம்பித்தனர். பலவகையான சித்திரங்களோடு கம்பளிகளைச் செய்தனர். ஆனுல் பெண்மணியோ மினேர்வாவை வென்றுவிட்டாள். மினேர்வாவுக்கு இது பெரிய ஆத்திரத்தை உண்டுபண்ணிவிட்டது. கோபத்தினுலே தனது வேலையைக் கிழித்தெறிந்துவிட்டுத் தன்னுடைய கைத்தறியினுலே அப்பெண்மணியின் நெற்றியிலே அடித்தாள். அந்த அடியை அவளாலே தாங்க முடியவில்லை. ஆகவே அவள் தூங்கிச் சாக நினைத்தாள். அப்போதுதான் செய்ததற்காக மினேர்வா மிகவும் வருந்தினுள். அப் பெண்மணிக்காக அவள் மிகவும் வருந்தினுள். அவள் மாணிப்பது மினேர்வாவுக்கு விருப்பமில்லை. எனவே அவளைத் தூங்கிச் சாகாவண்ணம் தனது கையினுலே தாங்கிப் பிடித்துக்கொண்டது. தன்னிலும்பார்க்கத் திறமையான வேலையை வேறெவரும் செய்வது மினேர்வாவுக்கு விருப்பமில்லைபாதலால் அவளையொரு சிலந்தியாக்கிவிட்டது. அவளுடைய மெல்லிய விரல்கள் கால்களாயின. சிலந்தியின் கூட்டை எல்லாரும் அதிசயிக்கிருர்களல்லவா!

### அதிகபாரம் ஏற்றியவர்க்கு 10 ரூபா அபராதம்.

காரைநகர் வாசியான ஆறுமுக என்பவர் தமது மாட்டு வண்டியில் பிரமாணத்துக்கு மிஞ்சிய பாரம் ஏற்றிச் சென்ருர் என்ற குற்றச்சாட்டின் பேரில் 10 ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்.

## கலம்பகம்

இங்கிலாந்திலும் உவேல்சிலும் இதற்குமுந்திய வருடங்களிலும்பார்க்கச் சென்ற வருடத்தில் குழந்தைகள் மரணம் மிகவுங் குறைந்திருக்கிறதாம்.

o o o

கொழும்பு ஆயுள்வேதவைத்தியக் கல்லூரிக்குச் சமீபமாகவுள்ள ஒரு தோட்டத்தில் ஒரு பெண்ணையும், அவளது தகப்பனையும் அந்தப் பெண்ணின் புருஷன் கத்தியால் குத்திக் காயப்படுத்திவிட்டானும்.

o o o

மருதானையிலுள்ள அப்துல்காதர் என்பவருக்கும் வேறுசிலருக்கும் ஏற்பட்ட சச்சரவில், அப்துல்காதரின் காது ஒன்று கத்தியினுல் வெட்டப்பட்டு விட்டதாம்.

o o o

சிதம்பரம் நடாராசர் கோயிலிலுள்ள அறுபத்துமூவர் விக்கிரகங்களில் சுந்தரமூர்த்திநாயனுர் விக்கிரகத்தை யாரோ களவாடிச் சென்றுவிட்டனராம்.

o o o

புகைரதப் பிரயாண மலிவு துண்டுகள் கொடுப்பதில் பிரிட்டிஷ் புகைரதப்பகுதியார் கையாளும் முறையை இலங்கையிலும் கையாளப் புகைரத அதிகாரிகள் ஆலோசனைசெய்து வருகின்றனராம்.

o o o

அரசர் பெருமானின் வெள்ளிவிழா ஞாபகார்த்தமாக, யாழ்ப்பாணத்தில், வயோதிபர், குருடர், அனுதைகள் முதலியவர்களுக்காக ஓர்விடுதியைப் பொதுசனங்களின் உதவியால் கட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம்.

o o o

சிவனடிபாத யாத்திரை செய்வோருக்குப் பிப்ரவரிமாதம் 2-ந் தேதி தொடக்கம் 6-ந் தேதிவரை புகைரத மலிவுதுண்டுகள் வழங்கப்படுமாம். o o

காலஞ்சென்ற 5-வது ஜோர்ஜ் மன்னர்பிரானது பிரேத அடக்கத்தின்போது சுவீடன், நோர்வே, பெல்சியம், பல்கேரியா, றூமேனியா என்னும் 5 தேச அரசர்களும் சமுகமளித்தனராம்.

o o o

பெட்ரோல்மீது விதிக்கப்பட்டிருக்கும் தீர்வைவரியைக் குறைக்கமுடியாதென இலங்கை அரசினர் "ஓட்டோமோபைல்" சங்கத்திற்குத் தெரிவித்துவிட்டனராம். சங்கத்தார் வரியைக் குறைக்கும்படி அரசினரைக் கேட்டிருந்தனராம்.

o o o

சிலாபத்திலிருந்து 12 மைல் தூரத்திலுள்ள பட்டுலுஓயாவிலுள்ள குளம் ஒன்றில் ஒரு மனிதனின் பிரேதம் பையொன்றில் கட்டப்பட்டபடி மிதந்திருந்ததாம்.

o o o

பாலக்காடு என்னுமிடத்தைச் சேர்ந்த கொடுவாயூர்க் கிராமத்திலுள்ள அமீனுஉம்மா என்னும் பெண் தனது குழந்தையைப் பிறந்தவுடன் ஒரு வயலில் கழுத்துமட்டத்தில் புதைத்து அக்குழந்தையின் மரணத்துக்குக் காரணமாயிருந்தாளெனக் குற்றஞ் சாட்டப்பட்டு 18 மாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பெற்ருளாம். o o

லட்மணபுரிக் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்துக்குமுன் இங்கிலாந்திலிருக்கும் சுபாஸ் சந்திரபோஸ் அவர்கள் இந்தியாவுக்கு வந்து சேர்வாராம்.

o o o

சென்ற வருடத்தில் ஏற்பட்ட மழைக்குறைவு, அதன்பின் சில மாதங்களாகப்பெய்த பெருமழை முதலிய காரணங்களால் மட்டக்களப்பில் காய் கறிப் பஞ்சம் உண்டாகியிருக்கிறதாம்.

o o o

பலப்பிட்டியைச் சேர்ந்த கெண்டிரியல் டி சில்வா என்னும் ஒருவர், நீதிஸ்தல முன்னிலையில் விட்டுப் பொலிஸ் பரிசோதகருக்கு அடித்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 18 மாதக் கடுங்காவற்றண்டனை விதிக்கப்பெற்ருராம்.

o o o

நூரளை என்னுமிடத்தில் பொதுசன அபிப்பிராயத்தின் பேரில் ஒரு கள்ளுத்தவறணை திறக்கப்பட்டிருக்கிறதாம்.

மருதானை தெற்கிலுள்ள ஸ்கின்னர்ஸ் ரோட்டில் அரசாங்கசபைத் தேர்தல் காரணமாக இருதமிழருக்கும் ஒரு சிங்களவருக்குமிடையில் வாக்குவாத மேற்பட்டுக் கலகமுண்டாகியதால் மூவரும் படுகாயமடைந்தனராம். o o

காக்காப்பள்ளி என்னுமிடத்திக்கும் சிலாபத்துக்குமிடையிலுள்ள புகைரதப்பாதையில் ஓடிக்கொண்டிருந்த புகைரத மோட்டோர் சென்றதிங்கட்கிழமை பாதையை விட்டு விலகியதால் இருதிசையிலுமிருந்து வந்த புகைரதத் தொடர்கள் போக்குவரத்தின்றித் தாமதப்பட நேரிட்டதாம்.

o o o

கெதமன்னை என்னுமிடத்திலுள்ள ஓர் குளத்தில் இன்னுரென்று கண்டுபிடிக்கக்கூடாத நிலைமையில் ஒரு பிரேதம் கண்டெடுக்கப்பட்டதாம்.

o o o

கொழும்பு-கறுவாக்காட்டைச் சேர்ந்த மூக்கையா என்பவருக்குச்சொந்தமான மூன்று ரூபாயைக் களவாடினுரெனக் குற்றஞ்சாட்டப்பட்ட என். டி. பிச்சாட் என்பவருக்கு மூன்றுமாதக் கடுங்காவற்றண்டனை விதிக்கப்பெற்றதாம்.

o o o

இந்தியாவிலுள்ள திருநெல்வேலி இந்து சர்வகலாசாலைக்கு மதுரை திரு. எம். திரவியம்பிள்ளை என்பவர் நன்கொடையாக ஒருலட்சம்ரூபா உதவியிருக்கிருர். அக்கலாசாலையின் பெயர் மதுரைத்திரவியம் தாயுமானவர் கலாசாலை என மாற்றப்பட்டிருக்கிறதாம்.

o o o

காரச்சியைச் சேர்ந்த ஒரு கிராமத்திலுள்ள சிறுமியொருத்தியைப் பலவந்தமாகச் தூக்கிச்சென்ற காரணத்தாலுண்டாகிய கலகத்தில் 6 பேர் காயமடைந்தனர், 17 பேர் கைதுசெய்யப்பட்டனராம். o o o

தங்காலையைச்சேர்ந்த கே. அக்கோரிஸ் என்னும் ஒருவர் சட்டவிரோதமாகக் கள்ளு வைததிருந்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு இரண்டுமாதக் கடுங்காவற்றண்டனை விதிக்கப்பெற்ருராம்.

o o o

லண்டனில் காலஞ்சென்ற சேர். மார்க்கஸ் பெர்னுண்டோ என்பவரின் பிரேதம் அடுத்தவாரம் இலங்கைக்குக் கொண்டு வரப்படுமாம்.

o o o

சமீபத்தில் நடைபெறவிருக்கும் அடெலெயிற் பொருட் காட்சியில் இலங்கைப் பொருள்கள் சில பார்வைக்காக வைக்கப்படுமாம். o o

பூவாக்பிட்டி எல்ஸ்ரன்தோட்ட உதவித்தலைவரான திரு. பி. எல். வால்கர்என்பவர் சென்ற கிழமை மோட்டார்ச்சைக்கிளில் பிரயாணஞ்செய்கையில் எதிரேவந்த மாட்டுவண்டியுடன் மோதுண்டு தெருவுக்குப் பக்கத்திலுள்ள வயலில் தூக்கி எறியப்பட்டுப் பலத்த காயமடைந்தாராம்.

o o o

சென்ற ஞாயிற்றுக்கிழமை திருப்பூரிலிருந்து நாலுமைல் தூரத்திலுள்ள நல்லூர்க்கிராமச் சுடுகாட்டில் சூதாடிக்கொண்டிருந்த 16 பேரைப் பொலிசார் கைதுசெய்ததோடு, அவர்களிடமிருந்த பணத்தையும் பறிமுதல் செய்தனராம்.

o o o

ஈரோடு என்னுமிடத்திலுள்ள கிறிஸ்தவ ஆலயத்தில் உயர்சாதிக் கிறிஸ்தவர்களுடன் தாழ்ந்தசாதிக் கிறிஸ்தவர்கள் சமத்துவமாக உட்கார்ந்ததின் பயனுக வழக்குகள் நடைபெறுகின்றனவாம்.

o o o

நுகேகொடை மார்க்கமாகச் செல்லும் இரு கம்பெனிக்காரரின் மோட்டர் பஸ் இரண்டு ஒன்ருேடொன்று மோதியதால் உண்டாகிய கலகத்தில் 4 பேர் காயமடைந்தனராம்.

o o o

இலங்கை அரசாங்கத்தின் அடுத்த வரவுசெலவுத்திட்டம் தயாரிப்பது சம்பந்தமான வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதிகமாகச் செலவிடும் சில பகுதிகள் வருகிற வருடத்தில் புதிய வேலைகளைத் தொடங்கக்கூடாதெனப் பொக்கிஷத்தலைவர் அறிவித்திருக்கிருராம்.

நாடகப் பகுதி.

# தருமபுத்திரர் அல்லது துரோபதி துகில்

(மானிப்பாய். திரு. தா. சுவாமிநாதன் அவர்கள்.)

[உரிமை ஆக்கியோனுக்கே உரியது.]

அங்கம் 2. காட்சி 4.

இடம்—கானகம்.

(பஞ்சபாண்டவரும் துரோபதியும் வருகின்றனர்.)

துரோபதி:—(ஓர் நெல்லிமரத்தைக்கண்டு அரிச்சுனனை விளித்து) நாதா! இதோ ஓர் ஆமலகம் நிற்கின்றது. இதில் நன்னலமிகுத்தநறுங்கனி ஒன்றிருப்பதால், அடியாளில் அருள்கூர்ந்து அதைப்பறித்துத்தரவேண்டும்.

அரிச்:—இதோ அதை வீழ்த்துகின்றேன். (வில்வளைத்தெய் துகனியைவீழ்த்தினன்.) [சிலமுனிவர்வருகின்றனர்]

முனிவர்:—ஏ மனிதா! ஏது இத்தகாத செயலைச்செய்தனை? நீபறித்த இம்மதுரமார் நெல்லிக் கனியானது மித்திரமுனியென்பார்க்கு நல்லுணவாயுள்ளது. நின்செயலை அம்முனிவர் காண்பரேல் அதிகம் இடும்பைக்காளாகுவையென்பது நிச்சயம். (முனிவர் தம்வழியே சென்றனர்.)

அரிச்:—(கொண்டவக்கனியை மூத்தோனமுன் வைத்து) அண்ணு! இம்மண்டமற் பாவையின்பொருட்டு மதியிலனுகி இந் நெல்லிக்கனியை எய்து வீழ்த்தினன்.

தருமர்:—ஏ இதழ்கள் விரிந்த மலர்மாலையை அணிந்தவனே! கானுறைவாழ்க்கையி லீடுபட்டுக் காய்கனிமூலமதின்று, நெடுங்காலமாய்த்துன்பத்தையே அனுபவிக்கிற நம்மை, நாடோறும் இடையூறுவந்து நண்ணுமாயின் யாம் செய்யக்கூடியதுதான் என்னே!

வீமன்:—அண்ணு! "கறந்தபால் சுரைக்கேருது, இறந்தவுயிர் மீண்டும் வாராது," என்றல்லவா கூறுவர். ஆதலின் நடந்தவோர் நிகழ்ச்சியைக் குறித்துச் சிந்திப்பதிற் பயனேதுமின்று. மித்திரமுனிவர்வந்து இச்செயலை அறிவரேல் எம்மை முனிவது திண்ணம். அவர் சாபத்துக்குட்படமுன், அவரை யாமண்டிப்போற்றி வணங்குவோமாயின், எம்மை முனியாது கருணையோடு விட்டுவிடுவர்.

அரிச்:—மெய்தவறுத வாக்கினையுடைய அண்ணு! தவத்தினில் மேம்பட்ட மித்திரமுனிவர் உண்பதற்காய்த் தேவர் நாளொன்றுக்கொன்றுய்த தோற்றும் நெல்லிக்கனியை மதியிழந்து வீழ்த்தியவன் நானேயன்றோ! ஆதலின் என்னையன்றி அவர் வேறெவரையும் முனிவாரா? இங்ஙனமாயின் தாங்கள் அஞ்சுவதெதற்காக! "எய்தவனிருக்க அம்பைநோகலாமா?"

தருமர்:—மாந்தர்க்குள்ளே ஆண்சிங்கம்போன்றவனே! வீசுகின்ற தென்றற்காற்றும், முக்கனிகளும் கமழுகின்ற சோலையில, முகிலானது தவழாநின்ற நாட்டையுடைய துருபதனின் பாவையும், எமது நல்லற மனையாளுமாகிய துரோபதியின் எண்ணத்துககியைந்து பின்முன் ஆராயாது இக்கனியை ஈர்த்துவிட்டனை. இதன் பயனுக நீ இடுக்கணடைய நாமெப்படி மனமபொறுத்து வாழ்வோம்! இந்நிலைமை தாங்கற்கரிய துன்பத்துக்கேதுவாகுமன்றோ!

நகுலன்:—அண்ணு! மித்திர முனிவர்க்குரிய நெல்லிக்கனியைப் பறிதத செயலானது, இக் கானகத்தின்கண் இதற்குமுன் யாமடைந்த இடுக்கண்யாவினும் மேலாமிடுக்கணை வருவிக்குமன்றோ! ஆயின் முனிவரின் முனிவைத் தடுப்பதற்காகச் சக்கரப்படையையுடைய கண்ணபிரானையே யாமிப்போ நெஞ்சுறவழுத்திப் போற்றுதல்வேண்டும்.

சகாதே:—அண்ணு! தவமிகுந்த மித்திரமுனிவர் எமது அடாத செயலைக்கண்டு முனிவதன்முன், அவருடைய திருவடிகளையடைந்து வணங்கி இந் நெல்லிக்கனியையும் அவர் திருமுன்வைத்துப் பொறுத்தருள வேண்டுவமாயின் நன்மையேயாகும்.

துரோபதி: அந்தோ! என்செய்வேனே!

மனங்கவரு மதுரநெல்லிக் கனியதனைக்
கண்டதிக மயக்கங் கொண்டே [ன்
சினங்கொளா தீர்ந்துதா வேண்டுமென்றே
அவ்வுரையைச் செவியிற் சாத்தி
முனங்கவலை யென்னெருத்தி யாலடைந்த
நாயகரு முற்பட் டெய்தார்;
வனங்குலவு மான்விழியார் கூறியசொற்
கேட்பவரு மதியி லாரே.

பெரியோர் பெண்மொழி கேளாரென்பதும் பொய்யாகுமா? பெண்பேதையாகிய என்னாலன்றோ தாங்களைவரும் இடையறுத் துன்பத்தை அடைய நேருகின்றது.

தருமர்:—பெண்ணே துரோபதி! கவலாதொழிக. தம்பி நகுலன் கூறியபடி எம்மைஇச்சந்தர்ப்பத்திற் காக்க வல்லவர்கருணைமாலாகிய கண்ணபிரானேயாகும். ஆகையின் இப்போ அவரைத்தியானிப்போமாக. (தருமர் கண்ணனைத் தியானிக்கின்றனர். கண்ணன் அவ்விடம் எழுந்தருளி வந்தனர். யாவரும் வணங்கினர்.) எப்பிரானே! இங்கே கண்ட ஓர் நெல்லிக்கனியைத் துரோபதி ஏவலால் எம்பியும் பறித்தனன். மித்திர முனிவனின் சாபத்துக்கேதுவாய் நாம் விளங்குமிச்சமயத்தில் தேவரீரைத்தியானம் செய்தோம். எம்மை இவ்விடரினின்றும் மீட்டருள வேண்டும்.

கண்ணன்:—வலிமைமிக்க பஞ்சவராகிய நீவிர் ஒவ்வொருவரும், தீயினின்றும் தோன்றிய இப்பெண்மணியும் உங்களுக்குள் மனங்களிற் குடிகொண்டிருக்கும் எண்ணங்களை வெளிப்படுத்து வீராகில், நெல்லிக்கனி மீண்டும் மரத்தொடு சென்று ஒன்றிவிடும். ஆகையின் ஒவ்வொருவராய் உமது எண்ணங்களைக் கூறுவீராக.

தருமர்:—அலகையாம் அன்னையை முன்னம் கொல்லுதல் புரிந்த அண்ணலே! தருமமும், மெய்ம்மையும், பொறையும், மேகமேனியையுடைய தேவரீரும் எஞ்ஞான்றும் வெற்றியையடையவும், அசுரர்குலமும், பாவமும், பொய்யும், கோபமும் எஞ்ஞான்றும் தாழ்ச்சியை யடையவும் வேண்டுமென்றே என்னுளமானது இரவும் பகலும் சிந்தித்து நிற்கின்றது.

வீமன்:—எம்பிரானே! பிறர்தாரத்தைப்பெற்ற தாயென்றும், பிறர்பொருளை எட்டிப்பழமென்றும், பிறருடைய இழிவுகளை எடுத்தாளுதல் பெருமை யன்றென்றும், பிறரடையுமின்னலை யானடைகின்றே னென்றும், சிந்திக்கின்ற சிந்தனைகளே, இறந்து போக நேரினும், என்மனத்திற் குடிகொண்டிருப்பனவாகும்.

அரிச்:—ஞானமேயான திருவடிவுடையாய்! ஒருவன் இந்த ஊன்பொருந்திய உடலோடுகூடிய உயிரானது விட்டு நீங்க நேர்ந்தாலும், மானத்தையே பெரிதாகமதித்துக் காப்பாற்றுவது மாண்பினை விளைக்குமென்பதே என்னுடைய மனக்கருததாகும்.

நகுலன்:—கிரிச் செங்கையாய்! ஒருவன் குலத்திலே மேம்பட்டவனுயினும், அழகிலே உயர்ந்தவனுயினும் குறைவிலாச் செல்வமுடையவனுயினும், மற்றும் மேன்மைகள் யாவுமுடையவனுயினும், கல்விஞானம் அற்பமுமில்லானுயின் அவனையான் மணமற்றமுருக்கம்பூவென மதிப்பேன். இதுவே என் சிந்தையிலுள்ள கருத்தாகும்.

சகாதே:—எம்பெருமானே! வேதவாக்கே பெற்றதாயென்றும், வரம்பிலா ஞானமே தந்தையென்றும், தருமமேசகோதரனென்றும், கருணையே தோழனென்றும், சாந்தமே மனையாளென்றும், பொறையே புத்திரனென்றும்யான் எண்ணியிருக்கின்றேன். இவ்வறுவரையுமவிடவேறுஉறுதிப்பொருட்கள் யாவுமில்லை யென்பதே என்னுடையமனக்கருத்தாகும்.

துரோ:— "நாராயணு" எனவழைத்த கயேந்திரனென்னும் யானை முன்வந்த கருணைமாலே!

அம்புவியி லாடவரு மவதரியா
திருந்தனரோ? அரிய மாலே!
நங்கையரின் கற்பொழுக்க மவரிருந்தா
லரிதன்றோ! நயந்து யானும்
பஞ்சவரை நாயகராய் வேட்டிருந்தும்
இன்னுமொரு பத்தா மீது
நம்பியுளம் சென்றவனை நாயகனுய்ப்
பெறுவதற்கு நாடுவேனே.

ஐம்புலன்களையும்போல யான் ஐந்து பதிகளைப்பெற்று வாழ்வேனுயினும், இன்னுமோர் கொழுநனைப் பெறுவதற்கு என்மனமானது இசைகின்றது. அழகிய பூமியின்கண்ணே ஆடவர் அவதரியா விடினன்றோ பெண்களின் கற்பொழுக்கத்தைக் காணலாகும். (நெல்லிக்கனி படிப்படியாய்ச் சென்று மரத்தோடு ஒன்றிவிட்டது.)

கண்ணன்:—ஏ பஞ்சபாண்டவரே! ஏ வசிட்டனின் நல்லற மனைவியை நிகர்த்த துரோபதி! உங்களுங்கள் மனங்களிற் குடிகொண்டிருந்த எண்ணங்களை நீவிர் வெளிப்படுத்தக்கேட்டு மனமகிழ்ந்தேன். நெல்லிக்கனியும் ஆமலகத்தோடு ஒன்றிவிட்டது. யான் துவாரகாபுரிக்குச் சென்றுவருகின்றேன். (எல்லோரும் வணங்கக் கண்ணபிரான் சென்றனர்.)

(காட்சிமுடிகிறது)

# மலாய்நாட்டுப்பிரசங்கமேடைகள்

(திரு. த. ஐயாத்துரை அவர்கள், சிங்கப்பூர்.)

இவ்வுலகின்கண் பற்பலவிடங்களிலும் சங்க மண்டபங்களிலும் கற்றறிந்த மேதாவிகளால் காலாகாலங்களில் சொற்பொழிவுகள் நடாத்தப்படுவது இயல்பே. பெரியோர்கள் உலக முன்னேற்றத்தை முன்னிட்டோ சீர்திருத்தத்தைக்கோரியோ அல்லாமல் சமயவளர்ச்சியை வேண்டியோ அவ்வவ்வளர்ச்சிக் கேற்றவிடங்களில் ஏற்ற விஷயங்களைப்பற்றி விரித்துரைப்பார்கள். அவ்விடங்களில் கூடியிருக்கும் சோதரி சோதரர்களுடைய முழுக்கவனத்தையும் தம்பால் இழுக்கக்கூடிய சக்தி வாய்ந்தவர்களே ஓர் விஷயத்தைப்பற்றி விரித்துரைக்க முன்வருவார்கள். விரிவுரையாளர் தாம் எடுத்துக்கொண்ட விஷயம் எத்தன்மையதென்றும் தமதுகொள்கைகள் அதற்குத்துணைநிற்பவையாவென்றும் தமது மனதை ஆராய்ச்சிசெய்தபின்பே, கூடியிருக்கும் சகோதரர்கட்கு எடுத்துரைக்க முன்வருதல் அவர்களது முக்கிய கடனுகும்.

உலக முன்னேற்றத்தை விரும்பியிருக்கும் மக்களுடைய கழகங்களில் ஓர் பிரசங்கம் செய்யும்படி ஒருவரை வேண்டினுல், அன்னவர்முன் அவருடையகொள்கைகட்கேற்ற விஷயங்களை எடுத்துப்பேசுவதேயல்லாது இதர விஷயங்களில் தலையிடுவது உசிதமன்று. அரசாங்க விஷயங்களிலும் வியாபாரத் துறைகளிலும் கைத்தொழில் பயிற்சிகளிலும் ஈடுபட்டிருக்கும் கழகங்களில் சமய விஷயங்களை எடுத்துரைப்பாராகில் சபையில் கூடியிருக்கும் மக்களிடை எவ்வளவுதூரம் அதிருப்தி ஏற்படும் என்பது புலனுகும்.

சீர்திருத்தங்களை விரும்புவோரிடை நம் சகோதரிகள் அதிகம் கற்கக்கூடாது வீட்டில் வேலை ஆட்களை வைத்திருக்கப்படாது. மிகவும் மென்மையான குறுகிய பட்டாடைகளை அணியக்கூடாதென்றும் உரைப்பாராகில் கன்னிகைகள் தமது பெற்றோருடையவோ சகோதரங்களுடையவோ துணைகொண்டும் காதலிகள் தங்கள் காதலர்களது துணைகொண்டல்லாது வெளிச்செல்லக் கூடாது என்றும் ஸ்திரிகள் தங்கள் துணைவரில்லாதகூட்டங்களில் சேரப்படாதென்றும் கூறுவாராகில் அவர் வார்த்தைக்குச்செவிமடுப்பார் மிகச்சிலரே.

சமயவளர்ச்சியை விரும்பும் மக்களிடை பேசப்புகுங்கால் தாம் சமய விஷயத்தில் பக்குவநிலை எய்திபிருக்கிறுரா வென்பதைக் கவனிக்கவேண்டியது மிகவும் அவசியமானதே தாம் எடுத்துக்கொண்ட விஷயத்தில் திரிகரணசுத்தியாய் தமது மனது லயித்திருக்கிறதாவென்று நோக்குவது முதற்கடமை.

ஓர் சைவன் தம் சைவகுரவர்களுடைய திவ்ய சரிதையை விளக்குங்கால் தம் மரபிற்கேற்ற உடை அணிந்தும் சமயத்திற்கேற்ற அடையாளங்களைத் தரித்தும் சந்தர்ப்பத்திற்கேற்ற உணர்ச்சிகளைக் காண்பித்தும் அடியார் பெருமைகளை எடுத்துப் போதிக்குமபோது கூடியிருக்கும் மக்கள் உள்ளத்தில் அவருடைய புனிதமான திவ்யசரிதை கல்லில் எழுத்துப்போல் படிந்து தாங்களும் தங்களால் இயன்றவரை தங்கள் சக்திக்கேற்பப் பக்திமார்க்கத்தி லீடுபடுவார்கள். பள்ளியில் படிப்பதிலும் அநேக நூல்களை வாசிப்பதிலும் கற்றறிந்த பெரியோர்கள் செய்யும் சொற்பொழிவுகளைக் கேட்பதும் அவர்களது பழக்கவழக்கங்களைப் பின்பற்றி நடப்பதும் மக்கள் அறிவுமுதிர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் சீர்திருத்த வளர்ச்சிக்கும் அதிக பயன்தரும்.

ஆனுல் தற்காலத்தில் சிலர் தங்களைப்பெருமைப்படுத்தும் நோக்கங்கொண்டு மேடைகளில் பிரவேசித்து அவ்விடங்கட்கு உபயோகமில்லாத விஷயங்களை எடுத்து மனம் சென்றவிடமெல்லாம் செல்லவிடுத்து நாவில் தடங்கலில்லாது நவில்கின்றுர்கள். அதாவது ஒருவர் சிறுபிராயத்தில் மணமுடித்தபின உலக இன்பங்களைத் துறந்து முத்திஞானத்தை அடையவிரும்பி ஈஸ்பர தியானத்தி லீடுபட்டு அவர் தெரிசனம் கிடைக்கப்பெற்று, ஞானநிலையிலிருக்குமபொழுது அவருடைய பாலியமனைவியார் அவரை தெரிசிக்கவர அவர் எழுந்து நமஸ்கரித்து நீரும் நமக்கு அன்னையென்றுரைக்க அவர் தேவி தயமையும் ஓர் சிஷையா யேற்கும்படிவேண்ட அதற்கிசைந்து 'ஆலிங்கனம்' செய்துகொண்டார்கள் என்ருல் எவ்வளவு அருவசையான செய்கை. இதனுல் ஏற்படும் பாரிய குற்றம் ஞானநிலையை எய்தியவரைச்சேர்ந்ததா? அல்லது அவர்கள் சரிதையை விளம்பியவர்களைச் சார்ந்ததா? அம்மகான் சரிதையை முன்னெருபோதும் கேட்டிராதவர் கேட்கநேரின் இக்குற்றத்தை ஒருகால் அவர்பால் சாட்டவும் கூடும். அப்படியானுல் பிரசங்கம் கேட்டவருடைய நிலைமை குளிக்கப்போய் சேறுபூசியதையொக்குமல்லவா?

இன்னும் தமிழில் பேசும்போது அதனுடே ஆங்கிலப் பதங்களை உபயோகிப்பதனுல் அதை அறியா மக்கள் விஷயம் விளங்காது மனம்வருந்துகின்றுர்கள். ஸ்திரீ புருஷர்கள் கூடியிருக்கும் சபைகளில் பிரசங்கம் செய்வோர் கூடியவரை இனிமையான சொற்களால் அவர்களுடைய மனதைக் கவரக்கூடியவிதம் பேசுவதேயல்லாது கடுமையான வன்சொற்களை உபயோகிப்பது மிகவும் கேவலமான ஓர்செய்கை உதாரணமாக ஓர் ஆண்மகன் சொற்பொழிவு நிகழ்த்தும்போது "பெண்கள்" என்று சொல்வதற்குப்பதிலாய் 'ஸ்திரீகள்' அல்லது "சகோதரிகள்" என்று பேசுவாராகில் எவ்வளவு அழகாயிருக்கும். இவையன்னியில் சொற்பொழிவாளர் முக்கியம் கவனிக்கவேண்டிய இன்னெரு விஷயமும் உளது. ஏனெனில் தாம் பேசவிருக்கும் சபையில் எப்படியாக மக்கள் தமது சொற்பொழிவைக் கேட்பதற்கு ஆவலுள்ளவர்களாய் இருக்கிறுர்கள் என்றும் தாம் பேசுவது அவர்கட்கு நன்ருய்க் கேட்குமோவென்றும் கண்டிப்பாய்க் கவனிக்க வேண்டியதே.

அதை விடுத்து மேடைமீது வந்து நின்று முணுமுணு மந்திரம் ஜெபித்தால் பிரசங்கங்கேட்க, ஆவலாய் வந்தவர்கள் எவ்வளவுதூரம் ஏமாற்றம் அடைவார்கள். அவ்விதம் ஏமாற்றப்பட்டவர்களில் நற்குணமுடையோர் பொறுமை வகித்திருந்தாலும் ஆத்திரமுடையோர் ஏதும் கலகம் விளைவிப்பார்கள். அதனுல் எவ்வளவோ மனத்தாங்கல்களும் நஷ்டங்களும் ஏற்படக்கூடும். இவ்வித இடர்களைக்களைய பெரியோர் தக்கமுயற்சி செய்வார்களாக.

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட், டென்னாற்றுங் கொல்லோ வுலகு.

## மானியம்பதி வாசரும்
## முள்ளியவளை அரசினர் வைத்தியசாலை அதிபருமாகிய
# திரு. சோதிநாதர் - சொர்னவடிவேல் அவர்கட்கு
## வழங்கப்பட்ட
# மதிப்புப் பத்திரங்கள்.

### 1

**வெண்பா**

தூயவடி வேலண்ணல் தொல்லிரைந்
தேவருடம், மேயவெகு நன்மை மிகுதி
யால்—ஆயபுகழ், பத்தாம் வருடப் பகர்பூர்
த்திக் கொண்டாட்டம், அத்தா நிகழ அருள்.

**ஐயாவே!**

முல்லைத்தீவு டிஸ்திறிக்குக்கு தாங்கள் வந்து பத்துவருடம் முடிந்து பதினோராம் வருடம் தொடங்குகின்ற இச் சிங்கார குதூகலத் தினத்தில் இனியென்ன முடிந்ததெனக் கைவிடப்பட்டவரை கரைப்பெரும் பிணியினின்றும் மீட்ட தங்களது வைத்தியத் திறமைக்குச் சாட்சிகூறவும் எம் நன்றியைக்காட்டி மலர் மாலை சூட்டி|யகமிக மகிழவும் இவ்விடம் சமுகம் தாலானோம்.

**இன்மொழிச் செல்வ!**

உயர்குடிப் பிறப்பாலும் எவர்க்குமினிய மதுர வசனத்தாலும் துலங்கி வாழையடி வாழையாய் வைத்தியகொடியிற்றோன்றி பிரக்கியாதிபெற்று இரண்டாம் ஏசண்டுத்துரையாம் திரு.பி.சரவணமுத்து, திரு.ஆர். எஸ். பூலியர், கௌரவ ஸ்ரீமான் த. மு. சபாரெத்தினம் வணக்கத்துக்குரிய புறோகன் மொறோ சுவாமி அவர்களாலும் ஊர்க்குகந்த உத்தமரெனப் பாராட்டப் பெற்று ஆங்கில செந்தமிழ் முதலியவரும் கலைகளால் விளங்கி மாங்குளம், நெடுங்கேணி, புதுக்குடியிருப்பு, கொக்கிளாய் முதலிய வன்னி நன்னாட்டிற்கோர் முடியாக விளங்குகின்றீர்.

**வைத்தியசித்தி வழுவாத குருவே!**

பறங்கி மலேரியா பாண்டு ரோகங்கள் ஈண்டு குடிகொண்டு நம் அனைவரையும் சதா விழுந்தவர்களாக்கி வைத்துக்கொண்டிருக்கின்றன. இந்த நிலைபரத்தில் எம்மை இலகுவிற் கொள்ளைகொள்ளும் சுவாதசயரோகங்களையும், சன்னிதோஷ சலரோகங்களையும், வாதபேத வயிற்று ரோகங்களையும், பைத்தியம் பிரசவம் பாலர் ரோகங்களையும், குக்கல் விக்கல் கண் புண் காது ரோகங்களையும், பாம்புக்கடி படுவான் பழவாத இளவாதங்களையும், முறிவுநெரிவு முகவாதம்மூலம் ஏற்பு வலி வளை தொய்வு கஜம் பிளவை பீனிசம் செங்கமாரி கிஸ்ரீயா மருந்தீடு தந்தம் தொடை ரோகங்களையும், ஆடு மாடு முதலியவற்றின் சகல ரோகங்களையும் தம் வைத்திய நுண்ணறிவாற் கிரகித்தறிந்து இவைகளை ஓட்டிக் கலைந்துத் தம் வைத்தியத் திறமையால் எம் உயிர்களை மீட்டு வருகின்றீர்.

"வடிவேலு என்னும் வளர்நாமம் கேட்டாலும் இடியேறென வெருண்டு ஓடுமே இயமகணம்" என்றதற்கொப்பத் தாம் லீவிற் போயிருக்கும் வேளைகளில் இயமன் இங்காடம்பரம் பண்ணியதல்லாது தாம் இங்குநிற்கும்போது பதுங்காமலும் ஒதுங்காமலும் வந்ததறியேம். சுருங்கச்சொல்லுகில் தாம் இம் முள்ளியவளைப் பகுதியில் எமக்கோர் மணிப்பாய் மண்டுக்கோட்டை நாயன்மார்கட்டு ஒட்டகப்புலம் ஆவரங்கால் அளவெட்டியாகவும் அநேக தருணங்களில் நின்று நேரத்தையும் பொருட்செலவுகளையும் குறைத்து உயிர்களை மீட்டு உலகிற்சிறந்த உயிர்ப்பிச்சை கொடுத்து வருகின்றீர்.

இத்தகைத்தான உயிர் மீட்கும் பேருபகாரங்கட்கு யாம் கைம்மாறு செய்துகொள்ள வல்லேமல்லேம். ஆதலின் எங்கள் இருதய அன்பையே தமக்குக் கைம்மாறு காட்டுகின்றோம்.



சோ. சொர்னவடிவேல்.

தமிழ சிங்கள முகமதியரென்றும் கிறீஸ்தவ சைவ சமயிகள் என்றும் சாதிபேதம் சமயபேதம் பாராமலும், பெரியோர் சிறியோர் என்று பேதங்காட்டாமலும், ஏமத்திலும் சாமத்திலும் ஐயாவென்றழைக்க ஆமென்றெழுந்து அரிய சிகிச்சை செய்து உயிர்த்துணையாய் நின்று எம்பிணியைத் தம்பிணியாய்ப் பாவித்து எம் சுகத்தில் என்றும் கண்ணும் கருத்துமாயிருக்குங் கருணைச் சஞ்சீவியே! தமக்குத் திடகாத்திரதேக சௌக்கியத்தையும் நீடியவாயுளையும் அட்டைஸ்வரியங்களையும் எம்பிரான் கடாட்சிக்குமாறு பிரார்த்தித்து நம்மிடையே இன்னும் பல்லாண்டுகளாக இருந்து வைத்திய உபகாரம் செய்துவர அருள்புரியுமாறு எம்பிரானைப் பிரார்த்திக்கின்றோம். சுபம்.

இங்ஙனம்,

ச. இளையதம்பி,
கிராமச்சங்க அக்கிராசனர்,

வி. உ. குட்டித்தம்பி,
உடையார்

சே. பொன்னையா,
முள்ளியவளை தபாலாபீசதிபர்

நா. தாமோதரம்பிள்ளை,
பிறப்பிறப்புப்பதிவுகாரர்

ச. விஞசித்தம்பி,
பொலிஸ் விதானை

கோ. சின்னத்தம்பி,
பொலிஸ் விதானை.

முள்ளியவளை
13-4-33

### 2

**சிவதொண்டாற்றும்**
**வைத்தியச் செல்வரே!**

சைவ தரும சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட நெறியில் வழாதொழுகி, சைவ ஸ்தாபனங்கள், சைவ வித்தியாலயங்கள் முதலிய சைவ விவகாரங்களிலெல்லா மீடுபட்டு முன்னின்று, மேன்மைகொள் சைவ நீதியை உலகுக்கு விளக்கிக்காட்டுவதில், தணியாத வபிமானியாய் விளங்குகின்றீர்கள்.

"கல்லினால் கோவில் செய்தோர் கைலைவிட் டகலார்" என்னுந் திருவாக்கைச் சிரமேற்றாங்கி, தங்கள் புண்ணியக் கிரியைகளுக்கெல்லாம் ஓர் முடியாக, ஒட்டுசுட்டான் தான் தோன்றியீஸ்வரன் திருக்ஷேத்திரத்தின் உள்வீதியிலே தமது திரவியத்தின் ஓர் பகுதியை உதாரகுணத்தோடுஞ் செலவுசெய்து சித்திர விசித்திர வலங்காரம் பெறத் தம்மாலியற்றுவிக்கப்பட்ட விநாயகராலயமே தம்மை யென்றும் நினைவூட்டும் ஸ்தாபனமாக விளங்குகின்றது.

**கணேச பக்தரே!**

சைவ வித்தியாலயங்களின் பரிசளிப்பு வேளைகளிலும், பெற்றார் தினக் கொண்டாட்டங்களிலும், சைவ உபந்நியாச சமாசங்களிலும் இந்நாட்டுப் பெரியார் பட்டம், பட்டயங்கள் பெற்றுவருந் தருணங்களிலும் தம்மை யுவந்தெடுத்து அக்கிராசனபதவியீந்தும், உயிர்களுக் குறுதுணைபுரியும் இராசவைத்தியனென்ற முறையிலுன்னதவரசாங்க வுத்தியோகஸ்தர் சபையில் கண்ணியம் வாய்ந்த உதவி ஏசன்றுத் துரையாகும் திரு. பீ. சரவணமுத்து அவர்களால் அக்கிராசனம் வகிக்கப்பட்ட விருந்துகளாற் சன்மானஞ்செய்யப்பட்டும், கிறிஸ்த, சைவ, புத்த, மகமதியர் வாழும் முல்லைத்தீவுப் பட்டணத்துக்கு, உத்தம தேசாதிபதியாகும் ஆர். ஈ. ஸ்ரப்ஸ் மன்னருந் தேவியாரும் 7-2-35-ல் அன்று விஜயஞ் செய்தபோது அன்னார்க்குப் பரிமளந்தெளிக்கப் பாக்கியயோக்கியதையுடையீரெனத் தெரிந்தெடுக்கப்பட்டும், இன்னோரன்ன பல வகையாலும் இவ்வன்னி நந்நாடு தம்மைக் கண்ணியப்படுத்தி வருவதால், இலங்கையில் சேர். பொன். இராமநாதத்துரையவர்களால் சைவர்களுக்குப் பெருமை கிடைத்ததுபோல், இப்பகுதியில் தம்மால் சைவராகிய எமக்குப் பெருமை கிடைக்கின்றது.

**கண்ணியமிக்க புண்ணியப் பிரபுவே!**

இலங்கையின் பல பாகங்களிலுமரசாங்க வைத்தியராய் விளங்கி, தற்போது இப்பகுதியில் ஈராறு ஆண்டுகளாக எம்மிடையே வதிந்து, தாம் எமக்குள் நடத்திவரும் தவறாத சித்த வைத்திய முறைகளை நன்றியோடும், பிரமிப்போடும் நாமுவந்து அவதானித்து வந்திருக்கின்றோம். தமது சிவபக்திக் கடையாளமாக இந்தச் சித்திவிநாயகராலயம் விளங்குவதுபோல, தம் வைத்தியசித்திக் கடையாளமாகத் தமது சுலப சூட்சசித்த வைத்திய முறைகள் காடடகத்தலர்ந்த மலராகியும், யாக்கையற்ற நிழலாகியும் விழலாகாவண்ணம் உயிர்கட் குறுதுணையாகவும் தமது புகழுடம்பை யென்றும் நிலைநாட்டுங் கருவியாகவும் விளங்கும்படி யவைகளை அச்சிடுவித்துத் தாத் தமது ஆலயத்திற் கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் அக் கணேசப்பெருமானை தாம் கைபிடுங் காரியங்களிலெல்லாம நனி சித்தியைக் கடாட்சித்துத் தமக்குச் சுகவாழ்வையும் அருள்மாரியாகச்சொரியுமாறு பிரார்த்திக்கின்றேம்.

மேல்பற்றுவடக்கு ஒட்டுசுட்டான், 20-3-35. } கா. உ. மாப்பாணர் உடையார், கிராமச்சங்கத் தலைவர்

(78) 2-2-36


# மருந்துச் சாக்குகளின்
## விளம்பரம்

இத்தாற் சகல வைத்தியர்க்கும், மருந்துச்சரக்கு வியாபாரிகட்கும் தெரிவிப்பதாவது:—இப்போது பெரியகடை மார்க்கட்டுக்கு வடக்குப் பக்கத்திலிருக்கும் சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடையிலும், நல்லூர்வடக்குச் சட்டநாதர் கோயிலடியிலிருக்கும் மேற்படியாரின் மருந்துச் சரக்குக் கடையிலும், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, காண்டாமிருகக் கொம்பு, சுத்தமான சிப்பி முத்தும் அடியிற் குறிப்பிட்டிருக்கும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்

| | களஞ்சு ஒன்றுக்கு | தோலா ஒன்றுக்கு |
|---|---|---|
| 1-ம் நம். கஸ்தூரி | 20—00 | 40—00 |
| ,, கோரோசனை | 3—25 | 7—50 |
| ,, குங்குமப்பூ | 50 | 1—20 |
| ,, முத்து | 14—00 | 32—50 |

1-ம் நம். காண்டாமிருகக்கோம்பு களஞ்சு ஒன்றுக்கு சதம் 50.
ருத்தல் ஒன்றுக்கு ரூபா 40.

மேலே சொல்லப்பட்ட சரக்குகள் எல்லாம் முதல்தரமான நல்லசரக்குகளே, எங்களிடம் நேரில்வந்து பார்த்துக்கொள்ளலாம். இன்னும் சுருள் தங்கம், புனுகு, பச்சைக் கற்பூரம் ஜவ்வாது, அரைத்த சந்தனம், சந்தனக்கட்டை, சந்தனவில்லை, சாம்பிறாணிப் பதங்கம், தைலம், முதலியவைகளும், சென்ற், அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களும், திறமான பன்னீர்வகைகளும், அபிஷேகத்திரவியங்களும், ஓமவாட்டர், சுருட்டுக்கோடாச் சரக்குவகைகளும் பலவிதமான திறம் ஊதுவத்திவகைகளும், மற்றும் மருந்துச் சரக்குவகைகளும் தொகைக்கும் சில்லறைக்கும் சரசமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

தஞ்சாவூர், மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் சஞ்சீவி மருந்து வகைகளும்; திருச்சி, டக்றர் A. மதுரம் அவர்களின் குரு மருந்து வகைகளும்; யாழ்ப்பாணம், டக்றர் ஜே. வஸ்தியாம்பிள்ளை அவர்களின் மருந்துவகைகளும் இவ்விடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வீ. பீ. மூலம் பெற விரும்புவோர், நான்கிலொருபாகத்தை முற்பணமாக அனுப்பவேண்டும். தொடுவாய்ப்பகுதிகளுக்கு முழுவதும் முற்பணமே அனுப்பவேண்டும்.

தபால், மணிஆடர் அனுப்பும் விலாசம்:

**ஆ. இராசையா,**
சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சாக்குக் கடை
பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

(59) 29-12-35—12.



## சுத்தமான
## கதர்ப்புடவைகள்.

திருப்பூர் சுயம்கதர் வேஷ்டிகள், சால்வைகள், துண்டுகள், ஷேட் துணிகள் முன்னிலும் பார்க்கச் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

**ஆ. சு. வேதாரணியம்பிள்ளை,**
புடவை வியாபாரம்,
பெரியதெரு, சுன்னாகம்.

50) 1-12-35×12-36.

# வாக்காளர் கடமை.

(மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பிரதம ஆசிரியர் ஸ்ரீமான் வி. வீரசிங்கம் B. A., அவர்கள், சென்ற 3௨ வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு அராலியில் மிஷன்பாடசாலையில் நிகழ்த்திய பேருரையின் பொழிப்பு.)

(முற்றொடர்)

நேர்மையும் நீதியுமற்றுச் சுயநலப் பிரியராகிக் கிரியைகளை இயற்றுவது எமதுநாட்டவர்க்குச் சரியன்று. பணத்தைப் பெற்றுக் கூலிக்கு மாரடிக்கும் தொழிலைப் பூண்டொழுகுவதும் கெடுதியையே விளைக்கும். இத்தகைத் தொழிலைப் புரியாதபடி பொதுஜனங்களுக்கு நாம் புத்தி புகட்டவேண்டும். செய்யும் தொழிற்கு ஏற்ற கூலியைப் பெறுவது நியாயமேயாகும். ஆயினும் பணம்பெற்று வாக்காளரைச் சேர்த்துத் தருவேனென்று கூறி அபேக்ஷகரை ஏமாற்றும் தொழிலானது ஊரைப்பாழாக்கிவிடும். இங்ஙனம் செய்யாதபடி, ஜனங்களுக்கு நல்லது தீயதைப்பகுத்தறிந்து காணும் அறிவையும், எவர் தகுதிவாய்ந்தவர், எவரைத்தெரிந்தனுப்பினுல் தீது என்பதை அறியும் ஆற்றலையும் கற்பிக்கவேண்டும். அபேக்ஷகர் ஒவ்வொருவருடைய குணநிசயங்களை ஆராய்ந்தறியமுன், தகுதிவாய்ந்தவரோ அற்றவரோ என்பதை நன்றாய் உணரமுன் ஒருவர் சார்பாகவும் தலையிடுதல் கூடாது. நான் ஓர் நாள் எனது கிராமத்துக்கூடாகச்சென்றேன். அப்பொழுது ஓர்வாக்காளனையும்சந்தித்தேன். உடனே யான் நீங்கள் யாருக்கு வாக்களிக்கப்போகின்றீர்கள் என்று வினவினேன். அவர் ஒருவருடைய நாமத்தைக் கூறினர். நான் உடனே வேறொருவருக்காக வாக்களிக்கும்படி கேட்டேன். அதற்கு அவர் "கும்புட்டாலும் போடமுடியாது" என்று கூறினர். அவருடைய குணத்தை நான் மெச்சக்கூடியதாயிருந்தது. ஏனெனில் அவர் ஒருவருக்கு வாக்குப்பண்ணிய நிலையில் உறுதியாக நின்று கொண்டார். ஆனுல் அரசசபைக்கு அங்கத்தவரைத் தெரிந்தனுப்பும் கருமம் ஓர் வீட்டுக் கருமம் போன்றதல்ல. ஆகையினுல் அதி உத்தமமான அபேக்ஷகர் யாவர் என்பதை உணரும் வரைக்கும் ஒருவருக்கும் வாக்குப்பண்ணக்கூடாது. ஒரு குழந்தைக்குத் தீமையை விளைக்கக்கூடிய ஓர்பொருளை அக்குழந்தைக்குக் கொடுக்கலாமா? அங்கத்தவராய் வரமுன்னிற்கும் அபேக்ஷகரிற் சிலர் குழந்தைகளைப்போன்ற அனுபவமுதிர்ச்சி யற்றவராயும், சிலர் வயதில் முதிர்ந்தவரைப்போன்ற அனுபவமுதிர்ச்சி யுள்ளவராயு மிருக்கிறுர்கள். ஆகையால் தாரதம்மியங்களை நன்றாய் ஆராய்ந்து எவர் உத்தமமானவரென்பதை உணரவேண்டும். ஒருவரோடொருவர் வீண் விவாதங்களை வளர்த்து ஒருவரையொருவர் தூற்றித் திரிவது பெருங் கெடுதிகளைக் கொண்டு வரும். ஆனுல் நீதியைப்பேசுவதில் அஞ்சா நெஞ்சு படைத்தவராய்ப் பேசவேண்டும். அங்கத்தவரைத் தெரிந்தனுப்பும் விஷயத்தில் ஒருவரையொருவர் மரபை இழுத்துப்பேசித் திரிவது ஒருவாக்காளனின் கடமையன்று.

அபேக்ஷகர்கள் முன்வருகின்றுர்கள். அவருடைய குணநிசயங்களைக்குறித்தும், தகுதியைக் குறித்தும் ஆராயுங்கள். ஓர் அபேக்ஷகருக்கு விசேஷமாயிருக்க வேண்டிய குணம் யாது? அவரைத் தெரிவுசெய்கின்ற வட்டாரத்திலுள்ள வாக்காளர் கவலையடைகின்ற காலத்து அவரும் கூடி அனுதாபப்பட்டும், அன்னூர் மகிழ்ச்சியடையுங்காலத்து அவரும் சேர்ந்து மகிழ்ச்சி அடைந்தும் விளங்க வேண்டும். அப்படிப்பட்டவரே உண்மையான பிரதிநிதிகளாவர். மகாத்மா காந்தியடிகளை இந்தியநாட்டின் உண்மையான பிரதிநிதியென்று கூறலாகும். ஏனெனில், அவர் தம் நாட்டினர் கவலையடையும் காலத்தில் தாமும் கவலையடைந்தும், மகிழ்ச்சியடையுங் காலத்தில் மகிழ்ச்சியை யடைந்தும் தமது தொண்டினை யாற்றுவர். இங்ஙனம் சுயநலமற்ற செய்கைகளைப் புரிபவர் எமது நாட்டில் அரிதினுமரிதினுமரிதே. எமது பிரதிநிதியாயுள்ளவரொருவர் தமது மைந்தன் "மற்றிக்கிலேஷனி"ல் (Matriculation) சித்தியடைந்தும், வேறொருவன் பீ. ஏ. யில் (B. A.) சித்தியடைந்தும் இருக்குங் காலத்தில், இவ்விருவரும் ஒரு உத்தியோகத்தைப் பெறத்தெண்டிக்கும் பொழுது, தமது மகனுக்கே அவ்வுத்தியோகத்தை எய்தச்செய்வர், தமது மகனுயிருந்தமையின் அவர் ஒருபக்கம் சார்தலையுடைய வரானூர். ரோமாபுரியில் (Rome) ஓர் போர்வீரனிருந்தான். அவன் ஓர் குறித்த பாலத்தைக்கடந்து ஒருவரும் செல்லப்படாதென்று ஓர் பிரமாணம் பிறப்பித்தான். அவனுடைய சொந்த மைந்தனும் அவனுடைய நண்பரும் ஓர் நாள் அந்தப்பாலத்தைக் கடந்து சென்றனர். உடனே அந்தப்போர்வீரன் தனதுமைந்தனே குற்றம்செய்தானென்றும்பாராது அவனையும் தண்டித்தான். இவ்வகையான செயலையுடைய மக்கள்வாழ்ந்திருந்தரோமாபுரி ஓர் காலத்தில் உலகம் முழுவதிலும் முதன்மை வாய்ந்தவோர் இராச்சியமாய் விளங்கினது. ஆகையாற் சுயநலப்புலிகளை அங்கத்தவராய்த் தெரிந்தனுப்பாதேயுங்கள். சுயநலப்பிரியர் தாம் தெரியப்படுவதற்காய்ச் செலவு செய்த பணத்தைத் தேடிக்கொள்வதற்கு அங்கத்துவம் வகித்திருக்கும் காலத்தில் முயலுவர். கிராமக்கோட்டு அதிபரொருவர் ஓர் "றோட்டை" (Road) த் திருத்துவதற்கு 250 ரூபா செலவு செய்வதற்காய்க் குறிக்கப்பெற்றிருந்தால் அதில் 150 ரூபாவையே செலவு செய்து மிகுதிப்பணத்தைத் தமக்காய் உபயோகப்படுத்திவிடுகின்றனர். இங்ஙனம் அடாத செயலைச் செய்யவல்ல அங்கத்தவரைத் தெரிவு செய்யின் கேடே விளையும்.

அங்கத்தவரைத் தெரிவு செய்வதில் பார்க்க விஷயம் தலைகாட்டுவது நல்லதல்ல. சைவராயுள்ள அபேக்ஷகர்கள் சைவருக்கே நன்மையைச் செய்வதும், கிறீஸ்தவரா யுள்ளவர்கள் கிறீஸ்தவருக்கே நன்மையைச் செய்வதும் நீதியல்ல. இந்தவகையான அபிப்பிராயத்தால் நாட்டுக்குக் கேடே சம்பவிக்கும். ஓர் சைவனுன அங்கத்தவர் எல்லா மார்க்கத்தினரையும் ஒரேதன்மையாய்ப் பாவியாதிருப்பின் அவர் சைவனென்று அழைக்கப்படுதற்கு அருகரல்லர். சைவமதம் எல்லா மதத்தினர்க்கும் சார்பாயிருக்கக்கூடிய அத்தகைப் பரந்த நோக்குள்ள மதமாகும். ஆகையாற் சைவசமயத்தவர் குறுகிய நோக்கமுடையராயிருத்தல் நன்றன்று. கிறீஸ்துவ அங்கத்தினரும் குறுகிய நோக்கற்றவராய்த்தம் கருமத்தை இயற்றவேண்டும்.

ஒரு அபேட்சகர் அங்கத்தவராய் வரும்பட்சத்தில் அவருக்குரிய தொண்டுகளைப் புரியக்கூடிய ஆற்றல் அவரிடத்திருக்க வேண்டும். அவரிடத்துத் தேசபக்தி ததும்பி வழியவேண்டும். அவர் ஊக்கமற்றவரும், சக்தியற்றவரும், தேசபக்தியற்றவராயுமிருந்தால் Yes என்று சொல்லவேண்டிய இடத்தில் No என்றும், No என்று கூறவேண்டிய இடத்தில் Yes என்றும் கூறிவாளாவிருப்பர். அவருக்குச் சரியெது பிழையெது என்றுகாணும் ஆற்றல் கிடையாது. அரவிந்தகோஷ் (Arabindha Ghose) என்னும் ஓர் பெரியவர் இருந்தார். அவருக்கு அவரின் நாடே தெய்வமாகும். அவர் தமது நாட்டின் எல்லாப்பாகத்திலும் தெய்வத்தையே கண்டனர். இவரைப்போன்ற ஓர் பெரியார் எமது நாட்டிலுமிருப்பின் எமக்கு யாதுகுறை! எமது நாட்டின் பிரதிநிதிகள் "ஒப்புக்கு மாரடிப்பார்கள்". ஏனெனில் அவருக்கு அரசியல் ஞானம் சுத்தசூனியமாகும். "ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை" என்றபடி இவர்கள் எமது நாட்டுக்கு ஓர் வகைக்கேடும் புரியாதுவிடும் பக்ஷத்தில் இவர்களை நாம் தெரிந்தனுப்பலாகும். ஆனுல் இவர்களைத் தெரிந்தனுப்புங்கால், இவர்கள் அங்குசென்று ஐந்துவருடமாயங்கு தங்கித் தாம் பணம் சம்பாதித்ததுமன்றிப் பலவித தீமைகளையும் புரிந்துவிடுகின்றனர். இங்ஙனம் நேருவதும் பெரும்பாலும் நாம் பக்குவமறிந்து அங்கத்தவரைத் தெரிந்தனுப்பாத காரணம பற்றியே. ஆங்கிலநாட்டிற் குதிரை லாயங்களில் வேலைசெய்வோர்களும் Chinney களைத் துடைப்பவருமாகிய அத்தகைக் கூலிச்சனங்களும் அரசியல் ஞானம் முற்றும் படைத்தவராய் விளங்குகின்றுர்கள். எமது நாட்டவருக்கோ State Council என்றுல் இன்னதென்று விளங்காது. ஆகையால் அரசியல் ஞானம் பொதுஜனங்களுக்கும் வரச்செய்வது எங்களைப் பொறுத்தவோர் பெருங்கடமையாகும்.

சிங்கள மக்களின் நடபடிக்கைகளை நோக்குங்கள். அவர் எம்மிலும் பார்க்கக் கூடிய ஞானம்படைத்தவராய்த் தோன்றுகின்றனர். நான் சிங்களநாடுகளுக்குச் சென்றிருந்தேன். அவர்கள் பெருந்தொகைப் பணம் சம்பாதித்திருக்கிறுர்கள். "மலேறியா" (Malaria) சுரத்தை நிற்பாட்டப் பல வழிகளைக் கண்டிருக்கிறுர்கள். "மின்னேரியா" (Minneriya) முதலிய குளங்களைச் சுத்தி செய்திருக்கிறுர்கள். குருநாகலில் வடநாட்டிலிருந்து மாடுகளை வரமற் செய்து நாட்டிலுள்ள மாடுகளையே வளர்த்து உபயோகப்படுத்துகிறுர்கள். ஜெனநாயக்கா Sena-nayaka என்பவரைப் பராக்கிரமபாகு (Parakrama bahu the great) என்ற பெரும்பெயராலும் அழைக்கின்றுர்கள். செனநாயக்கா என்பவர் சிங்களநாட்டின் கிருஷிகமுறைகளைத் திருத்தி மேனிலைக்குக் கொண்டுவந்த காரணத்தினுலேயே அவரை அப்பெயர்கொண்டு அழைக்கிறுர்கள். இங்ஙனமாய் எங்களுடைய நாட்டின் கிருஷிக நிலையைத் திருத்தினவர் எவருமுண்டா? எமது யாழ்ப்பாண மாதா தனக்குவேண்டிய போதிய உணவுப்பதார்த்தங்களை உண்டு பண்ணக்கூடிய நிலையிலில்லையே. மற்றும் பல திருத்தங்களும் செய்யப்பட வேண்டிய அத்தகைக் கேவல நிலையே எமது யாழ்ப்பாண நாட்டுக்கிருக்கின்றது.

ஓர் காலத்தில் யாழ்ப்பாண மாணவரே அதிமாய்க் "கிளெறிக்கல்" (Glerical) பரீக்ஷையிற் சித்தியடைந்து இலங்கையிற் பல பாகங்களிலும் உத்தியோகம் வகித்திருந்தார்கள். இப்போது இப்பரீக்ஷையிற் பலர் சித்தியடைகின்றுரில்லை. எமதுமாணவர்க்கு அனுகூலமாயிருந்த கணிதபாடத்தைப் பாடதிட்டத்திலிருந்து நீக்கிச் சிங்களருக்கு அனுகூலமாக்கியிருக்கின்றனர். இக்குறைகளையெல்லாம் நிவிர்த்தியாக்கி எமக்கு நன்மையையே புரியக்கூடிய அத்தகைத் தகுதிவாய்ந்த அங்கத்தவரையே நாம் தெரிந்தனுப்பவேண்டும்.

எமக்குப் பிரதிகூலமான விஷயங்களில் நாம் சிங்களரோடு எதிர்த்துவாதம் புரிய நேரினும் நாம் அவரோடு பகைத்துக்கொள்ளுதல் தகாது. சுதந்திரத்தைப்பெறுவதில் நாம் அவரோடு ஒத்துழைக்க வேண்டும். அவர் யாழ்ப்பாணத்திற்கு நட்டம் செய்து விட்டாரெனின் நாம் நான்கு வருடகாலமாய் அரசியற் சபைக்கு அங்கத்தவரை அனுப்பாது விட்ட காரணம்பற்றியே இங்ஙனம் நேர்ந்ததென்றுகூறவேண்டும். அங்ஙனம் ஏற்பட்ட நட்டங்களை நிவிர்த்தியாக்கி இனி நாம் இலாபத்தை யடையும்மார்க்கத்தைக் கைக்கொள்ளவேண்டும்.

இங்கிலாந்தும் ஸ்கொற்லாந்தும் ஒரு பாராளுமன்றத்தின்கீழ் அரசாளப்பட்டு வருகின்றது. ஆனுல் இப்பொழுது ஸ்கொற்லாந்தில் "நாஷனலிஸ்ற்" (Nationalist Party) பகுதியார் உண்டுபட்டுத் தாம் புறம்பான அரசியலை ஏற்படுத்த வேண்டுமென்று கிளர்ச்சியுறுகின்றனர். நெடுங்காலமாய் இங்கிலாந்து, ஸ்கொற்லாந்து; அயர்லாந்து, வேல்ஸ் நாடுகள் யாவும் ஒரே அரசியற்றிட்டத்தின்கீழ் நடைபெற்று வந்தன.


## திருநெல்வேலி ஒற்றுமைநிதி

(வரையறுத்தது)

**அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 5,00,000**

ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்தி

**ரூ. 25ம் ஆதாயமும் பெறலாம்.**

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.

வேண்டிய இடங்களில்

**கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.**

தேசீயகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும்
ஆதலால்
முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்

**நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்.**

இலகுவானமுறையில் இறுக்கக்கூடிய கடன்கள்கொடுக்கிறோம்
உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும்
சம்பாத்தியத்திலும், கடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.

**பங்குகளுக்கு முந்துங்கள்**

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருட்களும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

வ. சோமசுந்தரம், காரியாதிகாரி

(30) 18-11-34—11-35.

# கல்லெறியும் திருக்கைவாலடியும்

## காயப்பட்டவர் மரணம்.

(நமது நிருபர்.)

யாழ்ப்பாணம் 30

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் பொலிஸ்நீதிபதி திரு. K. ஆழ்வாப்பிள்ளை முன்பாக மானிப்பாய் உடுவில் வாசிகளாகிய 1 V. கணபதிப்பிள்ளை, 2. K. இராசையா, 3 சாமுவேல் இராசையா முதலியவர்கள்மீது சங்குவேலி வாசியாகிய முருகேசு திருநாவுக்கரசு என்பவரைக் கல்லால் குத்தியும் திருக்கைவாலால் அடித்தும் பாரதூரமான காயங்களை வருவித்ததாகப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் W. I. வைமனால் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரிகள் சார்பாக நியாயதுரந்தரர் H. R. அரியகுட்டியும், வழக்காளி சார்பாக W. I. வைமனும் விவாதித்தார்கள்.

முதலாவதாக, பெரியதம்பி பொன்னுத்துரை என்பவர் கூறிய சாட்சியத்தின் சாராம்சம் வருமாறு:—

எதிரிகளையும் காலஞ்சென்ற திருநாவுக்கரசுவையும் எனக்கு நீண்டகாலமாகத் தெரியும். நானும் காலஞ்சென்றவரும் வரும்போதே இவர்கள் எம்மைக் கல்லால் குத்தியும் திருக்கைவாலாலுமடித்த விஷயத்தைத் திருநாவுக்கரசுவாவது நானாவது ஒருவருக்கும் சொல்லவில்லை. எதிரிகள் தான் என்மீதும் அவர்மீதும் நாங்கள் அவர்களை அடித்ததாக மல்லாகம் பொலிஸ்கோட்டில் ஓர்வழக்கை வைத்தார்கள். அதன் பின்னர் நானும் திருநாவுக்கரசுவும் முருகேசுவும் சேர்ந்து புரட்டாதி மாதத்தில் மாகாண அதிகாரிக்கு இது விஷயத்தைப்பற்றி ஓர் விண்ணப்பப்பத்திரம் அனுப்பினோம். எனது தலையில் கல்லால் குற்றியகாயமும் திருக்கைவாலால் அடித்த காயமும் காணப்பட்டதேயாயினும் வைத்தியப் பரீட்சை செய்யவிக்கவில்லை. திருநாவுக்கரசுவின் காயங்கள் அதிக மோசமான நிலைமைத்தில் வந்ததின் பின்னரே மானிப்பாய் வைத்தியசாலைக்கும் அதன் பின்னர் நாயன்மார்கட்டு வைத்தியசாலைக்கும் அவர் சென்றார். அங்கேயே இறந்துவிட்டார்.

சாட்சி குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

அதன் பின்னர் குட்டி-கந்தையா கொடுத்த வாக்குமூலத்தின் சாராம்சம் வருமாறு:—

"இதுசம்பவம் நடைபெற்ற வன்று நான் இளையதம்பியின் கடையில் கோப்பி சாப்பிடுவதற்காகச் சென்றபோது காலஞ்சென்றவரும் முற்கூறிய சாட்சியும் ஒழுங்கை வழியாக வந்து ரோட்டில் ஏறினார்கள். முன்னடியே இவர்கள் வரவைக் காத்துக்கொண்டு மதிலில் இருந்தவர்களாகிய எதிரிகளுள் 2-ம் எதிரி "நேற்றென்னடா சொன்னாய்" எனத் திருநாவுக்கரசுவைக் கேட்க, 3-ம் எதிரி அவரது தலைமயிரைப்பற்ற 1-ம் எதிரி கீழேகிடந்த கல்லொன்றை எடுத்துப் பிடரியில் குத்தினான். இதனைக்கண்ட பொன்னுத்துரை விலக்கிவிடப்போக இராசையா என்பவர் அவருக்கும் கல்லால் குத்தினார். அத்துடன் நான் போய்விட்டேன். அப்பாலென்ன நடைபெற்றதென எனக்குத் தெரியாது.

இச்சாட்சியுங் குறுக்குவிசாரணை செய்யப்பட்டது.

அதன்மேல் நாகமுத்து அருளப்பாவும், காலஞ்சென்றவரது தாயாராகிய மீனாட்சியும் சாட்சியம் கூறினார்கள்.

இவ்வளவில் வழக்காளிபக்க விசாரணை முடிவுற்றது.

நீதிபதி 1-ம் எதிரியினது கைபணையாளத்தை எடுக்கும்படி உத்தரவிட்டு வழக்கை வருகிற 6-ம் திகதிக்கெனத் தவணையிட்டார்.

---

சொற்ப காலத்துக்குமுன் அயர்லாந்து புறம்பாகிவிட்டது. ஸ்கொற்லாந்தும் இப்பொழுது கிளர்ச்சியடைகின்றது. இலங்கையிலும் தெற்குப்பாகம் வடக்குப்பாகமென இருபிரிவுகளுண்டு. வடக்குப்பாகமான யாழ்ப்பாணமும் சம உரிமைகளைப் பெறவேண்டும். அங்ஙனம்பெற முயற்சி செய்வதிற் சிங்களமக்களோடு விரோதியாது அவரோடு ஒற்றுமையாகவே முயற்சிக்கவேண்டும். சிங்களர் தேசாதிபதியின் தத்துவத்தை நீக்கிவிடப் பார்க்கின்றனர். மகமதியாதியோருக்கு இது விருப்பமில்லை. தேசாதிபதியின் தத்துவம் நீக்கப்படுவது தமிழருக்கும் விருப்பமான ஓர் விஷயமன்று. ஆகையால் இதற்குச் சார்பாய்த் தமது அபிப்பிராயங்களை வைத்திருக்கக்கூடிய பிரதிநிதிகளை நாம் ஒருபோதும் தெரிந்தனுப்புதல் தகாது.

எமது அரசியற் சபையில் ஏழு மந்திரிமார்கள் உண்டு. முதல் மந்திரியாயுள்ளவரே மற்றைய மந்திரிமாரைத் தெரிவு செய்வார். இங்ஙனமாகத் தமிழருக்குள் மந்திரித்துவம் வகிக்கக் கூடிய வசதி ஏற்படாது. எல்லாப் பிரதிநிதிகளும் சேர்ந்து பிரதம மந்திரியைத் தெரிவுசெய்ய, இப்பதவி சிங்களப்பிரதிநிதிகளிலொருவருக்காக, அவர் பின் தெரிவுசெய்யும் மந்திரிமாரைத் தமது சாதியார்க்குள்ளேயே தெரிந்துகொள்வர். இதுவுமன்றிச் சுற்றத்தார் பக்கமாயும் அவருடைய தெரிவு சார்ந்துவிடும். எமக்குப் பிரதிநிதிகளாய்ச் செல்கின்றவர் இவ்வித குறைகளையும் நிவிர்த்திசெய்யக்கூடியவரா யிருக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்தின் பிரதிநிதிகள் ஒருவரோடொருவர் அபிப்பிராய பேதமுடையவராய், ஒற்றுமைக்குறைவுள்ளவராய்ப் பெரும்பாலும் விளங்குகின்றார்கள். Sir. P. இராமநாதனுக்கும் மாறான கொள்கைகளையுடைய தமிழ்ப் பிரதிநிதிகளும் இருந்திருக்கிறார்கள். சிலர் அரசினர் சார்பாகவும் விளங்கினார்கள். இவ்வித அற்பபுத்தி படைத்த பிரதிநிதிகளை யாம் தெரிந்தனுப்புதல் ஆகாது. ஒருபிரதிநிதி தெரிவுகாலத்தில் தமக்குமாறாக வாக்களித்த வாக்காளர்களுக்குத் தெரிவு செய்யப்பட்டபின் விரோதமான செய்கைகளைச் செய்வதும் ஓர் பொதுவான வழக்கமாகும். நான் யாரோ ஒருவரைச் சுட்டாமற்சுட்டிக் காட்டவில்லை. பிரதிநிதிகளாயிருப்பவர் தெரிவு முடிந்த பிற்பாடு யாவரையும் ஒரேவிதமாய் நடத்துதல் வேண்டும். எமது குறைகளைப் பிரதிநிதியானவர் நன்றாய்ப்படித்து, எம்மோடு அனுதாபப்பட்டு, அவற்றை நிவிர்த்தி செய்யப் பார்ப்பதே வேண்டிய உண்மைத் தொண்டாகும்.

நான் நெடுநேரமாய்ப் பேசிவிட்டேன். எனது பேச்சின் கருத்தை நீவிர் உணர்ந்திருப்பீரென்றும் நம்புகின்றேன். பலவிதமாயும் எமது நாட்டினை அடிமைத்தனத்தி லமிழ்த்தும் முறைகளை வேரோடு களைந்துவிட்டு, மேனிலைக்குக் கொண்டுவரக்கூடிய கொள்கைகளை அனுசரித்து உமது தொண்டினை ஆற்றுவீராக. இறைவன் உமக்குத் திருவருள் புரிவாராக.

---

## விதியை வென்ற சுப்பிரமணியன் காதை.

[மனுப்புலியார்]

(முற்றொடர்)

வேறு.

65. அகன்று போகிய அண்ணல் அன்றிராப்
புகன்று மாமறை புரியும் பூசையும்
அகன்ற கானகத் தாற்றிக் காய்கனி
அயின்று கண்வளர்க் தானேர் சோலையில்

வேறு.

66. மாடுரப்பும் ஒலிகேட்டான் மற்றெழுந்து
  கண்துடைத்தான் மகிட மொன்றிற்
போடுமொரு சுமைகண்டான் நிலவொளியிற்
  போயவண்யா ரென்று பார்த்தான்
பாடுபடு முளத்தினனாய்ப் பகீரத்
  துகிலுடுத்தவ் வெருமை பற்றி
வாடியதி கெதியாக வாய்க்குள்மினு
  மினுத்துவந்தான் வடிவாய்ப் பார்த்து

67. கண்டறிந்தான் கதியழித்தான் காட்டினிலே
  மோட்டெருமை தேடச் செய்தான்
அண்டருமுண் டுகெல்லை உருவியொரு
  சுமைசேர்க்க அமைத்து வைத்தான்
தண்டமிழின் கடற்பெருமை தங்காத
  உவராழி தன்னின் மூழ்கி
வண்டமருங் கோதைதனக் கெந்நாளும்
  முத்தெடுக்க வரைந்தான் தன்னை

68. வாய்திறந்து வணக்கமுடன் சுப்பிரமண்
  ணியமுதல்வா வரைய நான்வக்
தாயபொழு தினிலறிந்தாய் அவ்விதியை
  அவர்க்குநல னாகச் செய்தாய்
காலவனைக் காரணத்தைக் கண்டிலனாற்
  காரிகையு மவனின் மூத்த
சேயவனும் இறந்தொழியும் செய்தியறி
  யும்வரையீ தொழியா தென்றான்

69. எனக்குவிதி நீவரைந்தாய் என்றெடுத்தும்
  இயம்பினனாற் பிரம தேவன்
தனக்குநிகர் தானான தவமுறுசுப்
  பிரமணியன் தன்னைப் பார்த்து
மனக்கவலை யெனக்களித்து நின்றனையால்
  மருண்டவிதி மடந்தை யாளும்
அனக்குறைவில் லாதருளு மப்பனும்வாழ்
  வுறுநாள்கள் அனைத்து மன்றோ

70. தினமுமினி இவ்வாறு திரிந்தலைய
  முடியாது சுப்ர மண்யா
மனமிரங்கி என்றனையுங் காப்பாற்று
  மலரடியில் வீழ்கின் றேன்யான்
எனவிரங்கி இருந்தழுதான் இவ்வுலகில்
  ஏவற்கும் இயையு மாறு
கனவிதியை வரைந்துலகைக் கடிதாட்டுங்
  கருணைநிறை கமலத் தோனே.

முற்றிற்று.

---

### நாகியைக் கடத்திய முருகன்

மல்லாகம் 27வ

மல்லாகம் போலிஸ் கோட்டில் தொல்புரம் வாசியாகிய நாகன் முருகன் என்பவனுக்கு எதிராக அவ்வூர் வாசியாகிய முருகன் மகள் நாகி என்னும் 13 வயதுப் பிராயமடைந்த சிறுமியைக் கடத்திச்சென்றதாகத் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது கடத்தப்பட்ட சிறுமியின் தந்தையாகிய வேலன் முருகன் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

எனது மகளாகிய 13 வயதுப்பிராயமுள்ள நாகிஎன்பவளை எனது வீட்டிலிருக்க விடுத்து நான் வெளியே போய்விட்டேன். பின்னர் பெரியான் முருகன், எனது மகளை முருகனாகிய எதிரி கூட்டிக்கொண்டு கடற்கரையோரமாகப் போவதாகத் தெரிவித்தான். அம்பலவி என்பவனும் தான் கண்டதாகக் கூறினான். அன்றிரவும் மறுநாளும் தேடியலைந்தேன். சந்திக்கவில்லை. பின்னர் பொலிஸ்விதானைக்கு இது சம்பவத்தை அறிவித்தேன். அவர் அதன்மேல் வேலன் இராமன் வீட்டில் எனது மகளையும் எதிரியையும் பிடித்தார்.

இதன்பின் சிலசாட்சிகளை விசாரித்ததின் மேல் நீதிபதி எதிரியை 250 ரூபா பிணையில் விடுத்து வழக்கை வருகிற 3-ந் திகதிக்கெனத் தவணையிட்டார்.

### பவனிவிழா.

நிகழும் யுவவருஷம் தை மாசம் 21-ந் திகதி (3-2-36) திங்கட்கிழமை இரவு மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவிலில் ஷை பெருமானுக்கு அபிஷேகமும் விழாவும் நடைபெறும். —கடித.

---

கிராதார்ச்சுனீயம்.

1936-ம் ஆண்டிற்குரிய
சிரேட்ட பாடசாலைத் தராதரபத்திர
வகுப்பிற்குரியது.

விலை சதம் 60.

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்

---

Registered as a Newspaper. 16 Pages

# "The EeLAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED — BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 6 } Chunnakam, Jaffna, 2nd February 1936, Sunday. { No. 29

அகில இலங்கை

## ஆதாய ஏலச்சீட்டுக் கம்பனி

### THE LANKA BENEFIT CO.,

GRAND BAZAAR, VANNARPONNAI, JAFFNA.

தலைமைக் காரியாலயம் :

பெரியகடைத்தெரு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

கிளைக் காரியாலயங்கள்:

சங்கானை, காங்கேசன்துறை, சுன்னாகம்

பின்வரும் வகுப்புகள் இப்போ அமைக்கப்படுகின்றன

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| A | 5-ம் வகு. | 1000/- ரூபா | 40/- ரூபா | வீதம் | 25 | மாதத்திற்கு |
| B | 8-ம் | ,, 500/- | ,, 20/- | ,, | ,, 25 | ,, |
| C | 14-ம் | ,, 250/- | ,, 10/- | ,, | ,, 25 | ,, |
| D | 7-ம் | ,, 125/- | ,, 5/- | ,, | ,, 25 | ,, |
| BMC | 2-ம் | ,, 250/- | ,, 10/- | ,, | ,, 12½ | ,, |
| WC | 3-ம் | ,, 250/- | ,, 5/- | ,, | ,, 50 | கிழமைகட்கு |
| WD | 4 | ,, 125/- | ,, 5/- | ,, | ,, 25 | ,, |
| தினசரி | 6&7ம் | ,, 100/- | ,, 1/- | ,, | ,, | |

வேண்டிய விபரங்கட்குக் கீழ்க்காணும்விலாசத்திற்கு எழுதி அறிக.

மனேஜர், அகில இலங்கை ஆதாய ஏலச்சீட்டுக் கம்பனி
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(175) 5-8-34

விலை நிதானம்! நயம் சரக்கு!

## எங்கே?

யாழ்ப்பாணம் பெரியகடை
கெங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்

### மு குமாரசாமிப்பிள்ளை கடையில்

நெல், அரிசி முதலிய தானியவகைகளும்,
கயிற்றுவகைகளும், நூல், வாளியும்
பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்
விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.
கொழும்பு.- வெள்ளவத்தை 2, 4, 6, 8, 10, 20-ம்
நம்பர் நூல் தொகையாகவும் சில்லறையாகவும்
யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம்
தொகையாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

மு. குமாரசாமிப்பிள்ளை,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

(22) 19-2-34

## SRI LANKA BOOK DEPOT

## ஸ்ரீ லங்கா புத்தகசாலை

வண்ணார்பண்ணை

ஐயன்மீர்!

யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை, கதிரேசன் கோவிலுக்கு வடக்குப்பக்கமாகவிருக்கும் ஸ்ரீ லங்கா புத்தகசாலையில் பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான தமிழ், இங்கிலீஷ் புத்தகங்களும், ஆசிரிய, பாலபண்டித, பண்டித வகுப்புகளுக்குரிய இலக்கிய, இலக்கண, இதிகாச, புராண நூல்களும், வேறு இலங்கை இந்திய பதிப்புகளும்

பென்சில், பேனா முதலியனவும், கோப்பி (Ex. Copy) கணக்குப்புஸ்தகங்கள், அச்சுக்கூடங்களுக்குத் தேவையான எல்லாவகையான கடதாசிகளும் சகாயமான விலைக்கு தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்

ஒருமுறை பரீட்சித்துப்பாருங்கள்

அதிபர், ஸ்ரீலங்கா புத்தகசாலை,
வண்ணார்பண்ணை.

(36) 6-10-35

## லங்கா பினான்ஸ் கம்பெனி

### The Lanka Finance Company

Stanley Street, Grand Bazaar
JAFFNA

காரியாலயம் :

ஸ்ரான்லி ஸ்றீட், பெரியகடை,
யாழ்ப்பாணம்.

பின்வரும் வகுப்புச்சீட்டுகள் இப்போது அமைக்கப்படுகின்றன :


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| A | வகு. | ரூ. 1000- | ரூ. 40- | விதம் | 25 | மாதத்திற்கு |
| B | ,, | ,, 500- | ,, 20- | ,, | 25 | ,, |
| C | ,, | ,, 250- | ,, 10- | ,, | 25 | ,, |
| D | ,, | ,, 125- | ,, 5- | ,, | 25 | ,, |
| E | ,, | ,, 75- | ,, 3- | ,, | 25 | ,, |
| F | ,, | ,, 100- | ,, 10- | ,, | 10 | ,, |
| FNC | ,, | ,, 250- | ,, 10- | ,, | 12½ | ,, |
| WC | ,, | ,, 250- | ,, 5- | ,, | 50 | கிழமைகட்கு |
| WD | ,, | ,, 125- | ,, 5- | ,, | 25 | ,, |
| தினசரி B1&2 | ,, | ,, 100- | ,, 1- | ,, | | |

கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதி
வேண்டிய விபரங்கள் அறிந்துகொள்ளலாம்.

மனேஜர், லங்கா பினான்ஸ் கம்பெனி,
ஸ்ரான்லி ஸ்றீற், யாழ்ப்பாணம்.

(33) 22-9-35.

## பவுண்மார்க் ஓடுகள்



இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பேலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும் படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதெனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமுமுள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும் போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருங்கள். பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.

இங்ஙனம்

### சி. வீரகத்திப்பிள்ளை அன்டு சன்ஸ்

(இவை விற்குமிடங்கள்)

யாழ்ப்பாணம் { பெரியகடை, பறங்கித்தெரு } பருத்தித்துறை .... வல்வெட்டித்துறை, காங்கேயன்துறை — சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்

காரைநகர் .... .... சி. க. ஆறுமுகம்பிள்ளை

ஊர்காவற்றுறை .... பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ்

(103) 23-9-34.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு "திருமகள் நிலைய" த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் "தலையாட்டி"யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1936-ம் ஸு பிப்ரவரி மீ 2-ந் உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.